எனக்குத் தெரிந்ததெல்லாம்
உண்மை சாவதில்லை
மூர்க்கர்கள் அதனை அடிமைகொள்ள முடியாது
என்பதுதான்

எனக்குத் தெரிந்ததெல்லாம்
எனது நாட்டில் ஆக்கிரமிப்பாளா
நிலைத்திருந்ததில்லை என்பதுதான்.

யாத்ரா 13

கவிதைகளுக்கான இதழ் - Tamil Poetry journal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40/=

அட்டைப் படம்

நஜாபில் யுத்தக் கைதிகளை ஒன்று சேர்க்கும் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈராக்கியர் ஒருவர் தனது 4 வயதுப் புதல்வனை அணைத்து வருடும் மனதை நெகிழ வைக்கும் இக்காட்சியைப் படம் பிடித்தவர் அசோசியேற்றற் பிரஸ்ஸைச் சேர்ந்த பிரஞ்சுப் புகைப்படப் பிடிப்பாளரான Jean-Marc Bouju.

31.03.2003 அன்று பிடிக்கப்பட்ட இப்புகைப்படம் 47வது வருடாந்த சர்வதேசப் புகைப்படக் கண்காட்சியில் 2003ம் ஆண்டுக்கான சிறந்த புகைப்படத்துக்கான பரிசினை வென்றது.

'யாத்ரா'

கிடைக்குமிடங்கள்

இஸ்லாமிக் புக் ஹவுஸ்
77, தெமடகொட றோட்
கொழும்பு - 09

பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு
கொழும்பு - 11

ஹாதி புக் டிப்போ
79, தெமடகொட றோட்
கொழும்பு - 09

புக் வேர்ள்ட்
41, பிரதான வீதி
கல்முனை

ஹனிபா ஹோட்டல்
புத்தக நிலையம்
453, பிரதான வீதி
கல்முனை

சக்தி நூல் நிலையம்
மட்டக்களப்பு

நூரி புத்தகசாலை
காத்தான் குடி

எஸ்.எம்.பி. கொம்யுனிகேஷன்
பிரதான வீதி
ஓட்டமாவடி

கோல் மாஸ்டர் கொம்யுனிகேஷன்
எம்.பி.சி.எஸ் றோட்
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் இருப்பதெல்லாம்...

எனது தோள்களில்
துப்பாக்கியொன்றை
ஒருபோதும் நான் சுமந்ததில்லை
அதன் விசையை
ஒருபோதும் அழுத்தியதுமில்லை

என்னிடம் இருப்பதெல்லாம்
ஒரு புல்லாங்குழலின் இசை
எனது கனவுகளை வரைவதற்கான
ஒரு தூரிகை
ஒரு மைக் குப்பி என்பனவே

என்னிடம் இருப்பதெல்லாம்
அசையாத நம்பிக்கையும்
துயருற்ற எனது மக்களுக்கான
காதலுமே!

தௌஃபீக் ஸையியாத்

யாத்ரா

புத்தாயிரத்தில் இலங்கையின்
முதல் தமிழ்க் கவிதை இதழ்

ஜனவரி – ஏப்ரல் 2004

தனிச்சுற்றுக்கு மாத்திரம் - For private circulation only

படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்பாளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்தல்

பாய்ந்து கொள்ள முடியுமெனில்
ஒரே மூச்சில்-
தியவன்னா ஓடைக்கப்பால்...

கரை சேர்ந்த கதைதான்:
நாலா புறமும்
வாழ்க்கை முழுதும்
என்ன சுகமான வாழ்க்கை...!
சுவர்க்கமா?
அது எதற்கு?
இதற்கு ஈடாகுமா...?

அறிவு தெரிந்த நாள் முதல்
ஆடிய ஆட்டமெல்லாம்
இதற்குத்தானே!

கொடுத்தது-
பத்துப் பதினைந்து பேர்ச்சஸ்
(அரச காணி)
உடுத்தியது-
வெள்ளைச் சாரம், பெனியன்



இலங்கைப் பாராளுமன்றம் தியவன்னா
ஓயாவுக்கு நடுவில் அமைந்துள்ளது

சிங்களத்தில்:
சமந்த இலேபெரும
தமிழில்:
இப்னு அஸுமத்

கூறியது-
மொழியைப் பற்றி
எழுதியது-
நாட்டைப் பற்றி
பருக்கியது-
தர்மத்தைப் பற்றி

பாய்ந்து கொள்ள முடியுமானால்
தியவன்னா ஓடைக்கப்பால்....

எனக்குப் பிறகு
எனது மனைவி...
அதன் பிறகு பெரிய மகள்...
அதன் பிறகு இளையவள்...
பரம்பரை பரம்பரையாய்
உலகு அழியும் வரை
செழிப்புடன் வாழ...

பாய்ந்து கொள்ள முடியுமானால்
தியவன்னா ஓடைக்கப்பால்...!

காற்றின் மௌனம்

மௌனமான காற்று
ஒரு புயலைச் சுமந்துவரக்
கூடுமென
எப்போது அவர்கள் நம்புவர்

வாய்மையை இழிவு செய்து
மௌனத்தில் கரையும்
காலங்களில்
நமது துயர்கள்
அதன் விதைகளாகும்

அமைதிப் பிரகடனத்தின் போது
நமது கண்ணீர் ஊற்றெடுக்கும்

இரு சோதர சடலங்களின்
எரிந்த சாம்பரிலிருந்து
அவர்கள் மீண்டெழுவார்கள்

வளர்பிறைக் கொடி நிழலில்
தாய்மார்கள் இளைப்பாறுவர்

உறக்கங் கலையும் தாலாட்டை
பிள்ளைகளினிப் பாடக் கேட்பர்

கல்லறைகள் வெடித்து
கரங்கள் மேலெழும் அந்நாட்களில்
எமது இளைஞர்கள்
சத்தியம் செய்வார்கள்

காற்றின் மௌனம் சாட்சியாகும்

20.08.2003

ஏ.ஜி.எம்.ஸதக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமா யூஷிஜும்

பாரசீகக் கவிதையை நவீன மயப்படுத்தும் பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டவர்களில் நிமா யூஷிஜ் (1896 - 1959) முக்கியமானவர். பாரசீகக் கவிதையில் புதிய பார்வையைத் தோற்றுவிப்பதற்குப் புரட்சிகரமாக முயன்றவர். உயர் பள்ளி மாணவராயிருக்கும் போது எழுதத் தொடங்கிய நிமாவின் கவிதை முயற்சிகளுக்கு உற்சாகமூட்டி உதவியவர், இவரது ஆசிரியரும் தன்னுணர்ச்சிக் கவிஞரும் செவ்விலக்கிய நடையில மனோரதக் கற்பனை உரை வீச்சுக்களைக் கலந்து காதல் கவிதைகளை எழுதியவருமான நிஸாம் வஃபா (1883 - 1960).

கஸ்பியன் கடலருகே மசாந்தரான் மாகாணத்தைச் சேர்ந்த யூஷ் என்ற கிராமத்தில் பன்னிரண்டாண்டு வரை பால பருவத்தைக் கழித்த நிமாவின் தந்தை ஒரு விவசாயி. 1946ல் ஈரானிய எழுத்தாளர்களது முதலாவது சம்மேளனத்தில் உரையாற்றும் போது நிமா யூஷிஜ் கூறினார்:- " எனது பால்யம் இடையர்கள், குதிரை மேய்ப்பவர்கள் மத்தியில் கழிந்தது. இவர்கள் மேய்ச்சல் நிலங்களைத் தேடியலைந்த நாடோடிகள். மலை அடிவாரங்களில் தீ வளர்த்து அதனைச் சுற்றி அமர்ந்திருப்பர். இவர்களது முரட்டுச் சண்டைகள், சலிப்பூட்டும் அறியாமைச் சூழலில் இவர்களின் எளிய கேளிக்கைகள் - இவையன்றி குழந்தைப் பருவ நினைவுகள் வேறில்லை. நான் பிறந்த கிராமத்து அக்ஹூந் (மதபோதகரும் ஆசிரியரும்) எனக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தந்தார். ஒழுங்கைகளினூடு என்னை விரட்டிக் கொண்டு வருவார். எனது சிறு பாதங்களை முள் மரங்களில் கட்டி வைப்பார். நீண்ட பிரம்புகளால் விளாசுவார். விவசாயிகள் உறவினர்க்கு எழுதிய கடிதங்களைச் சேகரித்து, ஒட்டி, ஒரு சுருளாக வைத்திருந்தார். அச்சுருள் முழுவதையும் நான் மனனஞ் செய்ய வேண்டியிருந்தது."

நிமாவின் தந்தை ஒரு பெரும் புளுகர். குதிரைச் சவாரி, வேட்டை, தார் (பாரசீக நரம்பு வாத்தியக் கருவி) வாசித்தல் முதலியவற்றில் வல்லவர். தந்தையின் பெருமைக் குணம் நிமாவையும் பீடித்திருந்தது. நிமாவின் தாயாரோ மென்மையான சுபாவம் கொண்டவர். படித்த குடும்பமொன்றில் பிறந்து வளர்ந்தவர். நிஜாமியின் 'ஹஃப்த் பெய்க்கார்' (ஏழு அழகிகள்) போன்ற செவ்விலக்கியக் கதைகளையும் ஹாஃபிஸின் கஸல்களையும் அறிந்திருந்தார். அவற்றை நிமாவுக்குச் சொல்லிக் கொடுத்தார். இவ்வாறு நிஜாமி மீதும் ஹாஃபிஸ் மீதும் அவருக்கேற்பட்ட கவர்ச்சி அவரது ஆயுள் பரியந்தம் நீடித்தது.

பாரசீகக் கவிதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வியல் கவிதையின் பாவினங்களில் பரிசோதனை மேற்கொண்ட நிமா, நிஜாமியை நகல் செய்து நீண்ட, நாடகப் பாணிக் கவிதையை எழுதும் பிரயத்தனத்தில் சுமார் 1500 ஈரடிப் பாடல்கள் யாத்தார். இதன் விளைவே 'கால் இ - யே செக்ரிம்' (செக்ரிம் கோட்டை). உருவாக்கத்திலும் செய்யுளமைப்பிலும் ஒரு கற்றுக் குட்டியின் பலவீனங்கள் மலிந்த படைப்பு இது. அப்துர் ரஹ்மான் ஜாமி (1414 - 1492), ஜலாலுத்தீன் ரூமி முதலானோரின் நீதிக கதைகள், உமர் கையாமின் 'ருபாயாத்' போல எழுதும் முயற்சிகளும் பக்குவமற்ற பயிற்சி என்ற நிலையைத் தாண்டிச் செல்ல வில்லை. இவரது சுமார் 600 ருபாயாத்களில் ஒன்று மட்டுமே அடிக்கடி எடுத்தாளப் படுகிறது. அதுவும் செவ்வியலிலிருந்து பாரசீகக் கவிதையை விடுவித்து, நவீன மயப்படுத்தும் தமது புது முயற்சிகள் பற்றிய சுய அவதானத்தைக் கூறுவது.

தடுத்து நின்றன. ஒரேயொரு விதி விலக்கு, 'கனவு சஞ்சாரம்' (அஃப்சானே) என அவர் எழுதிய நாடகப் பாங்கான நெடுங் கவிதை. இது 'ஃபீனிக்ஸ்' பிறப்பதற்கு பதினைந்து ஆண்டுகள் முந்தியது. எனினும் இதுவே அவரது மிகச் சிறந்த கவிதை என இன்னுஞ் சில விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஆயினும் இக்கவிதை புதிய வடிவம் கொண்டதல்ல. இது அபூர்வமாகக் கையாளப்பட்ட அரிய செவ்வியல் யாப்பு வடிவொன்றில் சம அளவு அடிகள் கொண்ட ஐந்தடிப் பாடல்களால் ஆனது. இரண்டாவது, நான்காவது அடிகளில் எதுகை வரும். எனினும் இதன் கருப் பொருள் காதலனுக்கும் கனவுக் காட்சிக் குமிடையே ஒரு மனோரதிய உரையாடல். இக்கவிதையில் கவிஞர் தனது காதல் அனுபவங்களை வெளியிடுவதோடு, வாழ்க்கை பற்றிய கருத்தியல் விளக்க மொன்றை வழங்குகின்றார்.

தமிழில் : ஸஹீன்

"மக்களை மோதலொன்றி
விழுத்து விட்டதென் கவிதை
நல்லது கெட்டது புரியாமல்
பெருங் குழப்பம்
கடியெறும்புக் கூட்டத்தைக்
கலைத்து விட்ட பின்னரிங்கு
குந்தியொரு மூலையிலே
கூத்துப் பார்க்கிறேன் நான்"

1937ல் தனது முதலாவது குறியீட்டுக் கவிதையை எழுதும் வரை நிமாவின் இப்பரீட்சார்த்த முயற்சிகள் தொடர்ந்தன. சில ஃபிரெஞ்சுக் குறியீட்டியலாளர் களிடமிருந்து கற்றவைகளை 'ஃபீனிக்ஸ்' என்ற தமது முதலாவது குறியீட்டுக் கவிதையில் வெற்றிகரமாகக் கையாண்டிருந்தார் நிமா. அதுவரை செவ்வியல் வடிவங்கள் அவர் மீது செலுத்திய ஆதிக்கம், கவிதையின் முற்றிலும் புதிய பிராந்தியத்தினுள் அவரை நுழைய விடாமல்

"கனவு சஞ்சாரம்" வெளிவந்த காலப் பகுதியில் (1921) அது பாரசீகக் கவிதையில் 'நவீனமானது' எனப் போற்றத் தக்க புதுமையைக் கொண்டிருந்தது. ஹாஃபிஸின் ஆன்மீகத் தன்னுணர்ச்சி, நிஜாமியின் வாழ்க்கை பற்றிய நாடக நோக்கு, உமர் கையாமின் பாதிப் புலனின்ப - பாதி விதி வசப் போக்கு, சுயம் பற்றி, சமூக நீதி பற்றி ஃபிரெஞ்சு ரொமாண்டிஸ்டுகளது விசாரணை முதலியனவற்றுடன் உருவங்களாலும் குறியீடுகளாலும் சிம்பொலிஸ்டுகளது குறிப்புணர்த்தல் - இவற்றின் கலவையே "கனவு சஞ்சாரம்" என்ற படைப்பு. இவை யாவும் எளிய தெளிவான மொழியில் பிரதிபிம்பங்களாய்த் தோற்றங் கொள்கின்றன. நிமா யூஷிஜின் கவியாளுமையை உணர்த்த இதுவே போதுமானதாய் இருந்திருக்கக் கூடும். எனினும் அவர் அத்துடன் ஓய்ந்து விடவில்லை. பாரசீகக் கவிதைக்கு முழுமையானதோர் புது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளத்தை வழங்க வேண்டுமென் பதே அவரது பேரவா. இதுவே, ஃபிரெஞ்சு சிம்பொலிஸ்டுகளிடமிருந்து விசேடமாக, பெல்ஜியன் எமிலி வெர்ஹாரென் (1855 - 1916) னிடமிருந்து கற்றுத் தேறுமளவுக்கு அவரை இட்டுச் சென்றது.

வெர்ஹாரென் பிரகடனஞ் செய்திருந்தார். " பழையவர்கள் யாப்பதிகாரத்துக்கும் இலக்கணத்துக்குமே சேவகம் புரிகின்றனர். அதே வேளை புதியவர்கள் (இளம் பெல்ஜியன் சிம்பொலிஸ்டுகள்) தம்மிடமே தம் வடிவங்களைத் தேடுகின்றனர். தம் விதியைத் தாமே வகுத்துக் கொள்கின்றனர். தம் சொந்த சிந்தனை, உணர்ச்சிப் போக்குகளிலிருந்து கிளம்பும் தனி நபர் விதிகளுக்கே அவர்கள் அடிபணிகின்றனர்." அவரது சொல்லகராதி பேச்சு வழக்குகளால் சிலுப்பிக் கொண்டது. பல சந்தர்ப்பங்களில் பெயர்ச் சொற்களையே பெயருரிச் சொற்களாகவும் - வினையுரிச் சொற்களைப் பெயர்ச் சொற்களாகவும் உபயோகிக்கின்றார். தம் குறைபாடுகளையே சீரான தாய் வளர்த்துக் கொண்டாரெனச் சில விமர்சகர்கள் குற்றஞ் சாட்டினர். ஃபிரெஞ்சு மொழி தெரியாதவரெனக் குறை கூறினர். இலக்கணத்தையும் சொற்புணர்ச்சி விதிகளையும் பரிகாசஞ் செய்கிறார் எனச் சுட்டிக் காட்டினர். கவிதையின் கருப்பொருள் முழுவதூடும் முதல் நவின்றதைத் திருப்பிக் கூறல் அவர் கவிதைகளில் மேலோங்கி நின்ற பண்புகளில் ஒன்றாகும். ஒலி நயத்துக்கு வலுவூட்டும் என உணர்ந்த போது மட்டும் எதுகையைக் கையாண்டார். இயற்கையின் இருண்ட அம்சங்கள் மீது அவர் கவனம் பதிந்தது. இவரது அநேக நூல் தலைப்புகளில் 'சொய்ர்' (இரவு) என்ற சொல் இடைவிடாமல் இடம் பெறுகிறது.

இவை யாவும் வெர்ஹாரென் கவிதையின் இயல்பான, தனித்த பண்புகளாயிருக்க, நிமா யூஷிஜ் தனது கவிதைகளை நவீன மயப்படுத்துதற்கு இவை அடிப்படைகளாகின. நிமாவின் தாய் மொழி 'தபாரி'. இது பாரசீகத்தின் வட்டார மொழிகளில் ஒன்று. பல்வேறு மாகாணங்களில் பேச்சு மொழியாக மட்டுமே உள்ளது. நிமா தனது கவிதையில் தரமான பாரசீக மொழி மீது இப்பேச்சு மொழியின் தாக்கத்தை வேண்டுமென்றே அனுமதிக்கின்றார். செய்யுள் யாப்பதில் இவருக்கிருந்த பலவீனத்தை தனது கவிதைக் கலையில் ஒரு சீரிய பண்பாகவே பேணுகின்றார். தேவையற்ற இருண்மைகளுக்கு இடமளிக்குமளவுக்கு சொல்லொழுங்கைக் குழப்பவும் சிதைக்கவும் செய்கிறார். வழக்கிழந்து போன சொற்களைச் செவ்விலக்கியத்திலிருந்து எடுத்து பேச்சு மொழியுடன் பிரயோகிக்கின்றார். பறவைகள், மரங்கள், பூக்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்கு உள்ளூர்ப் பெயர்களை எடுத்தாள்வது அவரைப் பொறுத்த வரையில் நடைநேர்த்திக்கு உதவியது.

நிமா யூஷிஜ் மீது வெர்ஹாரென்னுடைய ஆழ்ந்த செல்வாக்கின் அம்சங்களில் ஒன்று பாடு பொருள் குறித்ததாகும். வெர்ஹாரென் போன்று நிமாவும் தமது கவிதைகள் பலவற்றில் இரவுப் படிமத்தை உபயோகிக்கின்றார். ஈரானில் பஹ்லவி அரச வம்சத்தின் ஸ்தாபகரான ரேஸா ஷாவின் புதிய சர்வாதிகாரம் நிறுவப் பட்ட காலகட்டத்தில் வாழ்ந்த நிமாவுக்கு ''இரவு'' என்பது சமூகத்தின் இருண்ட பகுதியைக் குறிப்பதாக - ஒடுக்கு முறையின், அநீதியின், வறுமையின், அறியாமையின் குறியீடாக - மாறிற்று. இரவுக்கு நேர் மாற்றமாக அருணோதயம், காலைப் பொழுது, பகல், விடியலின் வரவுணர்த்தும் சேவல், அதன் கூவல் முதலியன மக்களை அவலத்திலிருந்து, ஆழ்ந்த உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பி சுதந்திரத்தின் ஒளியில் கண் விழிக்கச் செய்வதாகும். நிமாவின் 'இரவு', 'காலை' போன்ற பிரயோகங்கள் அதே குறியீட்டர்த்தத்தில் இளங் கவிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டு 'நாளை' (எழுச்சியின் தினம், சுதந்திர நன்னாள்), 'இரவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம்' (அரசு, அதன் இராணுவம், பொலிஸ்), 'இரவின் காவலர்' (உசார் நிலையிலுள்ள எதிர்ச் சக்திகள்), 'இரவுப் பட்சி', 'வானம்பாடி' (அமைதி காக்கும் அறிவு ஜீவிகள்) முதலிய புதிய குறியீடு களால் விரிவாக்கம் கண்டுள்ளன.

நிமா யூஷிஜுடைய கவிதையின் உள்ளடக்கத்தை விட, உருவத்திலும் நடையிலும் அவர் கையாண்ட புதுமை களே அவர் தம் கால இளங் கவிஞர்கள் மத்தியில் சிரேஷ்ட கவியாகவும் குருவாகவும் மிளிரக் காரணம் எனலாம். கவிப் பொருள் மீது யாப்பின் அதிகாரங் காரணமாக உண்டான தேக்கத்திலிருந்து பாரசீகக் கவிதையை விடுவிக்க, நவ செவ்வியல் வாதிகளும் மறுமலர்ச்சிக் காரரும் மற்றோரும் முடியாமல் திண்டாடிய போது அரங்கில் பிரவேசித் தார் நிமா. பாரசீகச் செய்யுளில் அநேக சீர்கள் உண்டு. அவை உடைக்கப்படு வதற்கும் வெவ்வேறு அளவினதான அடிகளைக் கொண்டிருப்பதற்கும் சாத்தி யப்பாடுகள் உண்டு. எனினும் செவ்வியல் கவிதை இதை அனுமதிப்பதில்லை. மேலும், பல்வேறு வடிவங்களில் ஏலவே நிர்ணயிக்கப்பட்ட எதுகையமைப்பு, கவிதையின் ஒலி நயத்தில் புதுமை புகுத்து தற்குத் தடையாகவிருந்தது. கவிதையில் பொருள் நவிற்சிக்கான அலகு 'பைத்' - அதாவது சம அளவினதான ஈரடிகள், இவ்வடிவம் அனுமதித்த எதுகையைக் கொண்டிருக்கும். எனவே முழுமையான பொருள் நவிற்சி ஒரு 'பைத்'தினுள் அடங்குவதாயிருத்தல் வேண்டும். வேறு வார்த்தையில் சொல்வதாயின் எந்தவொரு பா வடிவத்தினதும் பாடல் (stanza) 'பைத்'தாகவே விளங்கிற்று. பாரசீக யாப்பின் இவ்விலங்குகளை உடைப்பதற்கு புதுக் கவிதையாலேயே முடியுமாக விருந்தது.

ஃபிரெஞ்சு சிம்பொலிஸ்டுகளுடைய, விசேடமாக வெர்ஹாரென்னுடைய சுயேச்சா கவிதை வடிவம் பற்றிய தனது புரிதலை பாரசீகக் கவி மொழிக்கு இசைவாக்கம் செய்ததன் மூலம் நிமா யூஷிஜால் இப்புரட்சியைச் சாதிக்க முடிந்தது. பாடல் அடிகள் தொடர் களாகவும் நவிற்சிகளாகவும் மாறின. 'பைத்'துகள் (stanzas) பாடலொன்றின் பகுதிகளாயின. எதுகை கவிஞனால் தீர்மானிக்கப்பட்டது. இச்சாத்தியப்பாடு கள் யாவும் கவிதையின் சுவாதீனமான கட்டமைப்புக்கு இட்டுச் சென்றதோடு பாரசீகக் கவிதைக்குப் புதிய பரிமாணம் வழங்கிற்று.

இப்போது கவிதையொன்று உதாரணத்துக்கு ஒரு கஸல் பாடல், ஒன்றோடு ஒன்று சம்பந்தமற்ற, தொடர் பற்ற சிந்தனைகளால், கருத்துக்களால் யாக்கப்பட்டதாய் குறிப்பிட்டவொரு வடிவத்தின் ஒத்த அளவினதான அடிக ளாலும் நிர்ணயமான எதுகைகளாலும் இணைக்கப்பட்டாய் இருத்தல் முடியாது. நிமா பாணி நவீன யாப்பில் கவிதை யொன்றின் பொருள் அதன் தொடர்ச்சி க்கான உரிமையையும் இணைவையும் அதன் பகுதிகளுக்குத் தேவையான ஒட்டுரிமையையும் பெறுகிறது. இவ் விதமாய் கவிதையொன்று அதன் பொரு ளடக்கத்துக்கு ஏற்ப ஒரு சில அடிகளில் முற்றுப் பெறுவதாகவும் மற்றொன்று பக்கக் கணக்கான அடிகளில் நீட்சி பெறுவதாக வும் பல்வேறு அளவினைக் கொண்ட பகுதிகளாகவும் அமைய முடியும்.

இவ்வாறு பாரசீகக் கவிதை அதன் சுவாதீனத்தைத் தக்க வைத்துக் கொண்ட அதே வேளை ஓராயிரம் ஆண்டுகளின் பின் எல்லையற்ற சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கிற்று. இதுவே நிமா யூஷிஜின் நிஜ சாதனை... நிமா நவீன பாரசீகக் கவிதையின் நிறுவகராகவும் பிதாவாகவும் போற்றப் படுவதன் காரணம்... □

நன்றி:
ஹியுமனிட்டீஸ் இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'யாத்ரா' கவிதைப் போட்டியில்
ஆறாம் இடம் பெற்ற கவிதை

மௌனத்தின் சப்தங்கள்

புதுவை ரா.ரஜினி

மௌனத்தின் குகைகளில்
என் கவனம் பதிந்திருக்கும்

சடசடத்து ஓடும் அருவி நீரின்
ஓசைகளுக்கு அப்பாற்பட்டும்
சகஜமாய்ப் பேசிச் சிரிக்கும்
கூட்டத்திலின்றும்
ஆர்ப்பரிக்கும் அலையாட்டங்களினின்றும்
துரோகச் சாயல் மனித முகங்களினின்றும்
வறுமையோ திடீர்ச் சந்தோஷமோ
அதி தீவிர காதலின் உணர்வுகள்
பிறப்பினிமை இறப்புக் கொடுமை
ஒரு கொத்துப் பூக்களின் வண்ணங்கள்
இவற்றையெல்லாம் மீறி

மௌனமும் அதன் சப்தமும்
என் கவனமாய் இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. வேறொரு குழு ஆட்சியைக் கைப்பற்றினாலும் கூட நாட்டின் தலையெழுத்தென்னவோ கயிற்றில்தான் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இனப் பிரச்சினையை வைத்துத்தான் இந்த நாட்டின் பெரும்பான்மை அரசியல்வாதிகள் நீண்ட காலமாக அரசியல் பிழைப்பு நடத்தி வருகிறார்கள்.

நாட்டைச் சிறுபான்மையினருக்குக் கொடுத்து விடப் பார்க்கிறார்கள் என்று பரஸ்பரம் குற்றஞ் சாட்டியபடி சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஒரு பழைய புண்ணாக வைத்து அரசியல் நடத்துகின்ற கேவலம் இந்த நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பான்மைக் கட்சிகளின் இந்த அரசியல் சூதாட்டத்தைத் தெளிவுற விளங்கிக் கொள்ள முடிந்த ஒரு பொதுமகனால் இவர்களது நோக்கம் நாட்டுப் பற்று அல்ல என்பதைப் புரிந்து கொள்வது ஒன்றும் சிரமமான காரியம் இல்லை.

தங்களது சுயலாபங்களுக்கான இந்த சித்து விளையாட்டுக்கள் நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் எதிர்காலத்தை அதல பாதாளத்தை நோக்கி எடுத்துச் செல்லவே வழி செய்யும்.

யார் எக்கேடு கெட்டால் என்ன, நாம் இன்றைய ராஜாக்களாக இருந்து விட்டுப் போவோம் என்று எண்ணிக் கொண்டிருப்போருக்கு எந்தப் பாஷையில் பேசினாலும் புரியப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுயுகத்தின் வழியே போன ஒரு தேசாந்திரி

மத்தேஜ் போர் (Matej Bor)
ஸ்லோவேனியக் கவிஞர்
(முன்னாள் யூகோஸ்லாவியா)
தமிழில்:
சி.சிவசேகரம்

அணு யுகத்தின் வழியே ஒரு தேசாந்திரி போனான்
அணுயுகம் கிடந்த இடத்தை
உயரத்தினின்று கீழே பார்த்தான்
எப்புறத்தும்
கண்ணுக்கெட்டிய தொலைவு வரை
கொங்கிறீற்றும் இரும்பும்
எல்லா விதமான வடிவங்களும்
காலத்துக்குக் குறுக்காக
நியோன் விளக்குகளினின்று
நீண்ட நிலை பெயராத நிழல்களை விழுத்தின
பார்த்த தேசாந்திரியின் மனத்தில்
இத்தனைக்கும் நடுவே
தனது இதயம் எந்தளவுக்குத் தேவையற்றுப் போயிற்று
என்ற நினைவு எழ
ஒரு துளிக் கண்ணீர் சிந்தினான்
அங்கு நின்ற ஒரு சிறு பறவை அதை அருந்தியது
அருந்திய பின் 'உன் கண்ணீர் கசக்கிறது' என்றது
'தெரியும்' என்றான்
'ஏன் கசக்கிறது?' என்றது
தனது வழமையான 'தெரியாது' என்ற விடையைக்
கூறுமுன்னரே பறவை இறந்து விட்டது
அவன் அதைக் கையிலெடுத்துப்
புதைப்பதற்காக
அணு யுகம் இருந்த இடத்துக்குக் கொண்டு சென்றான்
ஆனாலும் வீணுக்கே:
எப்புறத்தும் கொங்கிறீற்றும் இரும்பும்
இரும்பும் கொங்கிறீற்றும்
பறவைகளையும் பூக்களையும் பெற்றுத் தருவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பூவை நாட்டி வைக்கத் தக்கதாக
ஒரு பறவையின் புதைகுழிக்குப்
போதியளவு மண் இல்லை

□

அணுயுகத்தின் வழியே ஒரு தேசாந்திரி போனான்
அவனைச் சந்தித்த இன்னொரு தேசாந்திரி
'எங்கே போகிறாய்' எனக் கேட்டான்
'தெரியாது'
'எனக்குந்தான்'
'என்னுடன் வா... எங்கேனும் போய்ச் சேருவோம்'
இருவரும் ஒன்றாகப் போனார்கள்
வழியென்று தோன்றிய ஒன்றை அறிந்த மகிழ்வுடன்
மூன்றாமவன் ஒருவன்
அவர்கள் எங்கே போகிறார்களெனக் கேளாமலே
அவர்களுடன் இணைந்தான்
இப்படி நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, பத்தாவது
ஆயிரமாவது, இலட்சமாவது ஆள்வரை... இவ்வாறே
அப்போது முதலாமவன் இரண்டாமவனிடம்
'இவர்களெல்லாம் எங்கே போகிறார்கள்?' எனக் கேட்டான்
'அவர்கள் நம்மைப் பின் தொடர்கிறார்கள்'
'நாமெங்கே போகிறோம் என்று அவர்கட்குத் தெரியுமா?'
'இல்லை தெரியாது'
'நாம் அவர்கட்குச் சொல்லியாக வேண்டும்'
'எக்காரணங் கொண்டும் வேண்டாம்
சொன்னால் நம்மைக் கொன்று விடுவார்கள்'
அப்படியானால் நாங்கள் எங்கள் எங்கள் வழி பிரிந்து போவோம்
அவர்கள் பிரிந்து போனார்கள்
அவர்களுக்குப் பின்னால் எழுந்த ஒரு பெருங்குழப்பம்
முழு அணுயுகத்தையும் உலுக்கியது
இருவரும் போன வழிகளில் எது சரியானதென
அவர்கள் அனைவரும் சச்சரவிட்டனர்
இரத்தஞ் சிந்துவதினின்று தப்பிச் செல்வதற்காக
நமது தேசாந்திரி தொலைவு போகு முன்னமே
இரத்தம் பாயத் தொடங்கி விட்டது
இரத்தம் சிதறித் தெறியுண்டவாறு
காலத்தின் வெளி எல்லையில் நின்றபடி
அணுயுகத்தை அவன் பார்த்தான்
துயரமே அவனிடமிருந்து விலகிப் போகுமளவுக்கு
அவன் துயருடன் இருந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுர கே. எதிரிசூரிய

சிங்கள மொழிக் கவிஞர் திரு. அனுர கே. எதிரிசூரியவின் இரண்டு கவிதைகள் 'யாத்ரா' 2ம் மற்றும் 9ம் இதழ்களில் இடம் பெற்றிருந்தன. இப்னு அஸூமத் மொழிபெயர்த்திருந்த அந்த இரு கவிதைகளும்தாம் நம்மை அவர் நோக்கி இழுத்துச் சென்றன.

லேக் ஹவுஸில் கடமை புரியும் அனுரவை, தனது கடமை முடியும் தறுவாயில் பெற்றிருந்த குறுகிய கால லீவுக்கும் அவர் வீட்டை நோக்கிய பயணத்துக்காக ரயில் பிடிக்க வேண்டியிருந்த நேரத்துக்குமிடையிலான அவகாசத்துக்குள் கடந்த ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தின் சாயங்காலப் பொழுதில் 'யாத்ரா' ஆசிரியர், இப்னு அஸூமத், கவிஞர் ஆறுமுகம் ஆகிய மூவரும் சந்தித்து கலந்துரையாடினோம்.

ஒலிப்பதிவு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலை மொழிபெயர்த்து, ஒரு பேட்டி வடிவமாக நெறிப்படுத்தியவர்:

இப்னு அஸூமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்ரா: முதலில் உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தை 'யாத்ரா'வுக்கு வழங்குங்கள்.

அஹுர: நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே கேகாலை மாவட்டத்தில் உள்ள ரம்புக்கனை என்ற பகுதியில். பாடசாலை சென்றதும் அங்குதான். பாடசாலை செல்லும் நாட்களில் 'மக்கள் ஐக்கிய முன்னணி'யுடன் இணைந்த அரசியல் செயற்பாடுகளின்பால் ஈர்க்கப் பட்டிருந்தேன். அந்தக் காலத்தில் 'சமாஜவாதி சிஷ்ய பெரமுண' (சமூக வாத மாணவர் முன்னணி) வுடன் இணைந்து செயற்பட்ட காலத்தில் சின்னதாக ஒரு வெளியீடொன்றை நடாத்த நாங்கள் முயன்று வந்தோம். அதன் ஆசிரியர் பொறுப்பு என்னிடம்தான் ஒப்படைக்கப் பட்டிருந்தது. நான் அப்போது வணிகத்துறை தொடர்பான கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தேன்.

ஆசிரியர் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருந்த காரணத்தால் நான் கவிதைகள், சிறுகதைகள் போன்ற இலக்கியப் படைப்புகளைத் தேடி, அவற்றை வாசிக்கத் தொடங்கினேன். இன்று நான் இத்துறையில் இந்நிலையை அடைவதற்கு இதுதான் காரணமாக அமைந்தது எனலாம்.

மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால அனர்த்தங்கள் முடிவதற்கு முன்பதாக - அக்கட்சி தடை செய்யப்பட்டதன் பின்னரான (1983 - 1989) காலப் பகுதியில்தான் எனது இலக்கியத் துறை ஈடுபாடு ஏற்பட்டது எனலாம்.

யா: உங்களுடைய படைப்புகளுக்கான பின்னணி மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலுடன் தொடர்பு கொண்டதாக அமைந்ததா?

அஹுர: நான் நினைக்கின்ற வகையில் மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து நான் கற்றுக் கொண்டவைகள் உண்டு. அதாவது அந்தக் கால கட்டத்தில் பொதுவாக சிங்களக் கவிதைத் துறையைப் பொறுத்த மட்டில் கலை மக்களுக்காகவா? அல்லது கலைக்காகவா? என்று கருத்துவாதம் மேலோங்கி இருந்தது. மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து பெற்ற படிப்பினைகள் காரணமாக நாங்கள் கலை, கலைக்காகவே என்ற கருத்தின்பால் செல்லவில்லை. இக்கட்சியினர் கலையை மக்களுக்காகப் பயன் படுத்தினார்கள். அதற்காக 'மக்கள் கலைப் பேரவை' போன்ற அமைப்புகள் இருந்தன.

அக்கால கட்டத்தில் 'சீனுவ' (மணி) என்ற ஒரு சஞ்சிகையை இவர்கள் வெளியிட்டார்கள். அதில் தான் எனது முதலாவது கவிதை வெளிவந்தது. பின்னர் 'உல்பத்த' (ஊற்று) போன்ற வெளியீடுகளினூடாகவும் கலையானது மக்களுக்கானதே என்ற கருத்து முன் வைக்கப் பட்டுப் பரவலாக்கப்பட்டது. ஆக, இங்கிருந்துதான் கலை மக்களுக்கானது என்ற கருத்தை நான் பெற்றுக் கொண்டேன்.

யா: அக்காலத்தில் சிங்களக் கவிதைத் துறை சார்ந்த உங்களுடைய பிற தொடர்புகள் எவ்வாறு அமைந்திருந்தன?

அஹுர: நான் கவிதைகளை எழுத ஆரம்பித்த கால கட்டத்தின் போது பெரிய அளவில் அப்படியான தொடர்புகள் எதுவும் இருக்கவில்லை. நான் எழுதிய கவிதையொன்றை பத்திரிகை ஒன்றுக்கோ சஞ்சிகை ஒன்றுக்கோ அனுப்பும் போது அப் பத்திரிகை, சஞ்சிகைகளின் ஆசிரியர்களை நான் தெரிந்து வைத்திருக்கவில்லை. கலைப் பட்டதாரியான எனது சித்திக்கு நான் எழுதுகிற கவிதைகளைக் காட்டி அவரது ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டேன்.

அக்காலத்தில் தேசியப் பத்திரிகைகளில் நல்ல முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதாவது புதுமுகக் கவிஞர்களின் கவிதைகள் பிரசுரமாகும் போது வளர்ந்த கவிஞர்கள் அக் கவிதைகள் பற்றிய குறை நிறைகளை முன்வைத்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா: உங்களது ஆரம்ப காலக் கவிதைகள் எந்தெந்த ஊடகங்களில் வெளிவந்தன?

அனுர: பத்திரிகைகளில்தான் அதிகம் வெளிவந்தன. முதலாவது கவிதை 'சீனுவ' சஞ்சிகையில் வெளிவந்தது. அத்தோடு 'நவலிய', 'தருணி' போன்ற வாராந்தப் பத்திரிகைகளில் வெளிவந்தன. இதில் 'நவலிய' பத்திரிகையில்தான் அதிகமான கவிதைகள் வெளிவந்தன. அதற்குக் காரணம் எங்களது கருத்துக்கு இணங்கிய - அதாவது மக்கள்வாதக் கவிதைகளுக்கு - இப்பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்து வந்தது.

அதே வேளை 'யுக்திய', 'ராவய' போன்ற பத்திரிகைகள் மக்கள் விடுதலை முன்னணிக்குப் புறம்பான போக்கைக் கொண்டிருந்தன. அப்பத்திரிகைகள் எங்கள் மீதும் கூட அதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன என்பதனால் நான் அப்பத்திரிகைகளில் எழுதவில்லை. மக்கள் விடுதலை முன்னணிக்குள் எங்களிடையே பல்வேறு கருத்து முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்த பின்னர் அப்பத்திரிகைகளிலும் எழுதி வருகிறேன். (இப்போது 'யுக்திய' பத்திரிகை வெளிவருவதில்லை.)

யா: நீங்கள் எழுதுகின்ற கவிதைகளில் புதுக் கவிதைகள் அதிகமா? மரபு ரீதியான கவிதைகள் அதிகமா?

அனுர: அதிகமாகப் புதுக் கவிதைகளைத் தான் எழுதி வருகிறேன். இதற்கொரு காரணம் இருக்கிறது. அதாவது அக்கால கட்டத்தில் எங்களது மனதுகளில் கொழும்பு யுகக் கவிஞர்களது கவிதைகள்தான் இருந்து வந்தன. அதாவது பாடப் படுகின்றதான மரபுக் கவிதைகள். ஜி.பி.சேன நாயக்க போன்றவர்கள் இந்த மரபை உடைத்து வெளியே வந்து கவிதைகளைப் படைத்தனர். இதன்பால் நாங்கள் ஈர்க்கப் பட்டோம்.

நாங்கள் எண்ணுகின்ற கருத்தைக் கூற முற்படும் போது வெளி வேலியை - அதாவது இலக்கண மரபுகளைப் பேண முற்படுவதால் சிக்கித் கொள்ளும் நெருக்கடி, மிகுந்த பாதிப்பினை உண்டு பண்ணுகிறது. அன்று என்னுள் உதித்த இந்த எண்ணம் இன்றைக்கும் சரியானதுதானா? என்பது பற்றி என்னால் கூற முடியாது. ஆயினும் வெளி வேலியைப் பேணப் போய் அவசியமற்ற வார்த்தைகளை உபயோகிப்பதும், தாள லயத்தின் பின்னால் ஓடுவதும் என்றாகும் போது நாம் எண்ணிய கருத்தை முன் வைப்பதில் நெருக்கடிக்கு உள்ளாகிறோம். எனது முதல் கவிதைத் தொகுதியான 'நகரயட்ட ஆ முவத்திய' (நகரத்துக்கு வந்த பெண்மான்) வில் உள்ள சில கவிதைகள் கூட சந்த நயத்துடன் வந்த கவிதைகள்தான் என்ற போதிலும் அதனை நான் உடைத்து உடைத்து சந்தம் வராதபடி பார்த்துக் கொண்டேன்.

மக்களது போராட்ட சூழ்நிலையிலான வாழ்க்கைப் பிரச்சினைகளை கவிதைகளின் உட்பொருளாகக் கொள்ளுமிடத்து பாரிய சுதந்திரங்கள் இருக்க வேண்டும். புதுக் கவிதை வடிவம் அதனைக் கொண்டிருக்கிறது. ஒரு தாளத்தின் பின்னால் செல்லும் போது ஆவேசத்துடன் கூடிய - நாம் எண்ணுகிற கருத்துக்களைக் கூறுவது கடினமானதாக இருக்கிறது. இதே நேரம் மிகவும் தரம் கூடிய மரபுக் கவிதைகளும் சிங்கள் மொழியில் இல்லாமலில்லை. அவற்றுடனான பரிச்சயம் குன்றி, மிகவும் தாழ் நிலையிலான மரபுக் கவிதைகள் அதிகம் வெளிவந்த கால கட்டத்துடன் கூடிய தொடர்புகளே எனது இந்த நிலைப் பாட்டுக்குக் காரணம் என்றும் கூறலாம்.

புகழ் பெற்ற சிங்கள எழுத்தாளரான மார்ட்டின் விக்ரமசிங்ஹ கூட தனது 'தேரீ காத்தா' எனும் படைப்பை புதுக் கவிதைப் பாணியிலேயே படைத்துள்ளார் என்பதை நானிங்கு சுட்டிக் காட்ட வேண்டும். அதே நேரம் பேராதனைப் பல்கலைக் கழகக் கால கட்டத்தின் கவிதைகளில் இருந்து ஜி.பி. சேன நாயக்கவை அடியொட்டி சிறி குணசிங்க முதல் இப்போதைய ரத்னசிறி விஜேசிங்ஹ வரையில் மிக அதிகமான சிங்களக் கவிஞர்கள் புதுக் கவிதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையையே பின்பற்றி வருகின்றனர்.

மஹகம சேகர கூட புதுக் கவிதைத் துறையையே அதிகம் பின்பற்றினார். அதாவது புதுக் கவிதைத் துறையில் இருந்து வந்த இயந்திரத் தனமான போக்கை மாற்றி அதனை யதார்த்தவாதத் தன்மைக்கு இட்டுச் சென்றவர் எனலாம். பின்னர், நாட்டுப் புறப் பாடல்களின் தாக்கங்களைக் கொண்ட மரபுக் கவிதைக்குக் கிட்டியதான ஒரு வகைக் கவிதைகளை இயற்றுவதில் அவர் வெற்றி கண்டார்.

யா: புதுக் கவிதைகளுக்கும் மக்களுக்குமிடையி லான தொடர்புகள் எவ்வாறானவை?

அஹ்ரா: மக்களுடன் இருந்து எழுந்த நாட்டார் பாடல்கள் முதற் கொண்டு அதனையொட்டியவாறு வெளிவந்த மரபுக் கவிதைகள் மக்களுடன் கொண்டிருந்த தொடர்புகளை புதுக் கவிதை எட்டவில்லை. இந்த வகையில் புதுக் கவிதைகள் ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கே சென்றடை கின்றன.

யா: தற்போது சிங்களப் புதுக் கவிதைத் துறையில் முன்னணியில் திகழக் கூடிய கவிஞர்கள் யார்?

அஹ்ரா: நான் நினைக்கின்ற அளவில் ஆரியவங்ச ரணவீரவைக் குறிப்பிட இயலும். இவர் ஜீ.பி. சேன நாயக்கவுக்குப் பின்னர் புதுக் கவிதையை புதியதொரு நெறிப்படுத்து கைக்கு உட்படுத்தியவர். ஹைக்கூ கவிதை களின் தாக்கங்களுடன் புதுக் கவிதையைச் சுருக்கி - சுத்திகரிப்புச் செய்த பெருமை இவரையே சார்கிறது. ஆனால் ரத்னசிறி விஜேசிங்ஹதான் இன்று பிரபல சிங்களப் புதுக் கவிதையாளராகக் கருதப்படுகிறார்.

நந்தன வீரசிங்ஹ, குமார வியனகே, குமார ஹெட்டியாராச்சி போன்ற பலர் இருக்கின் றனர். இவர்களைத் தவிர, புதிதாகத் தோன்றி யுள்ள லால் ஹேகொட, மஞ்சுள வெடி வர்தன போன்றவர்களையும் குறிப்பிடலாம். பெண்களைப் பொறுத்த வரையில் மொனிக்கா ருவன் பத்திரன, சுனந்தா ரணசிங்ஹ, யமுனா மாலனி, சீத்தா ரஞ்சனி, எட்னா மல்காந்தி, உபுலி நிரோஷனி போன்ற பலர் எழுதி வருகின்றனர்.

யா: தமிழ் இலக்கியப் பரப்பில் குழுவாக செயற் படுவது போல சிங்களக் கவிதைத் துறையிலும் இருக்கிறதா?

அஹ்ரா: குறிப்பாக அப்படி இல்லை. ஆனால் மரபுக் கவிதைத் துறையைப் பொறுத்த மட்டில் கொழும்பு யுகம், சித்தாவக்க கவிதை சமூகம் என்ற பிரிவினைகள் உண்டு. என்ற போதிலும் எங்களுக்கு நெருக்கமானவர்களை முன் மொழிவதுதான் ஒரு வழக்கமாக உள்ளது. சிங்களத்தில் புதுக்கவிதை எழுதி வருவோரில் குழு வாதங்கள் இருப்பதாகக் கூற முடியாது.

யா: பல்வேறு மொழிகளிலுள்ள கவிதைகள் சிங்கள மொழிக்கு பெயர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால் சகோதர மொழியான தமிழ் மொழிக் கவிதைகள் அதிகம் மொழிபெயர்க்கப் படுவ தில்லை. இது தொடர்பான தங்கள் கருத்து என்ன?

அஹ்ரா: இது வேதனை தரக் கூடிய ஒரு விடயமாகும். இதற்கு முக்கிய காரணமாக இருப்பது மொழிகளுக்கிடையிலான இடைவெளி எனலம். எங்களில் பலருக்குத் தமிழில் பரிச்சயம் கிடையாது. குறிப்பாக எனக்குத் தமிழ் மொழி தெரியாது. ஆனால் ஆங்கில மொழிப் பரிச்சயம் உண்டு. இதனால் ஆங்கில மொழியூடான இலக்கி யங்களுடன் தொடர்பு கொள்கின்ற நாங்கள் தமிழ் மொழியூடான இலக்கியங்களுடன் தூர ஒதுக்கப் படுகிறோம். இதனை இப் போது இப்னு அஸூமத், நிலார் காஸிம், சிதா ரஞ்சனி, சாமிநாதன் விமல் போன்றவர்கள் நிவர்த்தி செய்து அதற்கான இடைவெளி களைக் குறைத்து வருகின்றனர்.

யா: கலை இலக்கியம் என்பது இன, மத பேதங்களைக் கடந்தது. தமிழ்க் கலை, இலக்கியப் படைப்புகள் சிங்கள மொழிக்கும் சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலை பின்னல்

உல்லாசத் தொட்டிலைக்
கட்டி முடித்து
உறங்காது
மூலைச் சுவரில் முடங்கி
இரை வந்து விழும் வரை
குரூரம் கொப்பளிக்கக்
காத்துக் கிடக்கும் சிலந்தி

வாழ்வும் இருப்பும்
வலைப் பின்னல்கள்தான்
உறவு முடிச்சின் அலைக்கழிப்பில்
தூங்கி ஆஸ்வதம் காணா மனிதுகள்;
யார் யாருக்கோ எதற்கெதற்கோ
வலை விரித்தவாறு காத்திருப்புகள்;
சூட்சுமங்களைத் தொலைத்த
உதைப்பு
சங்கிலித் தொடர் போல்
ஏதோவொரு கண்ணிக்குள்
சிக்கித் திணறும் ஜீவித நியாயம்

மகிழ்ச்சிகளை அடை காத்து
வைக்க முடிகிறதா மனிதனால்
கூடவே துயரங்களின் முற்றுகை
இரை கவ்வும் சிலந்தியின் சந்தோஷம்
ஒரு நொடிப் பொழுது மட்டுமே
மீண்டும் தாவித் தாவி இழைபின்னும்
ஓர்மம்

சளைத்தலின்றி ஓயாமல் எப்போதும்
மனித இயக்கம்
மரணத்தை வசதியாய் மறந்தபடி

மு. பஷீர்

இலக்கியப் படைப்புகள் தமிழுக்கும் மொழி பெயர்க்கப்படும் செய்லை பாரியளவில் மேற் கொள்ள இது வரை இரு தரப்பாரும் முன்வர வில்லை. இது ஏன்?

அஜுரா: ஒன்று மொழிப் பிரச்சினையாகும். இரண்டாவது, சிங்கள மக்களிடையே தாங்கள்தான் பெரிய்ய மனிதர்கள் என்ற ஒரு வகை நினைப்பு இருந்து வருகிறது. இது அண்மைக் காலம் வரை பெரிய அளவில் நிலவி வருவதால் இவர்கள் தமிழ்க் கலை, இலக்கியங்களின் பால் கண்களைத் திறந்து பார்க்கவில்லை என்றுதான் கூற வேண்டும். தமிழ் மக்களிடையே இவ்வாறானதொரு இலக்கியம் இருந்து வருகிறது என்பதை இவர்கள் நம்பவில்லை. ஆனால் தமிழ் மக்களது ஆயுதந் தாங்கிய போராட்டத் துடன் சிங்கள சமூகம் தமிழ் சமூகத்தின்பால் கண்களைத் திறந்து பார்க்க ஆரம்பித் துள்ளது. இதன் பின்னர் இந்த நிலைமை சற்று வித்தியாசப் பட்டுள்ளது. பேராசிரியர் சுனில் ஆரியரத்ன போன்றவர்கள் தமிழ் மொழி யானது சிங்கள மொழியின்பால் ஏற்படுத்தி யுள்ள தாக்கங்கள் தொடர்பான நூல்களை எழுதியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் மூலம்தான் நாங்கள் தமிழ் மொழியிலிருந்து ஏராளமான வார்த்தைகளை எடுத்துப் பயன்படுத்தி வருகிறோம் என்பது போன்ற முக்கிய விடயங்கள் தெரிய வந்துள்ளன.

அதன் பின்னர் பல தமிழ்க் கலை, இலக்கியப் படைப்புகள் சிங்கள மொழியில் முன்னர் குறிப்பிட்டவர்கள் போன்ற மொழி பெயர்ப்பாளர்களினால் அறிமுகப் படுத்தப் பட்டு இன்று பல தமிழ் இலக்கியப் படைப் பாளர்களது பெயர்களை நாங்கள் அறிந்து வைத்துள்ளோம். இதே போல் நீங்களும் மேற் கொண்டு வரும் இவ்வகை முயற்சி களினால் சிங்களப் படைப்புகளும் தமிழில் அறிமுகப் படுத்தப்பட்டு ஒரு பரஸ்பரப் பரிமாற்றம் இடம் பெறும் என்று நம்பு கிறேன்.

யா: இனவாதப் போக்குகள் இதற்கு ஒரு காரணம் என்று கூற முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுர: தற்போது பெரும்பலான சிங்கள மக்களிடையே அவ்வாறான தன்மைகள் இருப்பதாகக் கூற முடியாது. தமிழ் மக்கள் தொடர்பாக இருப்பதாக விரோதமான மனப் பாங்கு அவர்களிடம் இல்லை. சகோதரத் துவம் பற்றிய சிந்தனைகள் அவர்களிடையே காணப்படுகின்றன. என்ற போதிலும் எப்போதுமே இனவாதத்தை முன்னிறுத்தி வருகின்ற ஓரிரு குழுக்கள் இருக்கத்தான் செய்கின்றன.

குறிப்பாக, அண்மையில் தமிழ் - சிங்கள கலை விழாவை 'சிஹல உறுமய' கட்சியினர் குழப்பி பின்னர் அது ஒரு தாக்குதல் சம்பவமாக உரு மாறியது. ஆனால் இனவாத சிங்கள மக்கள் வந்து தாக்கினார்கள் என்பதுதான் உலகக் கருத்தாகி விடுகிறது. அந்த இடத்தில் சிங்கள மக்களான நாங்களும் இருந்தோம். முதல் நாள் நிகழ்ச்சிகள் குழம்பிய போதும் மறுநாள் அது மிகவும் வெற்றிகரமாக நடந்தது. சிங்கள மக்களிடம் இனவாதம் இல்லை என்பதுதான் இதன் மூலம் தெளிவாகிறது. அதே நேரம் அங்கிருந்த சிங்கள மக்கள் தமிழர்களைத் தாக்கவில்லை: காப்பாற்றப் போய் தாக்கு தலுக்கு உள்ளானார்கள் என்பதுதான் உண்மையாகும்.

யா: தமிழில் கவிதைகளுக்கு என 'யாத்ரா' வெளிவருகின்றது. இதே போல சிங்கள மொழிக் கவிதைகளுக்கென தனியான சஞ்சிகைகள் வெளிவருகின்றனவா?

அனுர: முன்பு கவிதைகளுக்கான சிற்றேடுகள் பல வெளிவந்துள்ளன. சில கால கட்டத்தின் பின்பு அவை அப்படியே நின்று போய் விட்டன. இப்போது கூட ஒரு சில சிற்றிதழ்கள் வெளிவந்த போதிலும் அவை மரபுசார் கவிதைகளுக்கு மாத்திரமே களமமைத்துக் கொடுக்கின்றன. தனிப்பட்ட முறையில் இவ்வாறானதொரு சஞ்சிகையை நடத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் இருந்து வருகிறது. உண்மையில் சிங்கள கவிதைத் துறையில் இதுவொரு குறை பாடாகும்.

யா: தமிழ்க் கவிதை இன்று உலகளாவிய ரீதியில் வியாபித்துச் சென்றிருப்பது போல் சிங்களக் கவிதையும் சென்றிருக்கிறதா?

அனுர: என் அறிவுக்கு எட்டிய வரையில் சிங்களக் கவிதைகள் அந்தளவுக்கு வியாபித் துச் சென்றதாகக் கூற இயலாது. சிங்கள மொழிச் சிறு கதைகள் மொழிபெயர்க்கப் பட்டு அவ்வாறு சென்றுள்ளன. தமிழர்கள் பரந்து பட்டு உலகம் முழுவதிலும் வாழ்ந்து வருவதால் - அம்மொழி உலக மொழியாக் கப் பட்டிருப்பதால் தமிழ் மொழிக்குள்ள இந்த வாய்ப்பு, தீவக மொழியான சிங்களத் துக்குக் கிடைக்கவில்லை.

யா: தமிழ்ப் போராட்ட காலக் கவிதைகளைப் போல சிங்கள மொழியில் எழுந்துள்ள கவிதைகள் பற்றிக் கூறு முடியுமா?

அனுர: மக்கள் விடுதலை முன்னணி தோற்றம் பெற்ற கால கட்டத் துடன் போராட்டக் கவிதைகள் முன்னிலைப் படுத்தப்பட்டன என்றுதான் கூற வேண்டும். அழகியற் கவிதைகளிலிருந்து கவிதைத் துறை போராட்ட வடிவத்தைப் பெற ஆரம்பித்தது. பல கவிதைகள் பெயர் தெரியாத பலரால் வெவ்வேறு புனைப் பெயர்களில் எழுதப் பட்டன. இவையெல்லாம் இறவாக் கவிதைகள் எனலாம். ஆனால் இவை நூல்வடிவு பெறவில்லை. இவ்வாறு எழுதிய கவிஞர்கள் இன்று என்னவானார்கள் என்பது கூடத் தெரியாது. இந்தக் கவிதைகளின் அடிப்படையில் இருந்துதான் நாங்கள் தமிழ்ப் போராட்டக் கவிதைகளை அவதானிக்கக் கற்றுக் கொண்டோம் என்று கூறுவது பொருந்தும்.

யா: தமிழ் - சிங்கள இலக்கியப் பரிமாற்றங்கள் தொடர்பான தங்களது கருத்து என்ன?

அனுர: உண்மையில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் அத்தியாவசியமாகும். எம்மிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப் பிரச்சினை இருப்பதால் தமிழ் மக்களது இதயத் துடிப்புகளை உணர்ந்து கொள்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளன. ஒரு சமூகத்தின் எண்ணப்பாடுகள், கலை, இலக்கியங்கள் மூலமாக வெளிப்படுத்தப் படுகின்றன. ஆகவே அவற்றை எங்களது மொழிக்குக் கொண்டு வருவதானது பாரிய தொரு பணியாகும். இது அரச மட்டத்தில் செய்யப்பட வேண்டியது என்ற போதிலும் அப்படி எதுவும் நடப்பதில்லை. ஆக, இம்முயற்சிகள் இதைவிடப் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யா: சில கவிதைகளை சில பத்திரிகைகளில் பிரசுரித்துக் கொள்ள இயலாத நிலை தமிழில் காணப்படுகிறது. இதே நிலை சிங்களக் கவிதைத் துறையிலும் உள்ளதா?

அனுர: சிங்கள மொழியில் மாற்றுப் பத்திரிகைகளில் எல்லா வகையான கவிதை களையும் பிரசுரிக்க இயலும். மாறுபட்ட அரசியல் போக்குகளை மாற்றுப் பத்திரிகை கள் கொண்டிருந்தாலும் கூட கலை, இலக்கியம் என்று வரும் போது அவை சுதந்திரமாகவே பிரசுரஞ் செய்யப்படு கின்றன. ஆனால் தேசியப் பத்திரிகைகளில் இந்த சுதந்திரத்தை எதிர்பார்க்க முடியாது.

யா: சிங்களப் புதுக் கவிதைகளில் பிறமொழிக் கவிதைகளது தாக்கங்கள் எத்தகையவை?

அனுர: வால்ட் விட்மனின் கவிதைகளது தாக்கங்களின் ஊடாகத்தான் புதுக் கவிதை கள் சிங்களத்தில் அறிமுகமாயின. ஜி.பி. சேன நாயக்க இதன் காரணமாகவே புதுக் கவிதை களை சிங்கள மொழிக்குக் கொண்டு வந்தார் எனலாம். இது பற்றி அவர் தெளிவாகவே கூறுகிறர். அமெரிக்கக் கவிதைகளின் தாக்கம்தான் தன்னைப் புதுக் கவிதை எழுதத் தூண்டியதாக அவர் தனது 'பலி கெனிம' (பலியெடுத்தல்) தொகுதியில் குறிப்பிட் டுள்ளார்.

யா: உங்கள் ஆக்கங்கள் எல்லாம் நூல்வடிவு பெற்றுள்ளனவா?

அனுர: நான் எழுதிய எல்லா ஆக்கங்களை யும் நூல் வடிவில் கொண்டுவரவில்லை. அவற்றில் நான் திருப்தி காணும் சில ஆக்கங்களையே நூலாக்கியுள்ளேன். இந்த வகையில் எனது முதலாவது தொகுதி 'நகரயட்ட ஆ முவத்திய' (நகரத்துக்குள் வந்த பெண் மான்) 1998 ஏப்ரல் மாதம் வெளிவந்தது. இந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகளை வரைந்து நான் கொழும்பிலும், ஹட்டனிலும் கண்காட்சிகள் நடத்தியுள் ளேன். ஹட்டனில் நடத்திய போது சில கவிதைகள் இப்னு அஸூமத்தினால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கண்காட்சியில் வைக்கப்பட்டன. நல்ல வரவேற்பைப் பெற்ற இம்முயற்சி வெற்றி பெற்றது.

அதன் பிறகு 2003ல் 'ஹேறாலின் னி' எனும் சீன எழுத்தாளரின் 'மல்பெரி பீச்' என்ற மொழிபெயர்ப்பு நாவல் வெளிவந்தது. அதே ஆண்டு எனது மூன்றாவது நூல் 'நிஸ்ஸப்தம' (மௌனம்) வெளிவந்தது. இதில் கவிதை களும் சிறு கதைகளும் அடங்குகின்றன.

யா: தமிழ்ப் பேசும் மக்களிடையே தமிழ் மக்களுக்குச் சமமான வகையில் சில வேளைகளில் அதிகமான அளவில் முஸ்லிம்கள் கலை, இலக்கியத் துறையில் பங்காற்றி வருகின்றனர். தமிழ் மக்கள் பேசப் பயந்த ஒரு கால கட்டத்தில் கூட முஸ்லிம்கள் தமிழை வளர்ப்பதில் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளனர். இது தொடர்பில் ஏதும் அறிந்து வைத்துள்ளீர்களா?

அனுர: எங்களைப் பொறுத்த வரையில் மொழிதான் இங்கு முக்கியமாகின்றது. நாங்கள் தமிழ் இலக்கியம் என்ற வகையில் தான் எடுத்துக் கொள்கிறோமேயொழிய, படைப்பாளியின் இனத்தைப் பார்த்தல்ல. முஸ்லிம் மக்கள் போஷித்து வளர்த்து வருவது தமிழ் மொழியை, தமிழ் கலை, இலக்கியத்தை என்பதை தமிழ் மக்கள் தான் புரிந்து கொள்ள வேண்டும்.

இதை நாங்கள் இன்னும் தெளிவு படுத்திக் கொள்ள முயலுவோமேயானால் மிகவும் அந்நியமான பிரிவினைகள் தோன்றி யிருப்பதையும் உணரலாம். அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியை வைத்து தமிழ் - சிங்கள மக்கள் பிரிந்துள்ளனர். ஆனால் மதத்தை வைத்து தமிழ் - முஸ்லிம் மக்கள் பிரிந்துள்ளனர். இதையெல்லாம் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதே வேளை சிங்கள - தமிழ் இலக்கியங்களை ஒன்றிணைத்து நாம் 'இலங்கை இலக்கியம்' என்ற ரீதியில் உலகின் முன் வைப்போமேயானால் - அந்த இடத்துக்கு நாம் செல்வோமேயானால் அது ஒரு உன்னதமான நிலையாகும். தமிழர்கள் கீழானவர்கள், சிங்களவர்கள் மேலானவர்கள் என்பன போன்ற குறுகிய பேதங்கள் துறந்து அனைவரும் இலங்கையராக வேண்டும்.

யா: மொழிபெயர்ப்பு செய்யப்படும் போது அநேகமாக தங்களைச் சார்ந்த, நெருங்கிய நபர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்ற நிலை சிங்கள இலக்கியத் துறையிலும் உள்ளதா?

அனுர: ஆமாம். நபர்களது தொடர்புகளைப் பொறுத்துத்தான் மொழிபெயர்ப்புகள் செய்யப்படுகின்றன. தற்போது அவ்வாறன்றி பரந்த வகையில் ஆக்கங்களைத் தெரிவு செய்த ஆங்கில மொழிக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்ற போதிலும் அவற்றில் கூட தரப் பிரிப்பு இருந்து வருவதைக் குறிப்பிட்டே யாக வேண்டும்.

யா: இறுதியாக, 'யாத்ரா' வாசகர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

அனுர: நமது கவிதைகளை சமூகப் பிரச்சினைகளிலிருந்து விடுபட, இனங்களுக் கிடையிலான பிரிவினைகளைக் களைய உபயோகப் படுத்த வேண்டுமேயன்றி பொழுது போக்குக்காக எழுதுவதால் பயனில்லை. மக்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்பட நம்மால் மேற்கொள்ளக் கூடிய சிறு முயற்சியேதும் இருப்பினும் அதைச் செய்ய முன்வர வேண்டும். கொலைகள் இல்லாத ஒரு சமூகத்தில் வாழ முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். □

ஆசை

ஸ்பானிய மொழியில்:
நீலன்றோல்
தமிழில்:
ஏ.இக்பால்

மைதானம் விரித்த பாய்
பரப்பிய விதைகளின் முனை
ஜதாகவில்லை பெரிதாகி
மெய்யாகத் தந்த புலன்
நயமாகி நின்ற உரம்
எய்ததாம் ஏறிச் செல்லும்
புகை கக்கும் புனித கணை
இன்னும் இறங்கவில்லை
இறங்கினால் கொல்லும்

கொல்லாமல் கொல்லும் பணி
உயிரில்லாம லாக்காதே
மாறாக உயிரில்லாத உடலாக
மாறும் எல்லாமழிந்த மாதிரியே
அழிவதற்கு ஆரம்பமானாலும்
அழியாது! அழிக்கும் தொழிலுக்கோ
ஆற்றல் யாருக்கோ
ஏனின்னும் அழிக்கலா மென்ற
அநியாய எண்ணம்! நம்பிக்கை
அழிவுக்கே ஆளாக்கும்

ஆள் என்றால் தனித்துவம்
ஆளணி தனிமை உரிமை
ஆட்சியால் அடக்குதல் எல்லாம்
அழிவில்லா தொன்றையே
ஆட்டிப் படைக்கும் ஆற்றலை
ஆண்மையால் அடையலாம்
என்பது வீண்! யாரும் அறிந்திடார்
எனினும் இவர் ஏற்காத ஒன்றை
எட்டிப் பிடிக்க முனைகிறார்
பிடித்தாலும் பிடிபடா
பிடிக்குள் அகப்படா
திருக்கும் பொருளில்தான் ஆசை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என். நஜ்முல் ஹுஸைன்

கொழும்புக் கவிஞர்கள் என்று ஒரு பட்டியலிடும் போது அதில் ஒரு தனியிடத்தைப் பெற்றுக் கொள்ளும் நிலையைத் தக்க வைத்திருப்பவர் கவிஞர் என். நஜ்முல் ஹுஸைன். குறிப்பாக இவரது கவியரங்கப் பங்களிப்பு விதந்துரைக்கப்பட வேண்டியதாகும். கொழும்பு இலக்கிய வட்டாரத்தில் மிக நீண்ட கால இணைப்பையும் தொடர்பையும் கொண்டிருப்பவர் இவர்.

எம்.எஸ்.எம்.ஜின்னா

இணைச் செயலாளர்

கொழும்பு இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அன்பாகவும் கண்ணியத்துடனும் சகல துறையினருடனும் பழகும் நஜ்முல் ஹுஸைன் கொழும்பைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர். கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியில் இவர் கற்றது ஆங்கில மொழியில். என்றாலும் கூட தமிழில் அவருக்கிருந்த அதீத ஆர்வம் அவரை ஒரு தமிழ்க் கவிஞனாக்கிற்று. 1968ல் அவரது முதலாவது எழுத்துப் படைப்பு 'குமுதம்' சஞ்சிகையில் வெளிவந்ததை ஞாபகித்துச் சொல்கிறார்.

தினகரன், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், அபியுக்தன், மல்லிகை, அல் ஹஸனாத், நவமணி, உதயம், பௌர்ணமி, பூபாளம், கீறல், தென்னிந்திய சஞ்சிகையான ராணி என இவரது கவிதைகள் வெளியான பத்திரிகை, சஞ்சிகைகளை ஒரு பெரும் பட்டியலிட்டுச் சொல்லலாம்.

இது தவிர சிங்கள மொழியிலும் அவரது பங்களிப்பு உண்டு. 1967ல் 'சுஜாதா' என்ற தமிழ் - சிங்கள கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியராக செயல்பட்ட நஜ்முல் ஹுஸைனின் சிங்கள மொழிப் படைப்புகள் பிற்காலத்தில் லக்பிம, தினமின ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.

ஒலி, ஒளிபரப்புத் துறையிலும் நஜ்முல் ஹுஸைனின் இலக்கியப் பங்களிப்பு கணிசமானது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவை, தமிழ்ச் சேவை ஆகியவற்றில் சிறு வயது முதல் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட அனுபவம் மிக்க இவர் ஏராளமான மேடை மற்றும் வானொலிக் கவியரங்குகளில் பங்கு கொண்டுள்ளார். முஸ்லிம் சேவையில் இளைஞர் இதயம் என்ற நிகழ்ச்சியை ஒரு வருடத்துக்கும் மேலாகத் தொகுத்தளித்துள்ளார். அரச, தனியார் வானொலிகளில் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்களிப்புச் செய்திருக்கும் நஜ்முல் ஹுஸைனின் மெல்லிசைப் பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப் பாகியிருக்கின்றன. இவரது கவிதைகள் கனடா வானொலி மற்றும் தாயாய் வானொலிகளிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

கொழும்பில் பிரபல்யம் பெற்று விளங்கிய வலம்புரிக் கவிதா வட்டத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் அதன் உபதலைவராகவும், தலைவராகவும் செயற்பட்ட நஜ்முல் ஹுஸைன் தற்போது இஸ்லாமிய கலை, இலக்கிய மன்றத்தின் இணைச் செயலாளராகவும் இயங்குகிறார் அத்தோடு பல்வேறு சமூக நல அமைப்புகளிலும் அங்கம் வகிக்கிறார். விஸ்மீன், நஜ்மி, அபூஷப்னா ஆகிய புனைப்பெயர்களிலும் எழுதி வரும் இவரை இவரது கவிதைப் பங்களிப்புக்காக அகில இன நல்லுறவு ஒன்றியம் 'கவிமணி' பட்டமளித்துக் கௌரவித்தது. 2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டிலும் பாராட்டு விருது பெற்றவர்.

1993ம் ஆண்டு இவரது கவிதைத் தொகுதியான 'பனித் தீ' வெளியானது. மற்றொரு கவிதைத் தொகுதிக்கான ஏற்பாடுகளில் இருப்பதாகச் சொல்லும் நஜ்முல் ஹுஸைன் கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளராகக் கடமையாற்றி வருகிறார். கவிதைத் துறையில் மட்டுமன்றி சிறுகதைத் துறையிலும் தனது பங்களிப்பினை நல்கி வரும் இவர் சிறந்த பட்டிமன்றப் பேச்சாளரும் ஆவார்.

எழுத்துத் துறையில் இவருக்கு மிகவும் உந்து சக்தியாக விளங்குபவர் அரச தகவல் திணைக்களத்தில் கொழும்பு மாவட்ட தகவல் அதிகாரியாக பணிபுரிந்து வரும் நூருல் ஐன் நஜ்முல் ஹுஸைன் என்ற அவரது வாழ்க்கைத் துணையாவார். இவர்களது புதல்வி நூருஸ் ஷப்னாவும் கூட கவிதைத் துறையில் ஆர்வமாக உள்ளார்.

மர்ஹூம் கே.கே.எம் மொஹிதீன், சித்தி ரௌதா உம்மா தம்பதியின் புதல்வனான நஜ்முல் ஹுஸைனின் தந்தையார் ஒரு இலக்கிய ஆர்வலராக வாழ்ந்தவர். அவர் தனது பேச்சுக்கிடையே கவிதைகளைப் பயன்படுத்தி உதாரணங் காட்டும் வல்லமை பெற்றிருந்தார். இதுவும் கூட தன்னை கவிதை நோக்கி இழுத்துச் சென்றதற்கான ஒரு காரணி என்கிறார் நஜ்முல் ஹுஸைன். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணல் முகட்டு ரகசியங்கள்



கருமுகில் உறைந்த
பின்னிரவொன்றில்
கருகிய அந்தப் புதை மணல்
முகட்டில்தான்-
கனத்த உதிரத்தை
உறிஞ்சித் துப்பியது ஞாபகம்

முழங்காலிருத்தி
கரங்கோத்துப் பிணைத்து
குரல்வளை நசுக்கி
ஆத்மாக்கள் பதறிய கணங்களாய்

உடல் துளைத்த முட்களுக்கு
என்ன பசி தணிந்திருக்குமோ

நோவினைத் தாங்க மறுத்த
சதைகளின் துடிப்புகள்
ஊமை செதுக்கிய கனவாய்
அக்கணம்

இமையோரமாய் வழிந்தோடி
வற்றிப்போன விழி நீரில் கூட
இளக மறுத்த மனசுகள்

குருட்டு நிலவொளிப் பொட்டு
மறைவில்
வதைக்கப்பட்ட ஜீவன்களின்
ஆத்மாக்கள்
இன்னும் அசைகிறதே நிழலாய்
ஈனக் குரல்களின் அதிர்வுகள்
காதுகளை உசுப்ப
இப்படித்தான்
ஒவ்வொரு கனமும் அரங்கேறிய
அந்த மணல் முகட்டு ரகசியங்கள்!

'யாத்ரா' கவிதைப் போட்டியில்
ஏழாம் இடம் பெற்ற கவிதை

எம்.எம்.விஜிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யாத்ரா' கவிதைப் போட்டியில்
எட்டாம் இடம் பெற்ற கவிதை



தீர்ப்பு

யாரோ வடித்த சிலை அவள்
வர்ணந் தீட்டி
உனது பெயரைப்
பொறித்துக் கொண்டாய்

பூமாலைகளை அணிவித்து
அவளை
நிமிர விடாமல் தடுத்து விட்டாய்
உன் கரங்களுக்கிடையில்
அவளையும்
அவள் கனவுகளையும்
கசக்கி விட்டு
ஆணென்று மார்தட்டி நிற்கிறாய்

தாயாகி பின் சேயாகி
எல்லாம் உனக்கென்றாகிப்
போன பின்னும்
அவளை
சிலையாகப் பார்க்கிறாய்
அவளை மனைவி என்றும்
உன்னைக்
கணவனென்றும் ஏன் சொல்கிறாய்
நீ அரசனாக
சிம்மாசனத்தில் இரு
அவள் அடிமையாகவே
உன் காலடியில் கிடக்கட்டும்

கமலினி சிவநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்வா துகான்

பலஸ்தீனத்தின் பிரபல முன்னோடிப் பெண் கவிஞரான பத்வா துகான் 2003 டிஸம்பர் 13ம் திகதி அவரது சொந்த இடமான - மேற்குக் கரையிலுள்ள நப்லஸில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 86.

நப்லஸில் வாழ்ந்த செல்வாக்கு மிக்க குடும்பத்தில் 1917ம் ஆண்டு பிறந்த பத்வா - பிரிட்டிஷ் ஆட்சி, இஸ்ரேல் என்ற நாட்டின் உருவாக்கம், ஆக்கிரமிப்பு, பலஸ்தீன் சுயாட்சி பற்றியெல்லாம் அறிந்தவர். தனது சொந்த மண் பறி போவதை கண்முன்னே கண்டவர்.

அவரது சொந்தச் சகோதரரான பிரபல கவிஞர் இப்றாஹீம் துகானினால் கவிதைத்துறைக்கு அறிமுகப்படுத்தப் பட்டவர் பத்வா. இப்றாஹீம் துகானின் மரணம் ஏற்படுத்திய இடைவெளியும் 1948ல் இடம் பெற்ற இஸ்ரேல் உருவாக்கமும் 1950ல் பத்வாவை அரசியல் நோக்கி எடுத்துச் சென்றது. 1967ல் மேற்குக் கரை இணைப்பில் எகிப்திய பிரதமர் கமால் அப்துல் நாஸருக்கும் இஸ்ரேலின் பாதுகாப்பு மந்திரியாகவிருந்த மோஷே தயானுக்குமிடையில் பத்வா துகான் இணைப்பாளராகச் செயல் பட்டார்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பேசும் அவரது படைப்புகள் அறபுலகு முழுவது மாத்திரமன்றி அதற்கப்பாலும் பிரசித்தம் பெற்று விளங்குகின்றன. இவரது கவிதைகள் ஆக்கிரமிப்பின் கீழ் வாழும் பலஸ்தீனின் மக்களின் துயரங் கொண்ட அன்றாட வாழ்வியலை, அதன் கொடிய சூழலை வெளிப்படுத்தி நிற்பதோடு, அவர் நவீன அறபுக் கவிதையை சிறப்பாகக் கையாண்ட ஒரு அதிசிறந்த முன்னோடி என்பதையும் அவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

எட்டுக் கவிதை நூல்களை வெளியிட்ட பத்வா துகானின் 'ஒரு மலைப் பயணம்' சுயசரிதை நூல் 1985ல் வெளியானது. 1990ல் இந்நூல் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

இத்தாலியின் 'பலர்மோ' நகரில் சர்வதேச கவிதை விருதைப் பெற்ற இவருக்கு 1990ல் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கலை, கலாசார 'ஜெரூஸலேம் விருது'ம் ஐக்கிய அரபு ராஜ்ய கலை, கலாசார விருதும் வழங்கப்பட்டன. 1996ல் பலஸ்தீனத்தின் கௌரவ கவிதை விருது வழங்கப்பட்ட பத்வா துகானை மையமாகக் கொண்டு 1999ல் ஒரு விவரணப் படத்தை நாவலாசிரியாரான லியனா பத்ர் தயாரித்துள்ளார்.

முன்னாள் இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் மோஷே தயான் இவரது கவிதை ஒன்றைப் படித்து விட்டு 'இது இருபது கமாண்டோக்களுக்குச் சமமானது' என்று தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு கவிதையில் - மேற்குக் கரைக்கும் ஜோர்டானுக்குமிடையிலான ஒரு சோதனைச் சாவடியில் எல்லை கடக்கக் காத்துக்கிடக்கும் பலஸ்தீனர்கள் பற்றி பத்வா இப்படிக் குறிப்பிடுகிறார்... ''பஞ்சடைந்த கண்கள் காத்துக் கிடக்கின்றன... கடந்து செல்வதற்காகக் கெஞ்சுகின்றன...''

எல்லை கடக்க மாத்திரமல்ல... இன்னொரு பத்வாவுக்காகவும் இப்படித் தான் காத்துக் கிடக்கிறது... பலஸ்தீனம்!

பாடிப் பறந்த குயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களால் பரிசீலிக்கப்படும் கோரிக்கை

வானழ இப்னு ஹஸன்

என்னால் இப்போதுதான்
ஒப்புக் கொள்ள முடிகிறது
உன் கோரிக்கையை

உனதின் எல்லாவித அச்சங்களும்
என்னில் பற்றிப் படர்ந்திருக்கிறது
படம் விரித்த கருநாகமாய்

உந்தித் தள்ளுகிறது
உயிர்த்தெழுந்த இறந்த காலம்
உன்னிலிருந்து என்னைப் பிரித்தெடுக்குமாறு

இழந்து போன என் சுயத்தைத் தேடும்
அகிம்சா தவத்தில்
என்னால் பொறுக்கியெடுக்க முடியவில்லை
என் முகத்தைத்தானும்

என் உயிரின் மீது நீ விசிறிய
சயனைட் துளிகளில் பயிராகியிருக்கிறது
புது வாழ்வொன்று

இழந்து போன சுயம், முகம், வாழ்வு
எல்லாம் மீட்டெடுக்கக் கிளம்பியிருக்கிறேன்
என் புதை மேட்டிலிருந்து
ஆயுதங்களை அங்கங்களாய் ஆக்கிக் கொண்டு

இனி நாம் ஓரினம்தான் என்பதை
என்னால் ஒப்புக் கொள்ள முடிகிறது
இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கவிதை என்பது எல்லோரும்
உறங்கும் போதும் விழித்திருக்கும் கண்.
சட்டங்கள் எதனாலும் அடக்கி ஒடுக்க
முடியாத வாய். சக்கரவர்த்தியின்
அம்மணத்தைக் கூவிச் சொல்லும்
குழந்தை.!'

— பேராசிரியர் கே.சச்சிதானந்தன்

கேரளத்தின் கொடுங்க நல்லூர் அருகிலுள்ள புல்லூற்று கிராமத்தில் 1946 மே மாதம் 25ம் திகதி பிறந்தவர் கே. சச்சிதானந்தன். கேரள பல்கலைக் கழகத்தில் தனது எம்.ஏ. பட்டப்படிப்பை முடித்த சச்சிதானந்தன் இலக்கியத்தில் தனது கலாநிதிப் பட்டத்தை கோழிக் கோடு பல்கலைக் கழகத்தில் பெற்றார். இரிஞ்ஞாலக்குட கிறிஸ்து கல்லூரியில் நீண்ட காலமாக ஆங்கிலப் பேராசிரியராகக் கடமையாற்றினார். 1992ல் சாகித்திய அகடமியின் அழைப்பையேற்று அதன் 'இண்டியன் லிற்றரேச்சர்' என்ற இதழின் ஆசியராகப் பொறுப்பேற்றார். 1996 நவம்பர் 1ம் திகதியிலிருந்து சாகித்திய அகடமியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

'அஞ்சு சூரியன்', 'எழுத்தச்சன் எழுதும் போள்', 'பீடன காலம்', 'இவெனக் கூடி', 'வீடு மாற்றம்', 'சச்சிதானந்தன் கவிதைகள்', 'கவி புத்தன்', 'தேசாடனம்', 'கயற்றம்' ஆகியன இவரது கவிதை நூல்கள். தவிர, 'ஜனதையும் கவிதையும்', 'சம்வாதங்கள்', 'சமீபனங்கள்', 'சம்ஸ்காரத்தின் ராஷ்ட்ரீயம்' ஆகிய இலக்கியத் திறனாய்வு நூல்களையும் எழுதியுள்ளார். இந்திய மற்றும் உலகளாவிய கவிஞர்களின் ஆயிரத்துக்கும் அதிகமான கவிதைகளை மொழிபெயர்த்து பதினைந்துக்கும் மேற்பட்ட தொகுதி களாக்கியிருக்கிறார். அறுபது இந்தியக் கவிஞர்களதும் மற்றும் ஐரோப்பிய, லத்தீன் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்கக் கவிஞர்களதும் கவிதைகளை மலையாள மொழியில் தந்திருக்கிறார். அவரது கவிதை மற்றும் கட்டுரைத் தொகுப்புகள் பட்டப் பின் கற்கைக்கான பாட நூல்களாகவும் கல்வி ஆய்வு நூல்களாகவும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை எனது தொழில்!

சச்சிதானந்தன் மிகத் தாக்கத்தை விளைவிக்கக் கூடிய நல்ல விமர்சகருங்கூட. இந்திய மற்றும் உலக கவிதைத் துறையில் பரந்து செயல்படும் இவர் பலவேறு இந்திய இலக்கியங்களினதும் நவீனத்தவ, பின் நவீனத்துவப் போக்குகள் குறித்தும் பரந்த விளக்கம் உள்ளவர். சமயப் பன்முகத்தன்மை, சூழலியல், பெண்ணுரிமை, சிவில் உரிமை, ஜனநாயக சோஷலிஷம், இசை, ஓவியம், தத்துவம், கலாசாரம், அரசியல் சிந்தனை ஆகிய விடயங்களிலும் சச்சிதானந்தனுக்கு அதிக நாட்டமும் ஈடுபாடும் உண்டு.

முக்கியம் வாய்ந்த கல்வி மற்றும் இலக்கிய அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் பேராசிரியர் சச்சிதானந்தன் தேசிய ரீதியான இலக்கிய, சினிமாத் துறைகளில் மத்தியஸ்தம் வகிக்கிறார். தேசிய ரீதியாக மட்டுமன்றி, சர்வதேச ரீதியாக கவிதையை முன்னிறுத்தி நடைபெறும் கருத்தரங்குகள் விழாக்களில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்து கொள்கிறார்.

1998ல் கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் இவரது 46 கவிதைகளை மொழிபெயர்த்துத் தொகுத்து 'சச்சிதானந்தன் கவிதைகள்'என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். 'ரத்தசாட்சிகள்' என்ற கவிதைத் தொகுப்பும் 'மார்க்ஸிய அழகியல்' என்ற இவரது நூலும் ஏற்கனவே தமிழில் வெளிவந்துள்ளன எனக் கூறும் சிற்பி, சச்சிதானந்தனைப் பற்றிக் குறிப்பிடும் போது 'மலையாள மொழியில் எழுதுகிற உலகக் கவி' என்கிறார்.

தாபன் தாஸ் குப்தா, சச்சிதானந்தனைக் கண்ட பேட்டியின் மொழி பெயர்ப்பு இங்கு இடம்பெறுகிறது.

– ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்தா: இலக்கியத்தினால் நீங்கள் எவ்வாறு ஆகர்ஷிக்கப் பட்டீர்கள்? உங்கள் கவனத்தை ஈர்த்த முதல் நூல் எது?

சச்சி: இளம் பராயத்திலேயே இலக்கியத்தின் பால் ஈர்க்கப் பட்டேன். எழுத்தச்சனின் 'அத்தியாத்ம ராமாயணம்' படிக்கும் போது சொற்களின் மந்திர சக்தியை உணரத் தலைப் பட்டேன். அப்போது எனக்கு வயது ஆறு அல்லது ஏழுதான். படித்ததில் எல்லாமே விளங்கவில்லை. எனினும் கவிஞரது சொற்களின் சுடரொளியை, ராமர் மீதும் சீதை மீதும் கவிஞருக்கிருந்த ஆழ்ந்த பக்தியை உணர முடிந்தது. ஆம். எனது ஆயுளில் நான் படித்த முதல் பிரதான நூல் அது. தொடர்ந்து மாபெரும் மனித ஆவணங்களான மகாபாரதத்தையும் பைபிளையும் படித்தேன்.

குப்தா: எப்பொழுது எழுதத் தொடங்கினீர்கள்? அச்சில் வந்த உங்களின் முதல் ஆக்கம் எது?

சச்சி: எனது பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதில் எழுதத் தொடங்கினேன். அது கவிதையெழுதும் அப்பியாசமே தவிர வேறில்லை. என் ஆரம்பக் கவிதைகள் கல்லூரிச் சஞ்சிகைகளில் வெளிவந்தன. கிரமமாக வெளிவரும் சஞ்சிகையொன்றில் பிரசுரமானதோ காதல் கவிதை. அப்போது எனக்கு வயது பதினாறு. சஞ்சிகையின் பெயர் 'ஜயகேரளம்'.

குப்தா: நீங்கள் ஏன் அடிப்படையில் கவிதையே எழுதுகிறீர்கள்?

சச்சி: இதற்குப் பதில் சொல்வது கடினம். கவிதை எனது மதம். வாய்மொழிக் கலைகளில் கவிதையே அடர்த்தியும் உக்கிரமும் வாய்ந்ததென நான் கருதுகிறேன். அது எனக்கு ஆனந்தம் தருவது.

குப்தா: இந்திய இலக்கியத்தில் நவீனத்துவத்தின் பிரதிபலிப்பை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?

சச்சி: நவீனத்துவம் என்பது மயக்கமுண்டு பண்ணும் பிரயோகம். ஓர் அழகியற் பண்பாகப் பிரயோகிக்கப்படுகையில் தாந்தே, ஷேக்ஸ்பியர், காலிப், அல்லது கபிர் முதலானோரிடம் 'நவீன'மான என்றும் வாழ்கிற எவ்வளவோ விடயங்களை நாம் காண முடியும். வரலாற்று ரீதியாகப் பிரயோகிக்கப்படுகையில் நவீனத்துவம் என்பது நம்பிக்கை, விரக்தி, தனிமை, அந்நியமாதல், எல்லையற்ற வளர்ச்சிக்கான சாத்தியப்பாடு, மனித இனம் பூண்டோடு அழிக்கப்படல் போன்ற சிக்கலான, நவீன அனுபவங்களை வெளியிடப் பொருத்தமான புதிய உபாயங்களைக் கண்டு பிடிப்பதற்கான உந்தலைக் குறித்து நிற்கிறது. இந்தியாவில் நவீனத்துவம் என்பது கிராமங்களிலிருந்து வேர்கள் துண்டிக்கப்பட்ட நகர்ப்புற மத்திய தர வர்க்கத்தின் ஐயங்களையும் அச்சங்களையும் பிரதானமாய்ப் பிரதிபலிக்கிறது. இது எவ்வாறிருப்பினும் அறுபதின் பிற்பாதியளவில் பெரும்பாலான மொழிகளில் பல்வேறு வடிவங்களில் புதிய இடதுசாரி கருத்தியலை வெளிப்படுத்தும் புதுத் தீவிரவாத முற்போக்குக் குழுக்கள் (Avant-grade) மேற்கிளம்பின.

வங்காளத்தில் 'பசி கொண்ட தலைமுறை', தெலுங்கில் 'திகம்பரக்காவலு', 'விரசம்' முதலிய குழுக்கள் தோன்றின. மலையாளம், வங்காளம், தெலுங்கு, ஹிந்தி, பஞ்சாபி மொழிகளில் தீவிர சமூக அக்கறையும் புரட்சி வேட்கையும் கொண்ட அநேக கவிஞர்கள் தோன்றினர். பிராந்திய சூழலியல் கவிதைகளுடன் தலித் கவிதை, பெண்கள் கவிதையென மற்றோரலை கிளம்பிற்று. இன்று ஒரு நவீனத்துவம் பற்றியல்லாமல் பல்வேறு நவீனத்துவம் பற்றி நாம் பேச வேண்டியுள்ளது. இவ்வியக்கங்களுட் சில அவற்றின் வேறுபாட்டில் கரிசனை, வெவ்வேறு 'உலகங்கள்' பற்றிய பிரக்ஞை, மரபை நவீன வழிகளில் மீளப் பெறுதல், 'உயர் நவீனத்துவ'த்தின் தன்னறிவுவாத (solipsistic) இருள்மய நோக்கு முதலியவற்றின் மீதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சன நிலைப்பாடு பல்வேறு அம்சங்கள் காரணமாய் 'பின் நவீனத்துவம்' என அழைக்கப் படுகின்றன. வங்காளியிலும் மலையாளத்திலும் 'உத்தர் - அதுனிக்' இயக்கம், மராத்தியிலும் குஜராத்திலும் 'பரிஸ்க்ருதி' அல்லது சுதேசி இயக்கம் இவற்றோடு தலித்துகள், பெண்கள், பழங்குடிகள் முதலானோரின் விளிம்பு நிலை இலக்கியம் முதலியன ஒரு வகையில் பின் நவீனத்துவம் என்ற போதிலும் சுமை மிகுந்த அப்பதத்தினை நான் உபயோகிக்க விரும்பவில்லை. மேற்கத்திய பதப் பிரயோகங்களை, எண்ணக் கருக்களைப் பயன்படுத்தாமலே இந்திய இலக்கியத்தில் காணப்படும் இயக்கங்களை நாம் விளக்க முடியும்.

குப்தா: இந்திய எழுத்தாளர்களின் ஆங்கில எழுத்துக்கள் சமீபகாலமாக அதிக அங்கி காரம் பெற்று வருகின்றன. சுதேச மொழி எழுத்துக்கள் பெருந்தொகையாக மொழி மாற்றஞ் செய்யப்படுகின்றன. பிராந்திய மொழி இலக்கியத்தை உலக மட்டத்துக்கு எடுத்துச் செல்ல எவ்வகை ஆதரவு, உபாயங் கள், வலைப் பின்னல்கள் தேவை?

சச்சி: பிராந்திய மொழி (Vernacular) என்பது அடிமைகளின் அல்லது குடிகளின் மொழி களைக் குறிக்கும் கலோனியல் பதப்பிர யோகம். அதற்குப் பதிலாக இந்திய மொழி கள் என்ற பிரயோகத்தையே பயன்படுத்த விரும்புகிறேன். வாஸ்தவம், இந்திய மொழி களிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிமாற்றஞ் செய்வதில் புதியதொரு ஆர்வம் பிறந்துள் ளது. பெங்குவின், காளி, கதா என்பவற்றுடன் சேர்ந்து ஓரியன்ட் லோங்மன், டிஸா தொகுதி கள், ஈஸ்ட்-வெஸ்டின் 'மானஸ்' தொகுதிகள், மக்மிலனின் 'நவீன இந்திய நாவல் மொழி பெயர்ப்பு' முதலியன இப்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. எனினும் பெரும்பாலான இவ்வெளியீடுகள் அகண்ட இந்திய வாசகர் களுக்கானவை. மொழியாக்கங்களை வெளி நாடுகளில் சந்தைப்படுத்துவதற்கும் ஆங்கில

"என் முன்னோர் யாரும்
புலவர்களோ கவிஞர்களோ
அல்லர். குடும்பச் சூழல்
வறுமை வசப்பட்டிருந்தது.
துணிக் குடையும் வாசனைச்
சோப்பும் மிட்டாய்களும் அபூர்
வப் பொருள்களாயிருந்தன.
கவிதை தொலை தூரத்தில்
ஆகாயத்தில் வான வில்லாக
இருந்தது. கிழிந்த ஓலைக்
குடில் வழியே நான் கண்ட
உலகம் அழகானதாக இருக்க
வில்லை. கிராமம் என்
நெஞ்சில் கூரிய கத்தியாக
இருந்தது.... விளையாட்டுத்
தோழர்களின் உடைகள்
போலவே என் பால்ய காலப்
பகல்களும் அழுக்கடைந்
திருந்தன. இரவுகளோ தூக்
கனவுகளின் களஞ்சியம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாத ஏனைய பிற மொழிகளில் மொழி மாற்றஞ் செய்வதற்கும் நேரம் வந்து விட்டது. சாகித்தி அகாடமி இதனைச் சாதாரண அளவில் செய்ய முயற்சித்து வருகிறது. எனினும் அந்நிய வெளியீட்டு நிலையங்களுடனும் விநியோகஸ்தர்களுடனும் இணைந்து செயற்படுவதற்குத் தேவையேற்பட்டுள்ளது.

குப்தா: அகாடமி செயலாளர் என்ற முறையில் உங்களுக்குள்ள ஓய்வொழிச்சலற்ற வேலைப் பழு மத்தியில் இலக்கியம் படைப்பதற்கு எவ்வாறு நேரம் கிடைக்கிறது? இப்பதவி உங்கள் இலக்கிய முயற்சிகளைப் பாதிக்கின்றதா?

சச்சி: உங்கள் கவலை நியாயமானதே. அகாடமி பணிகள் எனது இலக்கிய முயற்சிகளுக்கு சொற்ப நேரத்தையே விட்டு வைக்கின்றன. காலையில் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள், இருந்திருந்து சில ஞாயிற்றுக் கிழமைகள், பொது விடுமுறைகள் - இவ்வளவே எனக்குள்ள ஓய்வு. இந்நெருக்கடியினால் நேர்ந்துள்ள நன்மை, முக்கியமானவற்றை மாத்திரமே எழுதத் தேர்ந்தெடுக்கிறேன். இது எனது படைப்புகளுக்குப் புதியதொரு இறுக்கத்தை, அடர்த்தியை வழங்கியுள்ளது. அகாடமிப் பணி பிற இந்திய எழுத்தாளர்களுடனும் சில நேரங்களில் வெளிநாட்டு எழுத்தாளர்களுடனும் கருத்துப் பரிமாற்றங்களுக்கு உதவுகிறது. டெல்லி வாசத்தின் போது எனது படைப்பாக்க எல்லைகள் நிச்சயமாக விஸ்தீரணமடைந்துள்ளன. செயலாளராகப் பதவியேற்ற பின்பு கடந்த மூன்றாண்டுகளில் எனது மூன்று கவிதைத் தொகுதிகளை நான் வெளிக் கொணர்ந்துள்ளேன். மலையாளத்தில் உரை நடையெழுதுவதைக் குறைத்துக் கொண்டுள்ள போதிலும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதி வருகிறேன். 'இந்திய இலக்கியம் - நிலைப் பதிவுகளும் பிரமேயங்களும்' என்ற எனது நூலில் இக்கட்டுரைகளுட் சில இடம் பெற்றுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் எனது கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் - 'தாவோ கோவிலுக்குச் செல்வது எப்படி?', 'பூரணத்துவமற்றதும் மற்றும் கவிதைகளும்' எனும் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவற்றுக்கு முந்திய 'கோடை மழை' என்ற தொகுதியும் இத்துடன் சேரும்.

குப்தா: உங்கள் கவனத்தை ஈர்த்த சில நூல்களையும் எழுத்தாளர்களையும் தயவு செய்து குறிப்பிட முடியுமா?

சச்சி: சமீப மாதங்களாக நான் மத்திய கால இந்தியக் கவிஞர்களை அதிகமாகப் படித்து வருகிறேன் என்பது உங்களுக்கு விசித்திரமாகத் தோன்றலாம். பசவேசர், மகாதேவி அக்கா, ஆண்டாள், துக்காராம், வேமண்ணா, ஞான தேவ், கபீர், மீராபாய், புல்லேஷா... இவர்கள் என்னைப் பெரிதும் வசீகரிக்கின்றனர். மிர்ஸா காலிப் இன்றும் எமது சமகாலத்தவரே. சமகால ஹிந்திக் கவிஞர்களில் குறிப்பாக குன்வர் நாராயண், கேதர் நாத் சிங், விநோத் குமார் சுக்லா முதலானோர் எனக்குப் பிடித்தமானவர்கள். சமகால உருதுக் கவிஞர்களில் மிகச் சிறந்தவர் பாக்கிஸ்தானின் அஃப்ஸல் அஹ்மத் ஷஹீத் என நான் கருதுகிறேன். இவர் புத்தம் புதுமையோடும் மிகுந்த வலிமையோடும் திகழ்கிறார். சிம்போர்ஸ்கா, தோமஸ் டிரான்ஸ்ட்ரோமர் இருவரும் சமீபத்தில் என்னைக் கவர்ந்த அந்நிய எழுத்தாளர்கள். அப்புறம்... நாவலாசிரியர்கள் - கஸான்ட்ஸாகிஸ், மிலான் குந்தேரா, காசியா மார்க்குவேஸ், ஜே.எம்.கொயட்ஸே... இவர்கள் எல்லாக் காலங்களிலுமே எனக்கு விருப்பமானவர்கள். இன்னும் அநேகர் உள்ளனர்.

குப்தா: பொதுவாக இலக்கியத்தை, குறிப்பாக இந்திய இலக்கியத்தை முன்னெடுப்பதற்கு இணையத் தளத்தைப் பயன்படுத்துவது குறித்து என்ன கருதுகிறீர்கள்?

சச்சி: இந்திய இலக்கியத்தை முன்னெடுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்கு நாம் இணையத் தள வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனினும் இணையத் தளத்தில் வழங்கப்படும் விடயங்கள் மிகக் கவனமாய்த் தெரிவு செய்யப்பட்டனவாய் இருத்தல் வேண்டும்.

குப்தா: அகாடமி இணையத் தளத்தின் இலக்கு யாது?

சச்சி: தற்போது எமது இணையத் தளம் சாகித்திய அகாடமி பற்றிய அடிப்படைத் தகவல்களை மட்டுமே வழங்கி வருகின்றது. நூல் விவரப் பட்டியல்கள், இந்திய இலக்கியப் படைப்பாளிகள் பற்றிய விவரங்கள், ஊடாடும் தளம், சில படைப்பாக்கங்கள் என இதை விஸ்தரிக்க எண்ணியுள்ளோம்.

குப்தா: அகாடமி செயலாளர் என்ற முறையில் உங்களது வருங்காலச் செயற்திட்டம்?

சச்சி: ஒரு சில திட்டங்கள் உலைக்களத்தில் உள்ளன. பிரதான இந்திய இலக்கியப் படைப்புகளை அந்நிய மொழியில் பெயர்த்தல், பழங்குடியினரின் வாய் மொழி இலக்கியத் தொகுப்புக்களின் தொடர், இந்திய இலக்கியத்தின் மிகவும் திருத்தமாக கலைக் களஞ்சியம், விநியோக - விற்பனைப் பொறி முறையை விருத்தி செய்தல், அகாடமியின் பொன் விழா ஏற்பாடுகள், இந்திய இலக்கியத்தின் ஆவண வைப்பகத்தை விரிவு படுத்தல், இளம் எழுத்தாளர்களின் நூல்கள், இந்திய இலக்கியங்களின் வரலாற்றுத் துணை நூல்கள் முதலியவற்றைப் பிரசுரித்தல், இந்திய மொழிகளில் பெண் எழுத்தாளர்களின் தொகுப்புக்களின் தொடரொன்று என அநேக திட்டங்கள்...

குப்தா: உங்களது படைப்பிலக்கியச் செயற்பாடுகளுக்கான எதிர்காலத் திட்டங்கள்?

சச்சி: கவிதைகள் முன் கூட்டியே திட்டமிடப் படுவன அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். எனினும், கேரளா பற்றிய கவிதைகளின் தொடர் ஒன்றினையும், இந்தியாவின் ஆத்மீகக் கவிஞர்கள் (Saint poets) பற்றிய மற்றொரு தொடர் ஒன்றினையும் தயாரித்து வருகிறேன். இவ்விரு தொடர்களுக்குமான கவிதைகள் சிலவற்றை ஏலவே எழுதி விட்டேன். 'சிராமன' கவிதைகள் என நான் குறிப்பிடும் மாற்று இந்திய கவிதைகள் மீதான நூலொன்றினையும் எழுதி வருகிறேன். இது இந்திய எழுத்துக்களில் விசேடமாக பக்திக் கவிதைகளை உள்ளடக்கிய விளிம்பு நிலை எழுத்துக்களில் உள்ளுறைந்திருக்கும் மேலாண்மை எதிர்ப்புக் கொள்கையைக் குறிக்கும்.

குப்தா: வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கான உங்களின் ஆலோசனைகள் யாவை?

சச்சி: முப்பது வருடங்களுக்கு மேலாக எழுதி வருகின்ற போதிலும் நான் ஆரம்ப எழுத்தாளனே. ஒவ்வொரு புதிய அனுபவமும் ஒரு புதிய வெளிப்பாட்டு முறையை, வார்த்தைக் கட்டமைப்பைக் கோரி நிற்கிறது. புதிய எழுத்தாளர்கள் அவர்களது அனுபவத்துக்கும் மொழிக்கும் விசுவாசமானவர்களக இருத்தல் வேண்டும் என மட்டுமே அவர்களை நான் கேட்டுக் கொள்ள முடியும். புதியதொரு அனுபவத்துக்கு நீங்கள் விசுவாசமானவர்களாக இருப்பின் இலக்கியத்தில் அற்புதமானதாய், மந்திர சக்தி வாய்ந்ததாய்க் கருதப்படும் அம்சம் உயிர்ப்புடன் விளங்கும் வகையில் நீங்கள் புளித்துச் சலித்துப் போன பிரயோகங்களைத் தவிர்த்துக் கொள்வீர்கள். □

நன்றி:

மேகதூதம் இணையத்தளம்

பேட்டித் தமிழாக்கம் :

பண்ணாமத்துக் கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமிகளின்

அமாவாசை

'என்ர மனிசி
வட்டப் பொட்டு வச்சா
நிலவுக்குள் இன்னொரு நிலவுதான்...'
என்ற தாத்தாவின் சொற்களில்
தன் இளமை உணர்கிறாள்
உன் பாட்டி
சுருங்கிய தோலிடையும் விரிகிறது நாணம்

'மறுவுளது மதிக்கழகு என்பது போல்
மச்சம் முகத்துக்கு'
என்ற உன் அப்பன் பொய்யில்
தாய் மயங்கிய போதிலதான்
உன் உருவு ஆகியது
இன்னொரு நிலவும் வந்துவிட்டது
உன்னால் பூமிக்கு

நீ மனதில் கட்டி வைத்திருந்த
மன்மத குமாரனை உழக்கி மிதித்து
வந்தமைகின்ற எவனோ ஒருத்தன்
'உன் நெற்றிப் பிறை கண்டுதான்
என் நோன்பு முடிப்பேன்'
எனும் புளுகை
உன்னிடம் அவிழ்க்காமல் விடமாட்டான்

ஆண்டவனை விட ஆண்கள் பரவாயில்லை
எத்தனை நிலவுகளை
சிருஷ்டித்து விட்டார்கள்

அட...
உன் பாட்டியின் பொட்டாய்
அம்மாவின் மச்ச முகமாய்
உன் நெற்றியாய்
இன்னும் உனது மகளின் பேர்த்தியின்
ஒவ்வொன்றாய்க் கிடக்கும்
அந்த நிலவிடம் இருக்கிறது
தேய்தலும் வளர்தலுமான உயிர்ப்பு

'யாத்ரா' கவிதைப் போட்டியில்
ஒன்பதாம் இடம் பெற்ற கவிதை

எஸ். பாஸ்கரன்

மூச்சுக் காற்று முடியும் வரை

ஏவியதைச் செய்து
எறிந்ததை உண்டு
வீசியதை உடுத்து
விதித்தபடி நடந்து
கொத்தடிமையாய்க் கிடக்க
எனக்கு
கொஞ்சமும் இஷ்டமில்லை

அஞ்சிக் கிடப்பதற்கும்
கெஞ்சிப் பெறுவதற்கும்
என்னையும் உன்னையும்
நம்மன்னை பெறவில்லை

எச்சில் எலும்பிற்காய்
உச்சி வரை பணிந்து
நல்ல பதவிக்காய்
நச்சுக் கருத்தேற்று
சிந்தனை தொலைத்து
நிந்தனைக்குள் வாழ
நீயும் நானும் நிழல்களல்ல-
நிஜங்கள்

நம் புஜங்களின் பலத்தை
நாமே புரியவில்லை
நம் சின்ன விரல்களின்
வலிமை போதும்
எந்தச் சிகரத்தையும்
சிதறடிக்க

நமது மூச்சுக் காற்று
முடியும் வரை
ஏச்சும் பேச்சும் இருந்து வரும்
என்றாலும் நாம்
இலட்சியத்தை நோக்கி
இடைவிடாமல்
இயங்கிக் கொள்வோம்

- யூ.எல்.எம். நஜீப்

கனிந்த நீளமான இரவு

கனவின் பாதச் சுவடு
எப்போதும் போல் விழிகளுள்

அடர்ந்த கடலின் சீற்றம்
தனிமைக் கரையில் முட்டியது

நிலவுப் பூச்சு மங்கிய
வைகறை
துயில்களின் துயில் கலையா
மயக்கத்துடன்
மெத்தையில் ஊறியிருந்தது
உன் வியர்வை ஜவ்வாது

பரவச மந்திரம் ஜெயித்தபடி
நட்ஷத்திரங்கள்
வெடித்துச் சிதறின மண்டைக்குள்
நான் கரைந்து படிந்தேன் உன்னில்

கோத்துப் பிணைத்த
விரல்களுக்கிடையில்
பீறிட்ட அன்பை
நுனி நாவால் துழாவியபடி
பிரிவு சென்றது

இரவே
என் சௌந்தர்யங்களைக்
கொத்தி விரட்ட
எந்தப் புற்றுக்குள்ளிருந்து
வந்தாய்

24.03.04

- ஓட்டமாவடி அறபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இலங்கைத் திரு நாட்டில் சேனைப் பயிர் செய்யும் (சிங்கள) கமக்காரப் பெருமக்களின் வாழ்வில் 'ஜனகவிய' எனப்படும் வாய் மொழிப் பாடல்கள் பிரசித்தி பெற்றவை. இவை யாவும் மரபுசார் கவிதைகளாகவும் வெவ்வேறு சீர்களை அடிப்படையாகக் கொண்டவையுமாகும்.

பழமைசார் மக்களின் வாழ்வின் அனைத்து அங்கங்களிலும் 'மக்கள் பாடல்கள்' இயல்பாகவே உபயோக மானதாயிருந்தது. கிராம மக்கள் தங்களின் அன்றாட வாழ்வினை நடத்திச் செல்லும்போது அன்பு, காதல், இன்ப துன்பங்கள், அரசியல் வாழ்வு மற்றும் செய் தொழில் என்பவற்றையெல்லாம் பாடல்களாக்கினர். இவற்றுக் கிடையில் திருமணம், காதல் விவகாரங்கள் போன்றவற்றை மிகையாக்கிக் காண்பிக்கும் பாடல்களும் உள்ளன.

மக்கள் கவிதைகளும் அவர்தம் வாழ்வும்

தனது காதலியைச் சந்திக்கச் செல்லும் கிராமத்து இளைஞன் தன் உள்ளக் கிடக்கையை பாடலின் மூலம் இவ்வாறு வெளிப்படுத்துகிறான்: -

பிரிய பெண்ணே எனை நோக்கி உன் கடைக்கண் காட்டு
முழு இதயமும் நிறையும் நீ காட்டும் அப்பார்வையால்
எனை விடுத்து உன் இதயம் வேறெவர்பால் சென்று விடின்
படும் துயரை ஏலவே எனக்கு அறியத் தருவாய்

பெண் என்பவள் சமூகத்தின் வேறுபடுத்தப்பட இயலாத பிரதான அங்கம் என்பதை ஆண்கள் புரிந்து வைத்தமை ரகசியமல்ல. விவசாயிகளுக்கு உரித்தான அழகியவை நான்கெனின் அவை, சேனைப் பயிர் அல்லது வயல்வெளி, காவற்குடில், மலர்கள் அத்துடன் பெண்ணுமாகும். இந்நால்வகையாவன அவனது வாழ்வில் மனநிறைவு, சுகம், நிம்மதி என்பனவற்றைக் கொணர்ந்திடும்.

வயல் நிலப் பெருமை அதன் நெற் செழிப்பில்
குடிலின் பெருமை அதன் பயிர் காத்தலில்
மலரின் பெருமையது கிளை நுனியில் மலர்தல்
பெண்ணின் பெருமை யவள் களங்கமில் அழகில்

விவசாயி பயிர்க் காவலில் ஈடுபடும் போது அவனுக்கு பல்வகையிலும் உதவுமுகமாகவும் உணவு தயாரித்துக் கொடுக்கவும் அவன் வைகறையில் சேனைப் பயிர் நாடியோ வயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கோ செல்லும் போது தேவையானவற்றையெல் லாம் கொண்டு செல்லவும் இல்லத்தரசியின் உதவியினை எதிர்பார்ப்பது வழக்கம். அவளில்லாத் தனிமையில் பயிர் காக்கும் விவசாயி குரலெடுத்துப் பாடும் பாடலுக்கு உதாரணம் இது: -

மனிதர் விலங்கினம் இல்லையெனில்
வறுமை எதற்கு
பயணம் செய்ய முடியாவிடின்
அப்பாதை எதற்கு
கீழ்விழுந்து புரளாவிடின்
மதுபோதை எதற்கு
வாழ மனையாள் இல்லையெனில்
வாழ்வு எதற்கு

இப்பாடலைக் கேட்ட தூரத்து சேனைப் பயிர் நிலத்தைக் காவல் புரியும் கிராமத்து ரச மணாளன் தனது காதலிக்கு அவனது உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்து கிறான்: -

பொன் மலர் போல்
அவள் அழகில்லா விடினும்
குமுதம் போல்
வெண் ரூபாக்கள் இலையெனினும்
அழகுள்ள சருமந்தான்
இலையெனினும்
அப்படியோர்
கதை சொலாதே மச்சாளுக்கு

கிராம மக்கள் வாழ்வில் காதல் என்பது சொத்து, சுகங்களை எதிர்பார்த்து வருவதல்ல. இருவருக்கிடையில் எழும் நம்பிக்கையாலும் நேர்மையான உறவாலுமே உருவாகிறது. அன்றைய கால கட்டத்தில் சீதனத்தையோ பணத்தையோ எதிர்பார்க்காத ஒரு மருமக னுக்கும் மாமியாருக்கும் இடையில் பாடலில் நிகழும் உரையாடல் இது: -

'மாமி, சித்திரைத் திங்களில்
உன் மகளைத் தருவாயா'
'பணமில்லை யெனில்
அது எப்படியாகும் மருமகனே'

சிங்களத்தில்:
(G)கொங்கிதொட்ட பிரேமரத்ன

தமிழில்:
கவிஞர் ஏ.எம்.ஆறுமுகம்

'பணம் இல்லா விடினும்
மரம் செடி கொடி நல்லது'
'அதைப்பற்றி நான் உன்
மாமனுக்குக் கூறுவேன் மருமகனே'

தனது காதலியை வீட்டுக்கு வருமாறு அழைக்கும் காதலன் தன் அடிமனத்தே எழும் காதல் தீக் கொழுந்தால் அவள் இதயத்தைக் கவர இப்படி அழைக்கிறான்: -

காதல் வளர்க்கும்
பண்டாரமெனிக்கே உனக்கு
மாலை ஒன்று
செய்தே தருவேன் கழுத்துக்கு
கோலம் காட்டி
தாமதம் செய்தால் நம் ஊர்க்கு
விதானையாவேன்
பண்டார மெனிக்கே உனக்கும்

ஒரு விவசாயி எதிர்பாராமல் சந்திக்கும் அழகியைப் பார்த்துப் பாடுகிறான் இப்படி: -

குழியின் ஆழம் அறியும்
சிறு ஈக்குஞ்சு
மலரின் மணமறியும்
சிறுதேன் வண்டு
வனத்தின் விசாலம் அறியும்
ஒரு பெரும் யானை
பெண்ணே அங்கு நில்லாய்
நான் பித்தாவேன்!

கருந்துறையில் நானிறங்கி
நீராடும் வேளை
அழகிய பெண்ணொருத்தி
வந்தாள் முன்னிலையில்
கழுத்தினழகால்
அணிந்த ஓர் முத்துச் சரம்
கொண்டோடிச் செல்ல
நினைத்தேன் சிறை மீட்டு! □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையாகாத ஆவேசமான வரிகள்



சிங்கள மொழியில்: **அனுர கே. எதிரிசூரிய**
தமிழில்: **இப்னு அஸுமத்**

நத்தைகளாவோம் நாம் –
எவருடைய தேனும்
கால்களில் மிதிபடும் வரை
வாழும்

ஒரு நாளேனும்
உயிருடன்சந்திக்காத
நண்பனொருவன்தூங்குகிறான்
புற்றரையின் கீழ

ஜன்னலுக்கு அப்பால்
சின்னப் பையனொருவன்
தாளத்துடன்
கவிதை பாடுகிறான்
அவனது பாதங்களின் கீழும்
கண்ணி வெடியொன்று...
எவரும் அதைப் பற்றிக்
கணக்கெடுப்பதாய் இல்லை

ஒரு சிகரட் வாங்கும்
பணத்தில்
ஆறேழு டொபிகளோ
சொக்லட் ஒன்றோ
வாங்க இயலும்

என்றாலும்
சிகரட் வாங்கும்
பழக்கத்திலிருந்து
நான் விடுபடவில்லை

டொபியும் சொக்லட்டும்
இனிப்பானவை
வாழ்க்கைக்கு இனிமையூட்டும்
எவரினதேனும் கால்களில்
மிதிபடும் வரை வாழும்
நத்தைகள் எனில் நாம்
டொபி, சொக்லட் எதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சத்திற்குக் கஞ்சி கேட்கும்
குழந்தைகளுக்கு
முதலாளிமார்
இலவசமாகவே
தோட்டாக்களைக் கொடுக்கிறார்கள்

யுத்தச் செய்திகளை
விரட்டியடித்துக் கொண்டு
மனிதர்கள்
கதவுகளைத் தாழிட்டு விட்டு
படுக்கைகளில் கால்களைப்
பின்னிக் கொள்கின்றனர்

எல்லாப் பேனைகளுமே
மலட்டுப் பெண்களைப் போல...

கவிதை எழுதுகின்ற
என் நண்பர்களுக்கு
சின்னதாக ஒரு அழைப்பு
விடுக்க எண்ணியுள்ளேன்

எல்லாப் பொக்கற்றுகளிலும்
பேனையல்ல -
பிஸ்டல்களை
வைத்துக் கொள்ளவும்

அடுத்தவரைச்
சுடமுடியாதவிடத்து
பிஸ்டலின் உதடுகளின்
சுவையை
சத்தமது காதுகளில் வைத்து
அனுபவித்துக்
கொள்ள வேண்டும்

பற்களைப் பற்றி
அனைத்து இடங்களிலும்
தற்போது விசாரிக்கின்றனர்

விட்டுச் செல்லும் முன்பதாக
எனக்கு நீ
நோவு உண்டாக்கிய நாட்களில்
மௌனமாக இருந்த
அனைவருக்கும்
விளங்கி விட்டுள்ளது
எனக்கு நீ இல்லாதது
பெருங் குறை என

கழன்று விட்டதா
கழற்றப் பட்டதா
என்ன நடந்தது
பல் எங்கே
எங்கே... எங்கே....

என்னை விட
எனது பல்லைப் பற்றி
அடுத்தவர்கள்
கவலைப்படுவதுதான்
எனக்குக் கவலையாகவுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அபூ அஸ்ஹர் -

பேட்டர்ஸனும் எலியட் விருதும்

ஆங்கிலக் கவிஞரான டொன் பேட்டர்ஸன் ஆறு வருடங்களுக்குள் இரண்டாவது முறையாக சிறப்பு மிக்க ரி.எஸ். எலியட் கவிதை விருதை வென்றிருக்கிறார். இதன்படி ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த 40 வயதான பேட்டர்ஸன் 'பொயற்றி புக் சொஸைட்டி'யின் விருதை இரண்டு முறை பெற்றுக் கொள்ளும் முதல் நபர் என்ற பெருமை பெறுகிறார்.

19.01.2004 கிடைத்த தகவலின்படி 'Landing light' என்ற அவரது கவிதை நூல் கடந்த 12 மாதங்களுக்குள் பிரிட்டனிலும் அயர்லாந்திலும் வெளிவந்த கவிதைத் தொகுதிகளில் அதி சிறந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதற்கான பரிசான 10,000 ஸ்ரேலிங் பவுண் பணத்தை லண்டனில் நடை பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் கலைத்துறை அமைச்சர் எஸ்டல் மொரிஸி டமிருந்து பெற்றுக் கொண்டார்.

நன்றி:
பி.பி.சி.கொம

கவிதை நூற் தெரிவுக் குழுவில் பிரபல்யம் மிக்க கவிஞர்களான ஜோர்ஜ் ஸேர்ட்ஸ், டேவிட் ஹார்ஸென்ற், மிமி கல்வதி ஆகியோர் அடங்கியிருந்தனர். குழுவுக்குத் தலைமை வகித்த ஜோர்ஜ் ஸேர்ட்ஸ், 'இக்கவிதை நூல் மிகத்துணிவான அதிகாரத்துடனும் ஆழமான உணர்வுடனும் பேசுகிறது. அதே வேளை கலை நயத்துடனும் மிக நேர்த்தியாகவும் கோக்கப் பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

1953ம் ஆண்டு கவிஞர் ரி.எஸ்.எலியற்றினால் ஆரம்பிக்கப்பட்ட 'பொயற்றி புக் சொஸைட்டி' அவரது பெயராலேயே இந்தப் பரிசினை வழங்கி வருகிறது. கவிஞர் லோரேற் அன்ரு இந்தப் பரிசுபற்றிக் குறிப்பிடும் போது 'கவிஞர்கள் வெல்ல வேண்டிய பரிசு இது' என்று ஒரு முறை தெரிவித்திருந்தார்.

ஸ்கொட்லாந்தின் டண்டீயைச் சேர்ந்த பேட்டர்ஸன், தனது 'God's gift of women' என்ற கவிதை நூலுக்காக எலியற் பரிசினை 1997ல் முதன்முதலில் பெற்றுள்ளார். இது தவிர மூன்று முறைகள் ஸ்கொட்டிஷ் ஆர்ட் கவுன்சில் விருதும் ஜெஃப்ரி ஃபெபர் ஞாபகார்த்த விருதும் உட்பட பல்வேறு இலக்கிய விருதுகளை வென்றவர்.

பத்திரிகை ஆசிரியர், எழுத்தாளர், இசை விற்பன்னர் என்ற பல்வேறு திறமைகள் கொண்டவர் பேட்டர்ஸன். வானொலி, மேடை நாடகங்கள் எழுதுவதிலும் வல்லவராகத் திகழ்கிறார். பல்வேறு தினசரிகளில் விமர்சனம், பத்தி ஆகியவற்றை எழுதியும் வருகிறார்.

ஜாஸ் கிற்றார் வாத்தியக்காரராகவும் சக்கை போடு போடும் பேட்டர்ஸன் இதுவரை ஐந்து அல்பங்களையும் வெளியிட்டிருக் கிறாராம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரின் முடிச்சுகளில்...

என்னதான் செய்கிறாய் நீ
நீ உற்றுக் கேட்டதில்லையா
உனக்கான என் பாடல்களில்
என் மனம் வழிந்து கிடக்கிறது
உன்னில்
சோகை பிடித்துப் போய்விட்ட
என் நினைவுகளில்
உயிர்ப்பைத் தேடும்
என் அறியாமையை என்னவென்பது

இரவின் பெருமூச்சுக்களில்
ஒரு கணம் நீயும் நானும்
தீய்ந்து போய்விட வேண்டுமென்ற
ஓர் உயிரின் குரல்
வெறும் ஓலமாகவேதான்

என்னதான் செய்கிறாய் நீ

குருதியின் துணிக்கைகளில்
தங்கிவிட்ட ஞாபகங்கள்
எனக்கு மட்டும்தானா

உன் நிஷ்டை கலையக் கூடாதென்றா
கண்களை மூடிக் கொள்கிறாய்

அலையோசையின் மத்தியில்
அடங்கிப் போய்விடும் என்
கத்தல்கள்
உனக்குக் கேட்காமலே
என் கனவுகளின் தொலை தூரத்தில்
நீ நிரந்தரமாய்த் தங்கி விட்டாய்
என்னைச் சந்திக்க விரும்பாமலே

ஷர்மிலா ஏ றஹீம்

'யாத்ரா' கவிதைப் போட்டியில்
பத்தாம் இடம் பெற்ற கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சம் விழும் இடம்

அக்கரை மாணிக்கம்

1963ல் 'கலை முரசு' கவிதைப் போட்டியில் முதற்பரிசு வென்று சம்மாந்துறையில் பெற்ற பாராட்டுப் பத்திரம், 1968ல் இலங்கைக் கலைக் கழக ஏற்பாட்டில் 'லும்பினி' அரங்கில் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞனாகவும் இயக்குனராகவும் பெற்ற பாராட்டு, 1993ல் மோடி மண்டபத்தில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்ட கௌரவம் மற்றும் வழங்கப்பட்ட 'கலைத்திலகம்' பட்டம், பாண்டிருப்பு இந்து மாமன்றம் வழங்கிய 'முத்தமிழ்த் திலகம்' விருது, 1995ல் மருதமுனை சமாதானம் அமைப்பு வழங்கிய 'இந்து முஸ்லிம் ஒற்றுமைப் பாலம்' பட்டமும் பாராட்டும், அதே ஆண்டில் அக்கரைப்பற்று தேசிய கலை அமைப்பு வழங்கிய 'கவி ஒளி' பட்டம் 1999ல் ஆலையடி வேம்பு பிரதேச கலாசார பேரவை தந்த 'கவிஞானி' பட்டம், 2000ல் சாய்ந்த மருது 'அபாபீல்கள் கவிதா வட்டம்' வழங்கிய 'தமிழ் நதி' சிறப்பு விருதோலை, 2001ல் திருக்கோயில் உதய சூரியன் கலாமன்றம் அளித்த 'அரியநாயகம் விருது'ம் பொன்னாடைக் கௌரவமும்....

இவற்றோடு -

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள், வில்லுப் பாட்டுகள், கும்மி, கோலாட்டம், கூத்து என்று கலை இலக்கியத்தின் பல்வேறு துறைப் பங்களிப்புகளுடன் வருடா வருடம் மீலாத் கவியரங்குகளில் களைகட்ட வைக்கும் கவிஞர் தென் கிழக்கில் ஒரே ஒருவர்தான் இருக்கிறார்.

அவர்தான் - அக்கரை மாணிக்கம்!

தக்கரையும் தகாரையும் தரங் கண்டே
அக்கறையும் ஆவலுமாய் அவாவுகின்ற
சர்க்கரைச் சொற்களைச் சொரிகிற - எங்கள்
அக்கரை மாணிக்கமே எழுக... வருக...

என்று கவியரங்குகளின் பொற்காலம் என அழைக்கப்படும் 1970களில் தென்கிழக்குக் கவியரங்குகளில் அழைக்கப்பட்ட அக்கரை மாணிக்கம் எனும் மக்கள் கவிஞன் 1939ல் அக்கரைப்பற்றில் பிறந்து வைரமுத்து ஞானமாணிக்கம் என்ற இயற்பெயருடனும் மனம் நிறைந்த தனது கவிதைகளுடனும் 'சிவபதி' பாண்டிருப்பில் வாழ்ந்து வருகிறார். நமது சந்திப்பில் சக கவிஞர்களுடனான தமது ஞாபகங்களை மட்டும் மீட்டினார்.

சந்திப்பு:

என்.ஏ.தீரன்

"1970க்கு முன்னரே கவியரங்குகளின் காலம் என்ற அந்தப் பொற்காலம் பூக்கத் தொடங்கி விட்டது. கவிஞர்கள் ஏராளம்... ஈழமேகம் பக்கீர்த் தம்பி, நீலாவணன், பாண்டியூரன், பஸீல் காரியப்பர், மணிக் கவிராயர், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், மு.சடாட்சரன், அன்பு முகையதீன், பொன். சிவானந்தன்... இப்படியொரு பட்டாளம்!

கவிஞர் பாண்டியூரனுடனும் பஸீல் காரியப்பருடனும் மிக இறுக்கமாகவும் நெருக்கமாகவும் பழகியிருக்கிறேன். நீலாவணன் ஒரு நிறைவான கவிஞர். எதிலும் நிதானமாகவும் நிர்ப்பயமாகவும் நடந்து கொள்ளக் கூடியவர். பல கவிஞர்களுக்கு அவர் ஒரு நடை வண்டி. கலாநிதி நுஃமான் அமைதியானவர். ஆளுமை மிக்கவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்டிக் கொள்ளாதவர். அவரது 'கவிஞன்' மூலம் கவரப்பட்டவன் நான்.

பாண்டியூரன் என்னிடம் நிறைந்த அன்பு பூண்டவர். மேடைக் கவியரங்கு களிலும் வானொலிக் கவியரங்குகளிலும் என்னை இனம் காட்டியவர். அவரோடு ஒரு பொங்கல் கவியரங்கில் கலந்து கொண்ட போது அவர் -

'கருங்கொடியூர் ஐங்கரனின்
களத்தினிலே பிறந்த நதி
கனிகளில் மா
அருங்கலைகள் நடை பயிலும்
அக்கரைப் பற்றீன்ற
தமிழ் அழைந்த நெஞ்சம்'

என்று என்னை அமரர்களான 'தினபதி', 'சிந்தாமணி' ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் மற்றும் வானொலியைச் சேர்ந்த திரு. சிவஞான சுந்தரம் போன்றோருக்கு அறிமுகம் செய்தவர். நெஞ்சில் பட்டதை வஞ்சனையின்றி சொல்லும் குணம் கொண்டவர். அவர் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களுக்கு 'கவிதைக் குரு தட்சணை' செலுத்தியே எந்தக் கவியரங்கையும் ஆரம்பிப்பார்.

'எழுத்தறிவும் பொருளறிவும்
இலக்கியத்தின் சுவையறிவும்
எனக்குத் தந்து
வழுத்துமுயர் சான்றோரின் மத்தியிலே
எழுத்தாளும் வன்மை செய்த
பழுத்த தமிழ்ப் பேராசான்
பாமகளின் பொற்றவிசு பரந்த ஆழிச்
சமுத்திரமாம் புலவர் மணி
சரிபுத்தீன் தாளில் என்
தமிழை வைத்தேன்...'

தென்கிழக்கின் 'தமிழ்த் தாத்தா'வான மருதமுனை புலவர் மணி ஆ.மு.ஷரிபுத்தீன் ஐயா அவர்கள் ஒரு மறக்கொண்ணா மனிதர். புலவர் மணி ஐயா அவர்கள் தலைமையில் மருதமுனை அல் மனார் கவியரங்கில் ஓர் இந்துவான நான் "அருளாளன் அல்லாஹ் வின் திருநாமம் மறவாத அன்பர் சூழ் மருதமுனை...' என்று ஆரம்பித்து புலவர் மணி ஐயாவைப் பற்றி அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் நான் பாடிய கவிதைகளைக் கேட்டு மண்டபமே உருகியது இன்னும் என் நினைவில் உள்ளது.

பாவலர் பஸீல் காரியப்பர் ஒரு பாவல்லவர். நகைச் சுவை உணர்வு மிக்கவர். ஒரு முறை கல்முனை சாஹித்திய விழாக் கவியரங்கில் இளங் கவிஞர்கள் மத்தியிலே நாங்களிருவரும் தனித்து விடப்பட்ட போது, 'மச்சான்.. நம்மை இதில் புலவர்கள் என்றா... இல்லை கிழவர்கள் என்றா தள்ளிவிட்டார்கள்?' என்று கேட்டு வெடிச் சிரிப்பெழ வைத்தவர் எனது அருமை நண்பர் பாவலர். அவருடன் பழகுவது ஒரு சுகானுபவம்." □

கேள்வி: ஓராயிரம் சந்தக் கவிகளின் சொந்தக் காரரே... உங்களின் சொந்தக் கவிதைத் தொகுதி எந்த நிலையில் உள்ளது?

பதில்: (கடகடவெனச் சிரிப்பு) சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும். இது திருவிளையாடல்தான் தீரரே!

கே: சமீபத்தில் 'கலாபூஷணம்' விருதுக்கான பட்டியலில் முதல் வரிசையில் தங்களது பெயர் உள்ளடக்கப்பட்டிருந்து பின்னர் கழற்றி விடப்பட்டதாக ஒரு செய்தி வந்ததே?

ப: (மறுபடி சிரிப்பு) இது பற்றி நான் ஏதும் கூறி நான் கட்டிக் காக்கும் எனது தன்மான உணர்வையும் என்னை நம்பியுள்ள 300 அறநெறிப் பாடசாலை மாணாக்கரின் எதிர்கால நன்மைகளையும் பாழாக்க விரும்பாமல் வாளாதிருக்கிறேன். எனினும் சொல்வேன்.. இப்பட்டத்தை விடவும் 'அந்நுஸ்ரத்' அமைப்பு மூலமாக மருதமுனை மக்களால் 2004ல் வழங்கப்பட்ட 'கலாசோதி' விருதை உயர்வாகப் போற்றுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியமாதல்

உணர்வுகள் செத்தாயிற்று
வாழ்தல் மிகமிகக் கடினம்
என்கின்ற போதும்
இன்னும் இன்னும்
வாழவே முயல்கிறேன்

பச்சைக் குழந்தையின்
விழிகளை விட
மென்மையானது என் மனம்
இனி எவ்வாறு
ஏழு வானம் ஒன்றாய் எரிகின்ற
துயரினை உள் வாங்கி வாழ்வது

எனக்குரிய
மாணிக்கங்களையெல்லாம்
மண்ணாங் கட்டிகளாக மாற்றுகின்ற
சூழலில் இருத்தல் இயலாத ஒன்று

மாடேறி மிதித்தவனை
மதம் கொண்ட யானைகள்
உதைத்தலாய்
என்னுடைய நிகழ் காலம்

பூந்தோட்டத்தைத் தரிசிக்கும்
இதயத்துக்குள்
நெருப்புச் சட்டிகளைத் திணித்தல்
இங்கு சாதாரண நிகழ்வாயிற்று

சந்திரனை முகத்தில்
அப்பிக் கொண்டு
சாத்தான் பிள்ளைகளாகத்தான்
எல்லோரும் வாழ்கிறார்கள்

பிறப்புப் போலவே உள்ள
உண்மைக்கு கல்லடி
தங்கப் போர்வைக்குள் இருக்கின்ற
பொய்க்கு நல்ல கிராக்கி

எல்லாம் அந்நியம்
அந்நியம்தான் எல்லாம்
இதுதான் உலகமாயிற்று

இருந்தும்
இன்னும் இன்னும்
வாழவே முயல்கிறேன்

ஏ.எச்.எம். நவாஸ்

விஷப் பாதங்கள்

கடலை விட்டு வெளிவர
தவித்துக் கொண்டிருக்கும்
அலைகளின் தடுப்புச் சுவர்
கரைகள் அல்ல
மனிதக் கால்கள்தான்

பூமியில்
எந்த விஷ ஜந்துக்கள்
போனாலும்
போன இடத்தில்
பூக்கள் பூக்கும்

ஆனால்
மனிதன் நடக்கும்
எந்த இடத்திலும்
சிறு புற்கள் கூட
முளைப்பதில்லை

பாதத்தில் விஷத்தோடு
நடக்கும் மனிதக் கால்களுக்கு
பயந்து பயந்து
கடலுக்கே திரும்பி வருகின்றன
அலைகளும்
அதன் சோகங்களும்

- குறிஞ்சி இளந்தென்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்படாத பக்கம்

தவ சஜிதரன்
மாத்தளை

ஓ.... தாய்த் தேசமே...

உன் சரித்திரச் சுவடுகள் பற்றிச் சொன்னார்கள்
தேடலின் பின் தென்பட்டது கைகளில்
அருகிற் கிடந்தாலும்
அருகிக் கிடந்தது அது - மனிதங்களைத் தொலைத்து
பூச்சிகள் அரித்துக் கிடந்த அந்தப் புத்தகத்தை
புரட்டிப் பார்க்க ஒப்பவில்லை மனம்

செங்கோல் சுமந்த கரத்தினின்
போலி முகங்களாய்
உரிமை நலிந்து எழுந்தவர் மனத்துப்
பொறிகளாய் புரைகளாய் புண்களாய்
புழுதி வாரி இறைத்தாற் போல்
நேற்றைய பக்கம் வரை இறுக்கி எழுதப் பட்டுப்
பூச்சிகள் அரித்துக் கிடந்த அந்தப் புத்தகத்தைப்
புரட்டிப் பார்க்க ஒப்பவில்லை மனம்

உதிரம் குழைத்து ஓவியஞ் சமைத்தும்
பிசகிக் குறித்த பிழைகள் நிறைத்தும்
வெளுப்பின் நிறத்தைக் கறுப்பாய்த் திரித்தும்
செய்த
கேட்பார் இல்லாக் கிறிசல்களுள்
அதனையும் ஒன்றாய் ஒதுக்கத் துணிந்தேன்

எனினும்
நாளைய பக்கம் என்ற ஒன்று
விரிக்கப் படாத வெள்ளைக் காகிதமாகவே
விரலிடுக்குகளில் உளது
இது தன்னை எழுத வேண்டி நிற்பது
குருதிப் பசியின் கோரந் தணியாக்
கூளப் பேய்களை அன்று
மனிதரை... மனிதரை... மனிதரை மாத்திரமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி

'யாத்ரா' 12வது இதழ் படித்தேன். கவிதைகளின் பன்முகத் தன்மை - மனங் கொண்டு படிக்கத் தூண்டுகிறது. 'கவிதைகள், பூட்டுகள், சாவிகள்' ஆன்மாவை நிறைத்த அற்புதமான கவிதை. "யாராலும் தயாரிக்க முடியவில்லை / காலத்தின் கள்ளச் சாவியை!" வாசித்து முடிக்கையில் ஓங்கி அறைந்தது போன்ற பிரக்ஞை. இந்த வரிகளுக்குத் தங்க ரோஜா பத்தாது. பஹீமா ஜஹானின் 'பாதங்களில் இடறும் முற்ற வெளி' தலைப்பே ஒரு வசீகரக் கவிதை. நம் மனங்களில் ஓராயிரம் உணர்வுகளை இடம் பெறச் செய்த கவிதை.

அறபுக் கவிதைகள் பற்றிய அறிமுகம் நமது முதுசொம்களைத் தேடிப் படிக்க ஆவலைத் தூண்டி விடும். மொழிபெயர்ப்புக் கவிதைகளில் உயிர் ததும்புகிறது. 'ஒரு பெண்ணின் முதலாவதும் இறுதியானதுமான கவிதை', 'விற்பனைக்காய் ஓர் உடல்' - இரண்டு கவிதைகளும் குறிப்பிட்டுச் சொல்லும் படி நேர்த்தியாகவும் அற்புதமாகவும் வந்துள்ளன.

கவிஞர் ஆறுமுகம் புதுக் கவிதையின் மீது கடும் சினம் கொண்டு வாழ்ந்து வரும் மரபுக்காரர் என நினைக்கிறேன். இலக்கணம் தெரியாதவர்கள் ஒதுங்குமிடம் புதுக் கவிதை என்ற அவரின் ஆதங்கத்துடன் நம்மால் சமரசம் செய்ய முடியவில்லை. விதிவிலக்குகள் உள்ளன. அவருக்குப் புதுக்கவிதை வரவில்லை என்பதற்காக அது அசிங்கம் என்ற 'பத்வா'வை எப்படி வழங்கலாம்.

கவிதை மனித உணர்வின், ஆன்மாவின் மொழி. அதை புதுசு, பழசு என்று வரையறுத்துப் பார்க்க முடியவில்லை. நான் எனது மனைவி அழகாக இருக்கிறாள் என்று எழுதலாம். எனினும் மற்றவரின் மனைவி அசிங்கமானவள் என்று ஏன் வம்புக்கு இழுக்க வேண்டும்? மரபுக்காரர்களுக்கு அவர்கள் எழுதுவது அழகுக் கவிதை என்றால் இருந்துவிட்டுப் போகட்டும். பிறகேன் புதுக் கவிதையைச் சாடுவான்?

பஸ்தூன்களைப் போல் நாமும் நமது போர்க்காலக் கவிதைகளை மக்கள் மயப்படுத்தினால் போராட்ட உணர்வும் விடுதலை தாகமும் நமது மக்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டு விடும். கடும் பிரயத்தனமெடுத்து அரசியல் வகுப்பெடுப்பதை விட 'விடுதலைக் கீதங்கள்' சுதந்திர உணர்வை ஓரளவு உணர்த்தும் வல்லமை பெற்றிருக்கின்றன. வெளிச்சம் விழும் இடம் நல்லதொரு முயற்சி. ஒரு வாய்ப்பாடு போல் ஒப்புவிக்கப்படும் பெயர்ப் பட்டியலை விடுத்து - ஒதுங்கி யிருந்து எழுதிக் கொண்டிருக்கும் சாதனையாளர்களை நாம் வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டும். 'சிறைப்பட்ட கவிதைகள்' - காற்றும் சூரிய ஒளியும் புக முடியாத இருட் குகைக்குள் ஒரு கவிஞன் நுழைய முடியும் என்பதை உரத்து முழங்கும் முயற்சி. கவிதைகளின் அச்சாணியாகவும் ஊறுகாய் போலவும் கடைசிப் பக்கக் கவிதை!

ஓட்டமாவடி அறபாத்

'யாத்ரா' 12வது இதழ் இதுவரை கால இதழ்களிலிருந்தும் சற்று விலகி நிற்பதாகவே படுகிறது. "...இன்னும் நிச்சயமாக ஒரு மனிதனின் மறைவுடன் ஒரு பிரபஞ்சமே மரணிக்கிறது" எனும் வரிகளை உள்ளிட்டு நிற்கும் ஆகா ஷஹித் அலியின் கட்டுரை பல்வேறு சிந்தனைகளைத் தூண்டுகிறது. "ஒவ்வொரு கவிஞனும் ஓரளவுக்கு ஒட்டுண்ணியே" என்ற ஷஹிதின் நண்பனது குறிப்புக் கூட ஷஹித்துக்கு மட்டுமல்ல, எல்லாக் கவிஞர்களுக்குமே பொருந்தி வருகிறது. ஒவ்வொரு கவிஞனும் 'நிகழ்வுகளின் ஒட்டுண்ணிதான்' என்பதைப் பெரும் ஆதாரங்கள் மூலம் நிறுவ முயலும் ஷஹித் அதில் வெற்றியும் பெற்று விடுகிறார். அவரது கவிதைகளின் பிறப்பு துயர நிலைகளிலிருந்து என்பது 'பழம் நினைவில் வாழ்பவனின் அமெரிக்க வரை படம்' என்ற அவரது கவிதைத் தொகுப்புக்கான வியாக்கியானத்தில் குறிப்பிடப் படுகிறது. தவிர, ஒரு விரிந்த சிந்தனைக்கான தளம் இச்சிறு கட்டுரைக்குள் முடங்கிக் கிடக்கிறது. தமிழ்ப் படுத்தியவர் என்ற வகையில் பண்ணாமத்துக் கவிராயருக்கு வாழ்த்துக்கள். மொழி பெயர்ப்புகளுக்கான முயற்சி எமது சிந்தனைத் தளத்திலும் படைப்புருவாக்கத்திலும் மாற்றத்தைக் கொணரும் என நினைக்கிறேன்.

'யாத்ரா' சொன்னதைப் போல் போரும் அதனுடனான வாழ்வுமே எமது இலக்கியத்தின் பாடு பொருளாக இருக்கிறது. சலிப்பூட்டுமளவு இதனது தாக்கம் இன்று இலக்கியத்தைப் பிடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறது. இதிலிருந்து நாம் விலகி வாழ்க்கையின் சூட்சும மான, நுட்பமான கட்டங்களை கலைக் கண்ணோடு படைப்புருவாக்கம் செய்ய முன்வர வேண்டும்.

பாலைநகர் ஜிப்ரி

'தினக்குர'வில் நீங்கள் எழுதி வருகின்ற 'திரும்பி வரும் தெரு', 'ரூ அலைவரிசை'யில் நடாத்து கின்ற 'கேளுங்கள் சொல்கி றோம்', 30.12.2003 அன்று தேசிய சேவைக்கும் 28.12.2003 அன்று 'தினகரன்' பத்திரிகைக் கும் வழங்கிய பேட்டி - என யாவற்றையும் பார்த்தும் கேட்டும் வருகிறேன். எனது ஆளுமையை வளர்த்துக் கொள்ள ஓர் உந்து சக்தியாக எனக்குள் நீங்கள் இருக்கி றீர்கள்.

ஐயா, நான் ஓரளவு கவிதை எழுதுவேன். ஆனால் எனக்கு கவிதையை செம்மையாக, சீராக எழுதுவதற்கான கோட் பாடுகள், வரம்பு முறைகள் தெரியவே தெரியாது. இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் பொருட்டு எனக்கு ஏதாவது வழிகாட்டிப் புத்த கங்களை சிரமம் பாராமல் அனுப்ப முடியுமா? அத்துடன் 'யாத்ரா' கவிதை இதழை வாசிப்பதற்கு மிகுந்த ஆவலாக வுள்ளேன். முடிந்தால் இவ்வித ழையும் எனக்கு அனுப்பி வைப்பீர்கள் என்கிற மிகுதி யான நம்பிக்கையுடன் விடை பெறுகிறேன்.

க.றொபர்ட்

களுத்துறை சிறைச்சாலை

எதிரொலி

பசியோடிருப்பவருக்குச் சாதம். தாகத்தோடிருப்பவருக்குத் தண் புனல். கவிதைப் பட்டினியோடு கிடப்பவருக்கு 'யாத்ரா'. புதுசோ? பழசோ? புதுக்கவிதைப் புட்டிகளிலும் மரபுக் கவிதைக் கிண்ணங்களிலும் கவிதைச் சாறு கனிச்சாறாக அடைக்கப் பட்டுத் தரப்படுகிறது. செம்மையான யாப்பு செய்மைக்குச் சென்று விட்டது. இஃதொரு வகையில் கவிதைச் சைனியத்தில் புதுக் கவிதைப் பட்டாளம் எவ்வித Recommendationம் இல்லாமல் Recruitment பெற வாய்ப்பை வழங்கி விட்டது.

'யாத்ரா' நடத்திய கவிதைப் போட்டியிற் பரிசு பெற்ற ஐந்து பரிசுக் கவிதைகளுடன் மேலும் பதினேழு கவிதைகள் 'யாத்ரா' 12ல் மலர்ந்திருந்தன. அவற்றை மகுடங்களுக்காகவே மனமொன்றி வாசிக்கலாம். மாறி வரும் உலகில் கவிதையும் மாற்றம் பெற்று வருவதையும் ஒரு வரியிலும் கவிதை உருவாகி வருவதையும் என்னென்போம்? ஆர் யோக்கியங் கடந்தாலும் கவிதைக்குரிய ஆரோக்கியங் கடவாமல் எழுதும் ஆற்றலை எல்லாக் கவிஞர்களும் கட்டாயம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'யாத்ரா'வில் இடம் பெற்றுள்ள யாவும் கவிஞர்கள் தத்தமது தடம் பதிக்க உதவும் மேலதிகத் தகவல்கள்தாம். இவ்விதழில் 'பஸ்தூன்களின் போர்க்காலப் பாடல்கள்', அப்பாடல்களின் மெய்ப் பொருளைப் பிரதிபலிக்கக் கூடிய நிழற் படங்கள் நெஞ்சைச் சுட்டன. வெளிச்சம் விழும் இடத்தில் ஆறுமுகத்தையும் இப்னுவையும் திரனையும் அமர வைத்து அடையாளங் காட்டியது போல் கங்குலுக்குள் இருக்கும் ஏனைய கவிஞர்களையும் இருப்பாட்டி வையுங்கள்.

இம்முறை விராஸ் மீன் பிடித்து விருந்து வைத்த மருதூர்க்கனி எதிரொலியில் 'உரை நடை நூலொன்றைக் காவியமாக ஜின்னாஹ் த்திருப்பது பெரிய காரியமல்ல, அஃது புகழப் படக் கூடிய புது முயற்சியுமல்ல என்ற பாங்கில் கூறியிருப்பது கசப்பாக இருக்கிறது. ஜின்னாஹ் செய்த முயற்சிக்கான மதிப்பீடு - 'தயாரிப்பு' என்ற தமிழ் வார்த்தை கொண்டா அளக்கப் பட வேண்டும்? 'கற்பூர வாசனையை அறியாத கழுதைகளாய் கவிஞர்கள் இருக்க மாட்டார்கள். எனவே வசனம் செய்யுளாக மாறியதை வரவேற்போம். 'யாத்ரா' ஜின்னாஹ்வுக்குச் சூட்டிய தலைப்பாகையில் கலைப் பகை வேண்டாம்.

கிண்ணியா ஏ.எம்.எம்.அலி

'வெள்ளம் போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்'

என்றார் மகாகவி சுப்ரமணி பாரதியார். எழுத்துலகில் நுழையும் அநேகர் கவிதையில் தடம் பதிக்காமல் வந்ததில்லை. அவரவர்களின் மன இயல்புக்கும் உணர்வு எழுச்சிக்கும் ஏற்றவாறு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் தமது கவிதைத் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காக அவ்வப்போது கவிதைத் தொகுப்புக்களையும் கவிதைச் சஞ்சிகைகளையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோ தெரியவில்லை, கவிதைச் சஞ்சிகைகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் எழுந்திருக்க முடியாமல் முடங்கிப் போகின்றன. கவிஞர்களுக்குச் சமூகப் பிரக்ஞை இருக்கிறது. இருக்க வேண்டும். என்றாலும் வெறும் உருவங்களையும் சொல் அலங்காரங்களையும் வைத்துக் கொண்டு விஷயங்களைக் குழப்ப முடியுமா? உள்ளத்து உணர்வுகளைக் கவிதையாக வடித்துச் சாதனை படைத்தவர்களில் குறிப்பிட்ட சிலர்தான் தமது முகவரியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதே வகையில் கவிதைச் சஞ்சிகைகள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவேனும் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஆனாலும் அஷ்ரஃப் சிஹாப்தீன் வெளியிடும் 'யாத்ரா' கவிதையிதழ் தடைகளைத் தாண்டி யாத்திரை போய்க் கொண்டிருக்கிறது.

ஒரு கவிதை இதழ் நிலைத்துக் கொண்டிருக்கிறதென்றால் 'யாத்ரா'வைச் சுட்டுகின்ற அளவுக்கு தடம் பதித்திருக்கிறது. தமிழுக்கும் இலக்கியத்துக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்னதான் இடரிருந்தாலும் சளைத்தது கிடையாது. வடக்கில் போர்க்காலச் சூழல் என்பதனால் கவிதைகளும் போராட்டத் துடனேயே பிறந்து கொண்டிருந்தன. கிழக்கு மாகாணத்தில் 'பிறந்த' கவிஞர்கள் வாழ்க்கையின் பல கோணங்களையும் கவிதையின் நாடி, நரம்புகளையும் தொட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மரபுக் கவிதைகள் மறைந்து போகா விட்டாலும் இப்போதெல்லாம் புதுக் கவிதையின் பிரசவங்கள்தான் தமிழைச் சிறப்புறச் செய்கின்றன. பாட்டென்றால் இசை. கவியென்றால் ஓசை. செய்யுளென்றால் இலக்கணம். இவை குறைந்த பட்சத் தேவைகளாகக் கருதப்படுகின்றன. இருந்த போதிலும் புதுக் கவிதையில் எதுகை, மோனை அதிகம் இல்லாமையும் வார்த்தைப் பிரயோகத்தில் சிக்கனமும் சங்க இலக்கியத்தின் நன்கொடையாகக் கருதப்படுகின்றன. என்றாலும் சொல் அலங்கார வார்த்தைகளை உடைத்துப் போடுவதால் மாத்திரம் கவிதையாக மாட்டாது.

கவிதைக்குரிய கலைப் பொலிவுடனான கவிதைகளைத் தாங்குவதால் 'யாத்ரா' தொடர்ந்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். பொருளாதார வளம் இருந்தும் கவிதையில் தமிழ் வளம் இல்லையாயின் நிச்சயம் அக்கவிதையோ சஞ்சிகையோ உயிர் வாழாது.

இது வரை பன்னிரண்டு இதழ்களை விரித்துள்ள 'யாத்ரா' இறுதியாக பரிசளிப்பு விழாச் சிறப்பிதழை வெளியிட்டிருக்கிறது. 'யாத்ரா'வின் கணிப்பில் தரம் பார்க்கப்பட்டு வரிசைப் படுத்தப்பட்டுக் கவிதைகள் பரிசு பெற்றுள்ளன. 'கதவுகள், பூட்டுகள், சாவிகள்' எனும் மா. காளிதாஸின் கவிதைக்கு முதற்பரிசு.

'ஒரே பூட்டுக்குப் பல சாவிகளையும்
பல பூட்டுகளுக்கு ஒரே சாவியையும்
இடுப்பில் தொங்க விட்டிருக்கிறது
ஜீவிதம்!

பூமியால் பூட்டப்பட்டிருக்கிறது
பிரபஞ்சத்தின் மூன்றாவது அறை
உள் பக்கமும் வெளிப் பக்கமும் என
ஒரே சமயத்தில் பூட்டப் படுகின்றன
மரணத்தின் கதவுகள்
யாராலும் தயாரிக்க முடியவில்லை
காலத்தின் கள்ளச் சாவியை!'

என்று முடிக்கிறார் கவிஞர் மா. காளிதாஸ். இதனை வாசிப்பவர்களுக்கு மனித வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதோடு கவிதையின் வரைவிலக்கணத்தையும் அனுபவிக்க முடிகிறது. இந்த இடத்தில் கவிஞர் மு.மேத்தாவின் 'வாழ்க்கை' கவிதை ஒரு கணம் வந்து போகிறது.

'நிலாச் சோறுண்ண
நீண்ட நாள் ஆசை
அபூர்வமாய்க் கிடைத்தது ஓய்வு
அன்று அமாவாசை'

இந்தக் கவிதையை அனுபவிக்கும் உணர்வுதான் காளிதாஸின் கவிதையிலும் பிறக்கிறது.

அதே போல்தான் ஏனைய பரிசுகளுக்குரிய கவிதைகளும். பஹ்மா ஜஹான் எழுதிய 'பாதங்களில் இடறும் முற்ற வெளி' இரண்டாவது பரிசைப் பெற்றுள்ளது. கவிதையுலகில் மிகக் குறுகிய காலத்தில் வெளிச்சத்துக்கு வந்தவர்தான் பஹ்மா ஜஹான். ஆனால் அவரது கவிதை நம்மை உணர்வுகளின் ஆழத்துக்கு இழுத்துச் செல்கிறது. 'வாழ்வை உணர்தல்' என்ற பிரேமினி சபாரத்தினம் எழுதிய கவிதை மூன்றாம் இடத்தையும் முல்லை முஸ்ரிபாவின் 'உனதின் நான்' நான்காமிடத்தையும் இரா. தனிக் கொடியின் 'உட்சுவர்' ஐந்தாம் இடத்தையும் பெற்றிருக்கின்றன.

மீண்டும் சொல்வதானால் கவிதை என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்து உணர்வுகளின் மென்மையான வெளிப்பாடு. மிகப் பழமை வாய்ந்த இலக்கிய வடிவம். பல கூறுகளினால் ஆகிய கூட்டுப் பொருள். ஓசை அலங்காரம் சொல்லுக்கு அப்பால் குறிப்பாக நிற்கும் உணர்வு ஆகிய பல அம்சங்கள் 'யாத்ரா' கவிஞர்களின் கவிதையில் பொதிந்துள்ளன.

'யாத்ரா' பரிசளிப்பு சிறப்பிதழின் மற்றொரு முக்கிய அம்சமாகத் திகழ்வதுதான் 'காக்கிச் சட்டையில் ஒரு கவிஞன்!' பொலிஸ் அதிகாரியான ஆறுமுகத்தின் அறிமுகம். இனக் கலவரத்தில் உடைமைகளை மட்டுமல்ல, என் தமிழையும் எரித்தார்கள் நண்பர்கள் என்கிறார் கவிஞர் ஆறுமுகம். இத தவிரவும் மேலும் சில கவிதைகளும் இவ் இதழில் வெளியாகியுள்ளன. கவிதை வாழ வேண்டும் என விரும்புவோர் கட்டாயம் 'யாத்ரா'வை வாழ வைக்க வேண்டும்.

விசு கருணாநிதி

தினகரன் வாரமஞ்சரி

தங்களின் வெளியீடான 'யாத்ரா' கவிதைச் சஞ்சிகை பற்றிப் பத்திரிகை வாயிலாகப் படித்தேன். கவிதைகள் என்றால் எனக்கு அதிக ஆர்வம்- படிக்க, எழுத. எழுதுவதை விடப் படிப்பதில் அக்கறை அதிகம்.

கவிதைகளைப் பலரும் பலவாறாக எழுதுகிறார்கள். சில கவிதைகள் புரிகின்றன. சிலவோ அறவே விளங்குவதில்லை. பொருள் விளங்கியும் விளங்காமலும் இருக்கும். இந்தக் குழப்பத்துக்கு ஒரு விடை கிடைக்குமாயின் மகிழ்ச்சியடைவேன்.

எம். கலைதாசன்

குவைத்

இம்மாத யாத்ரா வோ சித்தி
இருமித் தூள் பறந்ததையோ பேச்சில்
இப்படியோர் சிறலுமேன்
இவர் காித்துக் கொட்டுவதேன்
இல்லையிம் முறையிவர் பேர் போச்சி

இம்மாத யாத்ராவோ சூப்பர்
இன்சொற்புகல் வார்புகழ்வார் டுப்பர்
இதிலொன்றும் மர்மமில்லை
இவ்விதழில் இவர் கவிதை
இருக்குதுகட் டாயம் பார் பேப்பர்

இவ்வெதிரொலிக் குரல் என்னே தீரன்
இருக்கின்றேன் சாய்ந்தமரு தூரன்
இத்தொப்பி யார்க்கெல்லாம்
இணங்குமெனில் எடுத்தணிவீர்
இல்லையெனில் வழிவிடுவீர் வாறன்

மிகச் சிறுவயதில் முஸ்லிம் நிகழ்ச்சியில் கேட்ட 'ஒரு கிராமத்துக் கவிதை' மூலம் ஆர்.எம்.நௌஷாத் என்ற பெயர் மனதில் மிதந்தது. சிறு வயதுக்கேயுரிய எண்ணப்படி "பெரிய ஒருவராக" இருப்பார் என்ற பதிவும் கூடவே நிகழ்ந்தது. பின்னர் நௌஷாத், எஸ்.ஏ. சி.எம். ஆகியோரது நடகங்களையே விரும்பிக் கேட்கலானேன். இவர்கள் தொடர்ச்சியாக எழுதாத காரணத்தால் முஸ்லிம் சேவை நாடகங்கள் மீதான எனது ஈர்ப்புக் குறைந்தது. தீரன் எனும் பெயர் 'யாத்ரா'வின் மூலமே எனக்குப் பரிச்சயமானது. இவர் யார்? என்ற கேள்வியும் இருந்தது. என்னைக் கவர்ந்த நாடக ஆசிரியரே தீரன் என்பதை 'யாத்ரா'வினூடாக அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.

"இருத்தலுக்கான அழைப்பு" நூலாய்வுரையில் சிதம்பரப்பிள்ளை சிவகுமார் அவர்கள் தனதினத்தவர் சிலரின் குற்றங்களுக்காக அதிகமாகவே பச்சாதாபப் பட்டுள்ளார் என எண்ணத் தோன்றுகிறது. 'ரத்தத்தில் கை நனைத்த தில்லை நான். எனினும் ரத்தம் சிந்த வைப்பவர்களின் நிழலில்தானே தங்க நேர்கிறது எனக்கு' எனத் துணிந்து சொல்கிறார். எங்களில் எத்தனையோ பேர் அண்டி வாழும் நிழல்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தமது ஆன்மாக்களை ஈடு வைத்து விட்டு வாழ்கிறார்கள். சிதம்பரப்பிள்ளை சிவகுமார் போன்றோரிடமிருந்து நாம் அதிகமான பங்களிப்புகளை எதிர்பார்த்து நிற்கிறோம்.

வயதில் இளையவராயினும் அஜ்வத் நன்றாகவே எழுதுகிறார். அவரது வயதையொத்த பலரது கவிதைகளிலும் ஆற்றல் தென்படுகிறது. அவர்களும் 'யாத்ரா'வில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறேன். ஒலிகள், ஊசி கொண்டலையும் நுளம்பு ஆகிய கவிதைகள் நன்றாக உள்ளன. இன்றைய இளைஞர்கள் தமது வாழ்வை யுத்தத்துக்குப் பலி கொடுத்த நிலையில் வேறு எதைப்பற்றி எழுதுவார்கள்?

பஹீமா ஜஹான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிக் காலம்



மெஹ்தி அஹ்வான் சேல்ஸ் (பாரசீகம்)

தமிழில்:

பண்ணாமத்துக் கவிராயர்

அவர்கள் புறக்கணிப்பர்
உன் உபசார மொழிகளை
மார்புக் கூடுகளில்
தங்கின அவர் தலைகள்
அவர்கள் வேண்டுவது
மார்புகளின் உஷ்ணம்
சிரசுயர்த்த மாட்டாரெவரும்
விருந்தினரை வரவேற்க
மட்டான பார்வை
இருண்டும் பளபளப்பாயும் பாதை
மறுக்கப் படுகின்றது
நீண்டவுன் நட்பின் கரம்
தடுமாற்றமல்ல காரணம்
உஷ்ணமூட்டு மிடங்களில்
கைகளை வைத்திருக்க
விரும்புகிறா ரவர்
பயங்கரக் குளிர்....
திகில் வேண்டாம்

மார்புச் கூட்டிலிருந்து
வெளியேறு முன் சுவாசத்தைக்
கவனி
சவரில் போய்ச் சுவறுமுன்
மாறுகின்றது இருண்ட மேகமாய்
உன் சுவாசமே இப்படியாயின்
தூரத்து, நெருங்கிய
நண்பர்களுன்னை
நினைவில் வைத்திராவிடின்
என்ன குறை?
என் ஆண்மை மிகு இரட்சகா
விட்டுக் கொடாத விசுவாசியே
கோழையாயும்
குளிராயுமுள்ளது பனிக்காலம்
வார்த்தைகளை உஷ்ணமாய்
வைத்திரு
அந்நிலையை உறுதியாய்ப் பேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உபசார மொழியை
ஏற்றுக் கொள்
நான் உள்ளே வர அனுமதி
நானுனது இரவு விருந்தாளி
வழிநடைச் சிந்து
படைப்பின் சாபம்
சீரற்ற இசை

ஒட்டுண்ணியெனக்குக்
கணநேர ஓய்வு தா
நான் ரோமிலிருந்து
ஆபிரிக்காவிலிருந்து
வந்தவனல்லன்
ஆபிரிக்கருக்குத் தெற்கிலும்
ரோமருக்குத வடக்கிலும்
வழி விடு
நான் நிறக் குருடு - என்பது
இருவருக்கும் போதுமானது

என்னை உள்ளே வர விடு
என் துயரத்தை உள்ளே வர
அனுமதி
எப்போதும் பிரசன்னமாயுள்ள
இவ்விருந்தாளிக்கு
ஏற்புடைய உபசாரகனாயிரு
உன் வாசலில் நடுங்கும்
ஏழை மீது கருணை காட்டு
அழைப்புக் குரலில்லை
கதையொன்று நீ கேட்டிருப்பாய்
மரணமென்பதில்லை
வெட வெடத்து நடுங்கும்
பற்களும்
அற்ப சுவாசமும்தான்
இருப்பதெல்லாம் -
இங்குற்றது பனிக்காலம்

இன்றிரவு,
கடன் தீர்க்க விரும்புகிறேன்
காலமின்னும்
பிந்திவிடவில்லை
நள்ளிர வாகவில்லை
காலையென்பதில்லை

புலரியின் போலி வலையில்
ஏமாந்திடாதே

பனிக்காலத்தின்
கடுமையான அறையைப் பகரும்
உறைந்து
சிவந்த வென் காதுகள்

மரணத்தின் மாயக் குகையில்
உன் சடலம்
சுடரேற்றுவதை விட
ஒவ்வொரு சுவாசத்திலும்
தங்கியுளதுன்
உலகின் சூரியன்

அருமை நண்பா,
மதுவினால்
விழிகளில் ஒளியேற்று
இரவென்பது பகல்
பகலென்பது இரவு

சோர்வூட்டுமிக்
கால நிலையில்
உன் உபசாரத்தை
அவர்கள் உதாசீனிப்பர்
மூடிக் கிடக்கின்றன வாயிற்
கதவுகள்-
மார்புக் கூடுகள் மீது
தங்கின தலைகள்
மறைக்கப்பட்டன கரங்கள்
கொடூரமாய்த்
துண்டிக்கப்பட்டது
நம்பிக்கை

வெறும் எலும்புக் கூடுகளாய்
மரங்கள்
அருகே வந்து விட்டது
வானம்
உயிரற்றுப் போய் நிலம்

சூரிய சந்திரர்கள்
சோபையிழந்து...
படர்ந்து பரவியதெங்கும்
பனிக்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அமைதியாகத்தான் எழுதுகிறேன். ஆனால் எனது சொற்கள் எப்போதும் வலிமையானவை.

- மாரி சம்மர்ஸ்

ஒரு கவிதை பிறக்காமல் சூரியன் அஸ்தமிப்பதேயில்லை.

- கொன்னி மார்க்கம் வொங்

கவிஞனின் கண்ணீர்தான் பேனையை நிரப்புகிறது.

- ஃபுளோரியா

கவிஞனின் மை ஒருபோதும் உலர்வதில்லை.

- மாரி சம்மர்ஸ்

கவிதை உங்களது ஆத்மாவின் நடுநிலையைக் காக்கிறது.

- ஹென்ரிக் இப்சன்

கவிதை ஏறக்குறைய போதைப் பொருளுக்கு ஒப்பானது.

- ஜோர்ஜ் ஃபர்க்வுர் (1698)

கவிதை ஆத்மாவின் வாசல் வழி.

- ஃபுளோரியா

அரிய வார்த்தைகள் கவிஞன் வாயிலிருந்து ஓர் ஆற்றைப் போல் பெருக்கெடுக்கின்றன.

- சிரில் ஷியரின்

மிகைக் கற்பனைக்கு அப்பால் நோக்குகையில் கவிதையானது ஆத்மாவின் தேடலாகும்.

- தேவரஸ் மீட்

காலைப் பொழுது முழுவதும் நான் எழுதிய கவிதையை மீள மீளப் படித்து ஒரு காற் புள்ளியை நீக்கி விடுகிறேன். மாலைப் பொழுதில் அதனை மீண்டும் போட்டு விடுகிறேன்.

- ஒஸ்கார் வைல்ட்

ஒரு கவிதையை எழுதுவதானது உங்களது இதயத்தையும் ஆத்மாவையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதாகும்.

- ஃபோலன் சைல்ட்

பேசுகின்ற வார்த்தைகளின் பெறுமானங்களை விட எழுதப்படுகின்ற வரிகளின் பெறுமானங்கள் அதிகமானவை.

- கரஸ்ஸியா கோம்ப்ஸ்

கவிதை என்பது முழுக்கவும் நமக்குள் ஒலிக்கும் அமைதியான குரலாகும்.

- யாரோ

லயம் இல்லாத கவிதை ஒரு மிகப் பெரும் குற்றமாகும்.

- ஹிட்டேஷ் ஷேத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடுகள்

கோடுகளால் வரையப்பட்டிருக்கிறது
நமது கோலம்
கோடுகள்
ஆதிக்கப் புள்ளிகளின் நீட்சி

புள்ளிகளால்தான்
தொடங்கி வைக்கப்படுகின்றன
பெரும்பாலான கோடுகள்

நம்மிடம் தரப்பட்டிருப்பதில்
அதிக பட்சம்
வெட்டிக் கொள்ளும் கோடுகளே

தழும்புகளாகப் பதிந்து விட்டன சில
கீறல்களைத் தந்து விட்டன சில

கோடுகளால்
வாழ்ந்து கொண்டிருக்கிருக்கிறார்கள் சிலர்
கோடுகளுக்குள்
செத்துக் கொண்டிருக்கிறார்கள் சிலர்

மா. காளிதாஸ்

எல்லாவற்றையும் கரைப்பதில்லை
மழைக் கோடுகள்
எல்லாவற்றையும் உலர்த்துவதுமில்லை
சூரியக் கோடுகள்

தாண்டப்படாமலே இருக்கின்றன
இன்னும் சில கோடுகள்

நகர்த்தி வைப்போம்
லட்சுமணக் கோட்டை
ராமனின் பக்கம்

தோற்று விட்டனர் பலர்
காலத்தை கோட்டோவியமாக
வரைய முற்பட்டு

வரம்புகளைத் தாண்டினாலும்
வெட்டியானால் இடப்படுகிறது
வாழ்க்கையின் கடைசிக் கோடு

இடையில், சாக்பீஸ் கோடுகளுக்குள்
அகப்படாமலிருக்க ஆசீர்வதிக்கப்படுவோமாக

நன்றி:
பிம்பங்களின் மீது ஒரு கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளினூடான ஓர் அனுபவப் பகிர்வு

கவிதை, இலக்கியத்தின் வடிவமாக மட்டுமன்றி, போராட்டத்தின் ஒரு வடிவமாகவும் இருப்பதுதான் எமது சமகாலக் கவிதையுலகின் வெற்றியென நாம் கருத முடியும். மனிதனின் அகவுணர்வு சார்ந்த போராட்டங்கள், நிகழ்வுகள் 'கவிஞன்' என்ற பிறவியினூடாக சாத்தியமாகிக் கொண்டிருப்பதை இன்றைய நடைமுறை உலக வாழ்வு எமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. இதனால்தான் கவிஞன் நிகழ்வுகளின் ஒட்டுண்ணி எனப்படுகிறான்.

இதே பின்னணியில்தான் வாழைச்சேனை அமரின் 'நீ வரும் காலைப் பொழுது'ம் வருகிறது. இங்கு வித்தியாசம் என்னவென்றால் அமரின் புறவுலக வாழ்வு, அதன் மீதான அழுத்தங்கள்தான் கவிதையாக மலர்கிறது. 'கண்கள் பார்த்த காட்சிகள், கேட்ட நிகழ்வுகள், எழுந்த சந்தேகங்கள் என்னுடன் கலந்த போது, இவைகளைப் பிறருடன் பகிர என் கவிதை மொழியில் எழுதி விடுகிறேன்' என அமர் தன் கவிதைகளின் பிறப்புத் தளம் குறித்துக் கூறுவது - கவிதைகளைப் படிக்கிற போது யதார்த்தமானதாகவே படுகிறது.

அமரின் கவிதைகளை, கவிதைகளாகவே மட்டும் என்னால் பார்க்க முடியவில்லை. ஹெர்த்தால் அமுலிலிருக்கும் தெருக்களைப் போல ஆரவாரமற்று நீளும் ஒவ்வொரு கவிதைக்குள்ளும் ஒரு சத்திய வரலாறு, சொல்லப்பட வேண்டிய செய்தி, எழுப்பப்பட வேண்டிய கேள்விகள் எனப் பலதும் புதைந்து கிடக்கின்றன. விஷேசம் என்னவெனில் அமரின் கவிதையுலகம் இயல்பானதாய் இருக்கிறது. அங்கு வலிந்து வரவழைக்கப்பட்ட வார்த்தைகள் இல்லை. செயற்கைத்தனத்தோடு அலங்கரிக்கப்பட்ட ஆடைகளை கிட்டத்தட்ட எல்லாக் கவிதைகளும் களைந்து விட்டிருக்கின்றன.

"எங்கள் சமூகத்தை விடவும்
ஒரு சோகக் கதை இல்லை
நாங்கள் கண்ணீர் விட்டோம்" என தன் சமூகத்தின் சோகக் கதைகளையே அமர் கவிதையாகத் தருகிறார்.

அசாதாரண நிகழ்வுகள் சாதாரணமாக நிகழ்த்தப்படும் கிழக்கு மண்ணிலிருந்து கொண்டு இவரால் வேறெதனைப் பாட முடியும்? பனித் துளிகள் புற்களில் விழும் இதமான வைகறையை, உண்டு முடித்த பின்னே உறங்கிப் போகுமோர் அமைதியான பகற்பொழுதை, எந்த இடத்திலும் நண்பர்களைச் சென்று சந்திக்கும் ஒரு அழகிய அந்தியை, பயங்கரங்களற்ற இரவை எப்போதோ இழந்து விட்ட தகிப்பில் அமரின் கவிதைகள் அழுவதை எம்மாலும் கேட்க முடிகிறது. நாட்களை மட்டுமல்ல; வாழ்க்கையையும் இவர்கள் முற்றுகையிட்டிருக்கிறார்கள். இதனைக் கவிஞரால் ஜீரணிக்க முடியவில்லை. அதனை இப்படிச் சொல்கிறார்: -

"தூக்கத்தையுடைத்து
காதுக்குள் சில் வண்டாக
அழுகைக் குரல்"

இந்த அழுகை படிந்த கணங்களை அகற்றுவதற்காகவும் ஓர் அமைதியான வாழ்க்கைக் காகவும் பிரயாசைப்படுகிறார்.

"உன் ஆத்மா தானாகவே
தன்னை அறிவதில்லை
துணிந்து முன்னேறு
ஒரு சரியான மனிதனைத் தேடியடை
அந்த விசாரணையில்
இறைவனே உதவி புரிகிறான்"

வாழைச்சேனை அமரின்

நீ வரும்

காலைப் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அல்லாமா இக்பாலின் வார்த்தைகளைப் போலவே இந்த மண்ணில் வாழ்வைத் தேடுகிறார். இந்தத் தேடலின் பிற்பாடு இன்னொரு சோகம் தலை நீட்டுகிறது.

"வாழ்வைத் தேடிப் போகையில்
வந்தது மயானம்" என்பதிலிருந்து இங்கு வாழ்க்கைக்கும் மரணத்துக்குமான இடைவெளி அவ்வளவு தூரமில்லை என்பதை உணர முடிகிறது.

2

'நீ வரும் காலைப் பொழுது'க்குள் உள்ளடங்கி நிற்கும் முப்பத்து மூன்று கவிதைகளுக்குள்ளும் ஒரு சமூகத்தின் அரசியல் வரலாறு எழுதப்பட்டிருக்கிறது. இந்த வரலாற்றெழுதுகையை நாம் மீள் வாசிப்புக்குக் கொணரும் போது சிலரின் முகமூடிகள் கிழிய வேண்டியேற்படுகிறது. சமயத்தில், அவர்களின் கொடூர முகம் வெளிப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. இத்தொகுதிக்கான முன்னுரையில் ஏ.ஜி.எம்.ஸதக்கா ".... தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட கருத்தியல் தளத்தினூடாகப் பெற்ற கவிதை அனுபவப் பரிவர்த்தனையூடே முஸ்லிம் தேசியக் கட்டுமான அடித்தளத்தை வலுப்படுத்தும் பணியைச் செய்கிறது" எனக் குறிக்கும் போதும் அவ்வாறானதொரு செய்தியை கவிதைகள் சொல்லி நிற்கும் போதும் ஒரு சமூக அரசியல் அனுபவங்களை மிகத் துல்லியமாய்க் கண்டு கொள்ள முடிகிறது.

எண்பதுகளில் கூர்மையடைந்திருந்த தமிழீழ விடுதலைப் போராட்டம் இரு முகங்களைக் கொண்டது. ஒரு முகம் அடக்கு முறைக்கெதிரான விடுதலைக்கானது. மறுமுகம் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறை சார்ந்தது. இந்த அடக்குமுறை பற்றி, இன மேலாதிக்க அரசியல் குறித்து தன் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துகிறார். அல்லாமா இக்பால் சொல்வதைப்போல,

"உன் உள்ளத்தில்
எது இருப்பினும் வெளியிடு
பாடு. அல்லது துயரப்படு
அல்லது பெருமூச்சு விடு
அல்லது அழு!"

இவை எல்லாவற்றையும் அமர் செய்து விடுகிறார். அது தவிர்க்க முடியாததும் கூட. ஏனெனில் கவிஞன் நிகழ்வுகளின் ஒட்டுண்ணி.

இந்த இனத்துவ அடக்குமுறை என்பது பன்முகப் பட்டதாய் வெளிப்படுகிறது. ஓரிடத்தில் மனிதக் கொலையாக, இன்னோரிடத்தில் விரட்டியடிப்பாக, பிறிதோரிடத்தில் பொருளாதார அழிப்பாக மற்றும் கப்பம் அறவிடுதல் என்றவாறாக பன்முகப் பட்டதாய் அதிகார மேலாதிக்கம் நிலைபெறுகிறது. அமரின் கவிதை உலகத்துக்குள் இவையனைத்தும் சூட்சுமமாகவே உள்வாங்கப் பட்டிருக்கின்றன. சிங்கள இனவாதம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிய போது கப்பம் அறவிடல், விரட்டியடிப்பு போன்ற இனச் சுத்திகரிப்பு மேற்கொள்ளவில்லை. துரதிர்ஷ்டவசமாக தமிழ்ப் போராளிகள் முஸ்லிம்கள் மீதான இனச்சுத்திகரிப்பின் போது இவற்றையும் சேர்த்தே செய்து விடுகின்றனர். அவரது கவிதை ஒன்று சொல்கிறது:-

"அச்சம் தவிர்க்க 'பேச வா' என்கிறாய்
எதுவுமே கேட்பதில்லையென்று-
கப்பத்தைத் தவிர!" என்ற வரிகளில் மட்டுமல்ல, 'எங்கள் பிரகடனம்',

பாலை நகர் ஏ.எச்.எம். ஜிப்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீதிக்கு வருவான்' போன்ற கவிதைகளிலும் இது குறித்த கவிஞரின் உரத்த குரலைக் கேட்க முடிகிறது. அகதி வாழ்வின் அனுபவ அவஸ் தைகளையும் அதன் மீதான துயரங் களையும் அற்புதமாக எழுதிச் செல்கிறார் அமர்.

"உயிர் தரித்திருப்பது என்பது
முடிவற்று
எரிந்து கொண்டிருப்பதாகும்
மீன்களைப் போல்
வளையவும் நெளியவுமின்றி
நாம் வேறென்ன செய்ய முடியும்?" என்ற மகாகவி இக்பாலின் குரலையே அமரின்

"என் அவலங்களில்
வாழ்வு தவளையாயிற்று!" என்ற அடிகளிலும் கேட்க முடிகிறது. தவளை அங்குமிங்கும் தத்தித் திரியும். இவரது மனிதரின் வாழ்வும் இப்படித்தானேயுள்ளது.

இனந்தெரியாத கரங்கள் இன்று கிழக்கில் மரணத்தை விதைத்துக் கொண்டிருக்கின்றன. 'இனம் தெரியாத' என்ற சொற் பிரயோகம் வெறும் அடை மொழி மட்டுமே என்கிறார், "மூன்றாகும் நீ" எனும் கவிதையில். உண்மை யும் அதுதான். கபட அரசியல் நாடகத்தின் போலித்தனம் இதில் நன்றாகவே வெளிப் படுகிறது. தன் சமூகம் நீண்ட நாட்களாக தன் அரசியல் வாழ்வில் அனுபவித்து வரும் இக் கொடு நிகழ்வுகளுக்கான எதிர் நிலைகளை செயற்பாட்டு ரீதியாக முன்னெடுக்கும் எந்த சக்தியும் சமூகத்துக்குள் இல்லாமை குறித்து 'எங்கள் கிராமத்துக்கு' எனும் கவிதை யில் மொழிகிறார். இது முஸ்லிம் அரசியல்வாதி களின் மீதும் கவிழும் தலை குனிவும் அவ மான முமாகும். இந்த வரலாற்று ஏக்கத்தை,

"உறவுக்கு ஒரு நொண்டி நாய்
சேதிகள் சொல்வதற்கு
ஒரு அண்டங் காக்கை
ஓரமாய்க் கிடக்கும் குப்பைகள்
இத்தனையும்
எமது வீதிக்கு நிம்மதி தரும்" எனக் குறிக்கும் அதே வேளை, ஒரு சத்தான தலைவனுக்கான கோரிக்கையையும் விடுக்கிறார்.

"எழுதி வையுங்கள்
இந்தப் பொன்வயல் கிராமத்துக்கு
இனி ஒரு 'ரொபின் ஹூட்' தேவை"

3

தேசிய அரசியல் மட்டுமல்ல, சர்வதேசிய அரசியல் போக்கிலும் ஜனநாயகத்துக்கான இடம் மிகவும் வேதனைக்குரியது. எமது நாட்டிலும் கூட பெயரளவில் ஜனநாயகம் உச்சரிக்கப் படுவதுதான் வரலாறாகவுள்ளது, இன்றைய சமாதானத்தைப் போல. இங்கு நடைமுறையிலிருக்கும் ஜனநாயகத்தில் எமக்கெல்லாம் அவ்வளவு மரியாதை இருந்ததில்லை. ஒரு கவிஞரின் பாடலும் போலி ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் அடையாளம் தெரியாமல் போய்விடுகிறது. ஆயினும் அவனது உரத்த குரலை எந்தக் குறிப்பானாலும் அழிக்க முடிவதில்லை. உரத்து எழும் குரலின் அதிர்வு தேசத்தின் எல்லா முகடுகளிலும் முட்டித் தெறிக்கிறது.

அமரின் 'அரசி' எனும் கவிதையிலும் எம்மால் இதே குரலைத்தான் கேட்க முடிகிறது. போலி ஜனநாயகவாதிகளுக்கு விழுத்தப் பட்ட சாட்டையடி என்றும் இதனை மறுவார்த்தையில் குறிப்பிடலாம். இதை ஒரு கவிஞனால் மட்டுமே சாத்தியப் படுத்த முடிகிறது. இதைத்தான் அமெரிக்கக் கவிஞர் சாம் ஹெமில் அமெரிக்க ஜனநாயக வாதிகளைப் பார்த்துக் கூறினார், "அவர்கள் கவிஞர்களுக்குப் பயப்படுகிறார்கள். அவர் கள் உண்மையைக் கண்டு பயப்படுகி றார்கள்."

எமது இன்றைய ஜனநாயகத்திலும் இதே அச்சம் தொனிக்கிறது. தவிர, எமது நடை முறை அரசியலும் இன்று தீவிரமாகக் கள மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. இக்கள மாற்றங்கள் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என்பதே அமரின் இந்த வரிகளுக் கான அர்த்தமாகவுமிருக்கிறது.

"நீ சுதந்திர தேவியை
சுவீகரிப்பதற்குச் சூழுரைக்கிறாய்
நாங்கள் சுவாசிப்பதற்குச்
சூழல் கேட்கிறோம்
நண்பனே கேட்கிறதா...
எங்கள் உயிரின் யாசகப் பாடல்? □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் முகங்கள்

கே. றொபர்ட்

கிழித்தெறிங்கள் குரூரர்களே
உங்கள் பொய் முகங்களை
எதற்காகப் போலி வேடம்
எங்களிடமும்

இரக்கமற்றவன்தான் மனிதன்
ஆனால் நீங்கள்
அதற்கும் மேல் ஒரு படி
அரசியல்வாதிகளாயிற்றே!

அழுதழுதாவது
மனச்சுமையை
ஆற்றிக் கொண்டிருந்தோம்
குழுக் குழுவாக வந்தீர்கள்
கை குலுக்கினீர்கள்
விடிவு விரைவில்
விழிகளில் வேண்டாம்
கண்ணீர் என்றீர்கள்
நம்பினோம்

எம் முன்னோரைப் போலவே
நாமும்

பொய் முகம் தரித்த
உங்களின் போலிப் பேச்சுக்களை
நம்பி
விடுதலைக்கான ஏக்கத்துடன்
காத்திருந்தோம்
காத்திருக்கிறோம்
இன்றும் ஏமாளிகளாய்

எங்கள் எதிர்பார்ப்புகள்
கானல் நீராக
கண்ணீரில் கரைந்தபடி
காத்திருக்கிறோம்

உங்கள் போலி முகங்களை
கிழித்துத் தூர வீசுங்கள்
அடுத்த சந்ததியாவது
ஏமாளிகளாய் இல்லாதிருக்கட்டும்

இரவுணவு

ஏ.அய்யப்பன்

கார் விபத்தில் இறந்த வழிப்போக்கனின்
ரத்தம் மிதித்துக் கூட்டம் நிற்க
செத்தவன் பையிலிருந்து பறந்த
ஐந்து ரூபாய் நோட்டில் இருந்தது என் கண்

நான் இருந்தும் தாலி அறுத்த மனைவி
என் குழந்தைகளோ
பசியின் நினைவுப் பொம்மைகள்

இன்றிரவு இரவுணவின் ருசியுடன்
என் குழந்தைகள் உறங்கும்
என் மனைவிக்கும் எனக்கும் அரை வயிறு ஆனந்தம்

செத்தவனின் பிணப்பரிசோதனையோ அடக்கமோ
இந்நேரம் முடிந்திருக்கும்
நினைத்துக் கொண்டேன்
ரத்தம் மிதித்து நின்ற கால்களை

வாழ்பவர்களுக்கு வாய்க்கரிசியிட்டு
செத்தவனை

மலையாளக் கவிதையின் தமிழ் வடிவம்

நன்றி: பதிவுகள் இணையத் தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் எழுதி வாசித்தாலும் பதினொரு இதழ்களினூடாக நடக்கும் யாத்திரையை பதினைந்து நிமிடங்களுக்குள் முடிக்க முடியாது. எனவே கொஞ்சம் மேலெழுந்து பறந்து இதனை முடிக்க நினைக்கிறேன், ஒரு ஹெலிகொப்டர் யாத்திரையாக. குண்டு போடப் போவது மில்லை, குன்றில் மோதி விழப் போவதும் இல்லை என்ற நம்பிக்கை யோடு.

பல ஆண்டுகளுக்கு முன் 'கவிஞன்' இதழை நடத்திய எம்.ஏ.நுஃமான் அவர்கள் அது நின்று போனமைக்குச் சொன்ன காரணம் முக்கியமானது. 'ஒரு தரமான இலக்கிய இதழைக் கொண்டு வருவதி லுள்ள பிரச்சினை பணமோ, அச்சக வசதி யின்மையோ ஆசிரியர், பதிப்பாளர் பிரச்சி னையோ அல்ல. தரமான ஆக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமைதான் இதழ் நின்று போகக் காரணம்' என்று அவர் சொல்லியிருந்தார். எனவே சுய கௌரவம் என்பதைப் பார்க்காமல் 'ஒன்றுமே இல்லாத ஒரு கவிதையைத் தருவதற்கு இத்தனை முறை போன் பண்ண வைக்கிறானே இவன்' என்ற சலிப்பும் இல்லாமல் நல்ல இலக்கிய நட்பெல்லாம் கடன் வாங்கி ஓடி ஒளிப்ப வனைத் துரத்திப் பிடிக்கும் ஈட்டிக்காரன் உறவாகத் திரிந்து போகிறதே என்பதில் வருத் தமடையாமல் 'பிச்சையெடுப்பவர்கள் போல இது என்ன பிழைப்பு' என்று உச்சக் கட்ட மாக தன் மீதே பரிதாபம் கொள்ளும் இன் னோரன்ன உபாதைகளெல்லாம் இல்லாத ஒரு றப்பர் நெஞ்சு சிற்றிதழை நடத்துபவர் களுக்கான ஒரு விசேட குண இயல்பாய் வந்து வாய்க்க வேண்டியது அவசியம்.

இத்தனையும் தெரிந்து கொண்டே விஷத்தையும் ஒருக்கால் குடித்துப் பார்த்தால் என்ன? என்ற விம்பும் கொண்டவர்களாகவே தொடங்கியிருக்கிறார்கள் 'யாத்ரா' குழுவினர். குழுவிலிருக்கும் நண்பர்கள் அஷ்ரஃப் சிஹாப்தீன், வாழைச்சேனை அமர், ஏ.ஜி.எம்.ஸதக்கா - எல்லோருமே கவிஞர்கள். எனவே முழுக்க முழுக்க மற்றவர்களையே

ஒலிபரப்பாளரும் கவிஞரும் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான சிதம்பரப்பிள்ளை சிவகுமார் 'யாத்ரா' கவிதைப் போட்டிப் பரிசளிப்பு விழாவின் போது 'யாத்ரா' இதழ்கள் பற்றி நிகழ்த்திய ஆய்வுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரப்பிள்ளை சிவகுமார்

"ஒரு மொழிச் சூழலில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஓர் எழுத்தாளன் தன் அடையாளத்தைத் தவிர்த்து விட்டு எழுதுவதும் பொதுவிலுள்ள மொழி நடையையே தானும் கையாள் வதும் பொதுவான எழுத்துக் களத் தையே தானும் தேர்வு செய்து எழுது வதும் அச்சமூகம் கருத்தியல் அடக்கு முறைக்குள் இருப்பதாகவே பொருள் தரும். இதற்கு முந்திய காலங்களில் அவ்வாறுதான் எழுதப்பட்டது. எதிர் பார்க்கவும் பட்டது. இப்போது நிலைமை மாறியிருக்கிறது. ஒரே மொழியாக இருந்தாலும் அதைப் பயன்படுத்து வதில் தனித் தன்மையும் சுதந்திரப் படைப்பூக்கமும் தன்னை உணர்ந்து கொண்டு விட்ட சமூகத்தின் செயற் பாடுகள். இதன் ஒரு குறிகாட்டியாக வும் எனக்கு 'யாத்ரா' தெரிகிறது. அதன் வருகை தொடர்வதில் நம் சமூகத்திற்குப் பொறுப்புண்டு."

யாத்ரா இதழ்களினூடான யாத்திரை

நம்பியிருக்க வேண்டியதில்லை. கையாலும் மடியாலும் போட்டு ஒப்பேற்றுவார்கள் என்று நம்பிக்கை கொள்ள நினைக்கிறோம். ஆனாலும் தீவிர புரட்சிகர சிந்தனை கொண்டவர்களுக்கும் கல்யாணமான பிறகு நிகழ்கிற திருப்பம் போல இவர்கள் கைவசம் இருக்கிற வண்ணங்களும் தீர்ந்து போகும் கட்டம் வருமா? தந்தையரும் தனயர்களும் எழுதி முடித்த பிறகு என் வண்ணங்கள் அனைத்தையும் செலவு செய்த விட்டேன் என்று களைத்துப் போய்ச் சொன்னாரே... துர்கயனிவ். அதுபோல இவர்கள் வண்ணங்களும் எத்தனை இதழ் கள் வரை தீர்ந்த போகாமல் இருக்கும் என்ற கேள்வியும் தன் தூரத்தலைத் தொடங்கு கிறது.

'மிக நீண்ட மனப் போராட்டத்தின் பின்தான் களத்தில் இறங்குவது என்று முடிவு செய்தோம்' என்று அறிமுகக் குறிப்பிலேயே சொல்கிறார்கள். 'படைப்பு களைச் சேகரிக்கலாம் என்று கவிஞர்களைத் தேடினால் பலர் வெளிநாட்டில் இருந் தார்கள். சிலர் எழுதுவதை விட்டு விட்டார்கள். சிலர் எப்போதாவது இருந்து விட்டு எழுதுகிறார்கள். சிலரோ ஐரோப்பிய நாடுகளிலிருந்து மழமழப்பான தாளில் வரும் சஞ்சிகைகளுக்கு மட்டும் எழுது கிறார்கள். எஞ்சியவர்களுள் சிலர் 'பார்க்கலாம்' என்றார்கள். இப்படி ஆளுக்கு ஆள் ஒரு வட்டத்தைப் போட்டு அதற்குள் ஒரு நாற்காலி போட்டு அல்லது சிம்மாசனம் போட்டு அழுத்தமாக உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனாலும் நாம் மனம் தளரவில்லை. தனிப்பட்ட முறை யிலும் தொலைபேசியிலும் கவிஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரைத் தொடர்ந்து தொடர்பு கொண்டபடியே இருந்தோம். வாழ்த்தும் வரவேற்பும் சொல்லிச் சிலரும் நமது தொந்தரவு தாங்கொண்ணாமல் சிலரும் படைப்புகளைத் தந்திருக்கிறார்கள்'. இது முதல் இதழ் நிலைமை.

'இலக்கிய உலகில் சஞ்சிகைகள் எவையும் இலாபத்துக்காகப் போராடுவன அல்ல, இருப்புக்காவே போராடுகின்றன' என்று இரண்டாவது இதழ்க் குறிப்புச் சொல்கிறது. 'மூன்றாம் இதழுக்கு வந்த விட்டதில் மிக்க மகிழ்ச்சி நமக்கு' என்று மூன்றாம் இதழ் வந்தவுடன் குறிப்பு. சந்தோஷத்தில் அவர்கள் மூச்சு வாங்குவது நமக்குக் கேட்கிறது. முன் பக்கங்களில் வந்து கொண்டிருந்த ஆசிரியக் குறிப்பு ஐந்தாம் இதழிலிருந்து 'கடைசிப் பக்கம்' ஆகிறது. நானும் குட்டு வாங்கிக் கொள்கிறேன்... 'கடும் வேலைப் பழுவுக்கு மத்தியில் 'முயற்சிக்கிறேன்' என்கிற வார்த்தையை மட்டுமே அவரால் தர முடிந்தது' - என்ற வஞ்சப் புகழ்ச்சியில் நனைகிறேன். ஆறாவது இதழ் வரவேண்டிய நேரத்தில் ஐந்தாவது இதழ் வருவதற்குக் காரணம், படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் வராமையே என்று குறிக்கிறார்கள். தொடர்ந்து, 'இந்தக் காரணத்தினாலேயே சஞ்சிகையொன்றை நடத்த முடியாத நிலைக்கு சஞ்சிகை ஆசிரியர்கள் தள்ளப் படுகிறார்கள் என்பதை வேதனையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது. இப்படி நாம் குறிப்பிடுவது கொண்டு 'யாத்ரா'வை நிறுத்திவிடப் போகிறோம் என்பது கருத்தாகாது' என்று நமக்குத் தைரியம் ஊட்ட முயற்சிக்கிறார்கள். நிங்கள் நினைத்தது நடந்து விடப் போகிறது என்று அவசரப் பட்டு முடிவுக்கு வந்து விட வேண்டாம் என்ற எச்சரிக்கை. நம் பார்வையில் பரிதாபம் குடியேறுகிறது.

விஷயதானங்கள் முதல் விளம்பரங்கள் வரை பெறச் சிரமப் படுவதாக ஆறாவது இதழ் குறிக்கிறது. மனதுக்கு ஒவ்வாததை யும் தந்து இதழை ஒப்பேற்ற வேண்டியிருப்பதற்கான மன வருத்தம் ஏழாவது இதழில் வருகிறது. கடைசிப் பக்கத்தில் இப்படிக் குறிப்பு: 'அதி சிறந்தவற்றைத்தான் பிரசுரிக்க வேண்டுமென்றால் யாத்ரா'வை வருடத்துக்கு ஒன்று என நான்கு பக்கங் களில்தான் வெளியிடலாம். அத்துடன் இளையவர்கள் தொடர்பைத் துண்டித்துக் கொள்வார்கள். 'யாத்ரா'வில் நல்ல கவிதைகள் சிலவற்றை அவர்கள் படிக்கும் வாய்ப்பும் அற்றுப் போகும்' என்றவாறு தரமற்றது என்று தாங்கள் கருதும் ஆக்கங் களையும் பிரசுரிக்க வேண்டியிருப்பதற் கான நியாயங்களைச் சொல்ல ஆரம்பிக் கிறது 'யாத்ரா'.

சந்தாதாரராகச் சேருங்கள் என்றோ வாங்கிப் படித்து ஆதரவு தாருங்கள் என்றோ அதிகம் புலம்பல்கள் இல்லை. தேவை-தரமான ஆக்கங்கள்! அதுதான் இதழாசிரியர்களுக்கான உத்வேகத்தையும் தொடர்ந்து இதழை உற்சாகத்துடன் கொண்டு வருவதற்கு வேண்டிய ஊக்கத்தையும் அளிக்கும். முயன்று ஓர் ஆயிரம் ரூபாய் அல்லது ஆயிரம் சந்தா சேர்த்துக் கொண்டு விட்டால் சிலவேளை சஞ்சிகை நின்று விடாமல் கொண்டு வரலாம். ஆனால் சிறு சஞ்சிகையாளனுக்கு தொடர்ந்து செயற்படு தற்கான உந்துதலை, வீறை அது கொடாது. அவன் கைக்காசை இழந்து, தன் குடும்பத் துக்குத் துரோகம் செய்பவனாகி, நிம்மதி தொலைத்து, பல் வேறு மன அவசங்கள் அர்ப்பணிப்புகளோடெல்லாம் மூச்சுப் பிடித்துச் சஞ்சிகையை வெளிக் கொணர் வதற்கான மன ஆவேசத்தை 'நான் தரமான ஒரு படைப்பை இந்தச் சமூகத்துக்குத் தந்து கொண்டிருக்கிறேன்' என்ற திருப்திதான் தர முடியும்.

தன்னளவில் தான் சிறந்ததென்று கருதுபவற்றைத் தேர்ந்து தந்து கொண்டிருக்கிறேன் என்பதும் சமூகம் அதைப் பெற்றுக் கொண்டதற்கான எதிர் வினைகளை பாராட்டாகவோ விமர்சனமாகவோ தருவதுமே அவனைச் செயல்பட வைக்கும் ஊக்கியாக அமையும். பிடிக்காததைச் செய்யக் கட்டாயப்படுத்தப் படுவதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல கொடுமை வேறில்லை. அது சோர்வை ஏற்படுத்தும். 'யாத்ரா' அதை எதிர் கொள்கிறதா?

படங்களில் அந்த ஐ.சி. யுனிற் காட்டப்படுகையில் - ஈ.சி.ஜி ஒளிக் கோடுகள் இதயத் துடிப்பைச் சொல்ல ஏறி இறங்குவது போல நாமும் படபடப்போடு பார்த்திருக்கிறோம். எட்டாவது இதழிலிருந்து கடைசிப் பக்கம் கருத்துப் படங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. ஒன்பதாவது இதழிலிருந்து 'கடைசிப் பக்கத்துக்கு முன் பக்கம்' என்றாகிறது ஆசிரியர் குறிப்பு. 'ஓர் இலக்கிய இதழை நடத்துபவர் அதிலுள்ள வேதனைகளையும் சிரமங்களையும் சொல்லி அவ்வப்போது ஒரு பாட்டம் அழுது தீர்த்து விட்டு பின்னர் நிறுத்தி விடுவதுதான் மரபாயிருந்து வந்திருக்கிறது' என்று அந்தக் குறிப்பில் மீண்டும் நினைவு படுத்தப்படுகிறது. அந்த ஈ.சி.ஜி படத்தின் ஒளிக் கோடுகள் வேகமாக உயர்ந்து, தாழ்வதாக நமக்குப் பிரமை தட்டுகிறது. கஷ்டங்கள் எந்த விதமானதாக இருந்தாலும் - பயம் - இதழ் நின்று விடுமோ என்பதில் வந்து நிற்கிறது. வீட்டில் யாருக்கு என்ன சுகவீனம் வந்தாலும் வயிறு வலியோ, சுளுக்கோ, மண்டையிடியோ - எதுவானாலும் கொத்தமல்லி, கஷாயத்தோடு அம்மா வந்து விடுவதைப் போல.

ஒரு சஞ்சிகையாளனிடம் இருக்கும் ஓர்மம்தான் அந்தச் சஞ்சிகையைத் தொடர்ந்து கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கிறது. அதே சமயம் அதே ஓர்மம் - அவர்களை லௌகீக வாழ்வில் வெற்றி பெற விடாமல் செய்து விடுகிறது. சமூகத்தின் மிகப் பரிதாபத்துக்குரிய பிறவியாக அலைந்து கொண்டிருப்பவர் இவர் - சமரசமின்மையின் விளைவான தோல்வியால் கௌரவிக்கப் படுகிறவர்களாக. கலைஞனைப் பட்டுப் பூச்சியோடு ஒப்பிடுகிற கார்ல் மார்க்ஸின் மேற்கோள் ஒன்று உண்டு. படைப்பைக் கொடுப்பதற்காகதான் மரணமுறுவது பட்டுப் பூச்சியின் இயல்பு. தன் அழிவில் தோன்றும் அழகு கலைஞனின் படைப்பு. இதைப்போல தொஸ்தவெஸ்கியும் சொல்லியிருக்கிறார். 'எழுதுவது மிகவும் துன்பம் தருவது. தன்னைத் தானே பலி கொடுப்பதற்கு நிகரானது' என்று அவர் குறிப்பிடுகிறார். இந்த வருத்தமும் வாதையும் கலைஞனைத் தன் மதிப்புள்ளவனாக மாற்றுகின்றன. சமூகத்தால் 'திமிர்' என்று கூறப்படத்தக்க துணிவும் ஓர்மமும் உடையவராகிறார்கள்.

'டைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகையில் எழுதிக் கொண்டிருந்த நரேந்திரன் என்பவர் பற்றி ஒரு கதை உண்டு. ஒரு சமயம் இந்திரா காந்தியைப் பற்றிக் கடுமையான விமர்சனம் எழுதியிருந்தார் அவர். அதன் பிறகு விமான நிலையத்தில் பலர் மத்தியில் அவரைச் சந்தித்த இந்திரா, 'நான் மட்டும் பிரதமராக இல்லாதிருந்தால் உங்கள் முகத்தில் அறைந்திருப்பேன்' என்றாராம். உடனேயே நரேந்திரன், 'நான் பத்திரிகையாளனாக இருந்தாலும் திருப்பி அறைந்திருப்பேன்' என்றாராம். சிவந்த முகத்தோடு காருக்குப் போன இந்திரா சுதாகரித்துக் கொண்டார். திரும்பி நரேந்திரனை அழைத்து, 'அது ஒரு நல்ல பதில் நரேந்திரன், மன்னியுங்கள்' என்றாராம். சமரசமின்மையின் விளைவான தோல்வியால் கௌரவிக்கப் படுகிறவர்கள் என்றுதான் இவர்களைச் சொல்ல வேண்டும்.

இந்த ஊடிழையில் எந்தவொரு இதழையும் வெளிக் கொணர்வது என்பது வெறுங்கையால் பாறையைப் பிளந்து கொண்டு வருவது போலத்தான். பத்தாவது இதழ் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுச் சிறப்பிதழாக மலர்கிறது. பதினோராவது இதழ் பிழைத்து விடுவோம் என்ற உறுதியையும் நம்பிக்கையையும் தாங்கி வருகிறது. 'யாத்ரா'வினர் உற்சாகம் பெற்றுக் கொள்வதற்கான எதிர் வினைகள் சமூகத்திடம் இருந்து கிடைத்திருப்பதாக நன்றியோடு பதிவு செய்கிறார்கள். 'யாத்ரா'வின் வருகை தாமதப் பட்டதில் நின்று விட்டதோ என்று சந்தேகப் பட்டு பலர் நேரிலும் தொலைபேசியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுப் பூச்சி செய்வது போன்று...

கன்னட மூலம்:
மகாதேவியக்கா
தமிழில்:
பண்ணாமத்தார்

பட்டுப் பூச்சி
ஆதுரத்துடனதன்
மச்சையிலிருந்து தன்
சிற்றிலை நெய்து

சுற்றுண்டு...
சுற்றுண்டு...
உடலின் இழைகளில்
கட்டுண்டு இறுகி
மரிப்பது போன்று –

மனம் விரும்புவதை
ஆசைப்பட்டு எரிகிறேன்
என் எஜமானனே
மல்லிகார்ஜுனா

இதயப் பேராசையை
ஊடறுத்து
இவள் வெளியேற
உன் வழிகாட்டு

12ம் நூற்றாண்டில் கன்னட மொழியில் எழுதிய இந்தியப் பெண் கவிஞர் மகாதேவியக்கா. சடங்கு, சம்பிரதாயங்களை வெறுத்தொதுக்கி சைவ நெறி நின்ற சிவ பக்தை. ஏ.கே.ராமானுஜனின் speeking of Siva என்ற பெங்குவின் மொழிபெயர்ப்புத் தொகுதியில் இடம் பெற்றுள்ள கவிதை இது.

கடிதத்திலும் தொடர்பு கொண்டு விசாரித்த வண்ணமிருந்தனர். சிலர் எதுவுமே பேசாமல் தங்களது படைப்புக்களை அனுப்பிக் கொண்டிருந்ததன் மூலம் சஞ்சிகை நின்று விடக் கூடாது என்பதை எமக்குணர்த்தினர். அவர்கள் அத்தனை பேரினதும் அன்பை 'யாத்ரா' பெரிதென மதிக்கிறது' என்று கூறி நெகிழ்கிறார்கள்.

'யாத்ரா'வின் முதல் இதழ் 2000மாம் ஆண்டு ஜனவரி மாதம் வந்திருக்கிறது. சரியாக நான்கு வருடங்கள் கழித்து 2004 ஜனவரியில் 12வது இதழ் வெளிவருகிறது. சராசரி பார்த்தால் வருடத்துக்கு மூன்று இதழ்கள். அளவென்று பார்த்தால் மிகக் குறைவுதான். ஆனால் இவ்வாறான சஞ்சிகைகள் ஏற்படுத்தும் தாக்கம் எண்ணிக்கைகள் கொண்டு அளக்கப்படுவதில்லை. வானம் வசப்படுவது சிறகுகளின் வலிமையால் தானேயல்லாமல் நீள அகலங்களால் அல்ல. இந்தப் பன்னிரண்டு இதழ்களிலும் 'யாத்ரா' சுக்கான் கெட்டியாகப் பிடிக்கப்படாத படகு போல நின்று விடுமோ மூழ்கி விடுமோ என்ற பயத்தோடும் தத்தளிப்போடும் பயணம் செய்திருந்தாலும் பல அபூர்வத் துறைமுகங்களைச் சென்றடைந்திருக்கிறது. 'யாத்ரா'வின் முயற்சியாக நாம் பின்வருவனவற்றைத் தொகுத்துக் கொள்ள முடியும்.

நல்ல கவிதைகளுடனான பரிச்சயத்தை ஏற்படுத்தல்.நல்ல கவிதைகள் எங்கிருந்து வந்தாலும் வரவேற்றல். இளையவர்களைக் கவிதைகளின் பால் ஊக்கப்படுத்துதல். கவி முன்னோடிகளை நினைவு கூர்தல். அயல் மொழி, பிற மொழிக் கவிதைகளைக் கொண்டு வந்த தமிழில் சேர்த்தல். காற்றைப் போலவோ கடவுளைப் போலவோ பிடிக்குள் சிக்காமல் எட்ட நின்று அழகு காட்டுகின்ற இந்தக் கவிதை என்ற மாயா ஜாலத்தை அவரவர் அனுபவங்களினூடாகப் பகிர்ந்து கொள்ள, விளங்கிக் கொள்ள இடங் கொடுத்தல். கவிதை நூல்களை அறிமுகப் படுத்தல். கவிதை சார்ந்த நிகழ்வுகளைப் பதிவு செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேட்டிகள் மூலம் கவிதா ஆளுமைகளை வெளிக் கொண்டு வருதல்.

இதற்கு ஓர் உதாரணத்தைத் தர வேண்டும். 'வாழ்வோரை வாழ்த்துவோம்' தொடரில் உங்களைக் கௌரவிக்க அழைத்த போது நீங்கள் மறுத்தது ஏன்?' என்று பாவலர் பஸீல் காரியப்பரிடம் கேள்வி. அதற்கு அவர் பதில், 'வாழ்வோரை வாழ்த்துவோம் ஒரு நல்ல முன்மாதிரியான திட்டம். என்னை அமைச்சர் அஸ்வர் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். என்னை விட்டு விடுங்கள் என்று நான் மறுத்தேன். பட்டங்கள் பெறுவதும் 'ஸ்பொட் லைற்'றில் நிற்பதும் இன்றைய அவலச் சூழலில் எனக்குக் கஷ்டமாக இருந்தது. பாவலர் பட்டம் ஒன்றே போதும் என்ற திருப்தியுடனிருக்கிறேன். பத்தாயிரம் ரூபாவுக்கு எனது திருப்தியை இழக்க நான் விரும்பவில்லை. இன்றைய நிலையில் பாவலர் பட்டம் கிடைக்குமாக இருந்தால் நான் அதையும் மறுத்திருப்பேன். பஸீல்காரியப்பர் போதும். பெயர் நன்றாக இருக்கிறது தானே...' இம்மாதிரியான ஆளுமைகளை 'யாத்ரா' தனது பல பக்கங்களிலும் வெளிப்படுத்தியிருப்பதை நாம் காணலாம். சமரசமின்மையின் விளைவான தோல்வியால் கௌரவிக்கப்படுகிறவர்கள். தோல்வி என்பது வெறும் பொருளாதார வாழ்க்கையின் தோல்விதான். அந்த பேட்டியில் பாவலர் மேலும் சொல்கிறார். 'நான் எப்படி வரவேண்டுமென்று எனக்குள்ளே ஒரு படத்தை வரைந்து கொண்டு அந்த மனிதனை ஆக்குவதில் நான் ஈடுபட்டிருக்கிறேன். மனித உறவை மலர்வித்தல், மனித உறவைச் செப்பனிடுதல், மனித உறவுக்கு நம்பிக்கை ஊட்டுதல், நலிந்த மனிதனுக்கு இரங்குதல், அதற்காகப் போராடுதல் - ஒரு போர்க் குணம் கொண்டவனாக, சீற்றமுள்ளவனாக வாழ விரும்புகிறேன்.'

இந்த இடத்தில் 'யாத்ரா' தன் அளவு கோல் உயரத்திலிருந்து இறங்கி வந்து இளையவர்களை உற்சாகப் படுத்தவென்று சொல்லிய நியாயம் சரி என்று படுகிறது. இளையவர்களின் கவிதைகளுக்கு இடம் கொடுத்தால் அவர்கள் தங்கள் கவிதைகளுக் காகவேனும் 'யாத்ரா' வைப் பார்ப்பார்கள். 'யாத்ரா'வைப் பார்த்தால் இது போன்ற பேட்டிகளையும் பார்ப்பார்கள். பார்த்து. உள்வாங்கிக் கொண்டார்களானால் அவர்களும் பெரிய கவிஞர்களாகி விடுவார்கள்.

பிரபலமாய் அறியப்படாத கவிஞர்களும் நம் மனதின் அந்தரங்கங்களை தங்கள் எழுத்தில் பதிவு செய்திருப்பதைப் பார்க்கிறோம். ஐந்தாவது இதழில் முல்லாவின் கவிதை சொல்வது போல எல்லோரும் அவரவர் பங்குக்கு தீர்ப்புகளை வலியுறுத்தியபடியிருக்கிறார்கள். இவர்களிடமிருந்து தப்பித்து நாமும் யார்மீதாவது தீர்ப்புச் சொல்ல ஆள் அகப்பட மாட்டாரா என்று தேட ஆரம்பித்து விடுகிறோம்.

மரபு என்றோ பண்பாடு என்றோ அல்லது எல்லோரும் இப்படித்தான் இருக்கிறார்கள் என்று சொல்லியோ நாம் பல அநீதிகளை அங்கீகரித்தே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கவிஞர்களே ஒவ்வொன்றின் மீதும் கேள்வியை வைத்து சமூக மனச்சாட்சியைத் துடிக்க வைக்கிறார்கள். தங்கையை அண்ணன் ஒருவன் அடிக்கிறான். அதை அப்பா தடுக்கிறார். அவளை அடிக்க எனக்கு உரிமை இல்லையா என்று கேட்கிறான் அண்ணன். கல்யாணமாகாதிருந்தால் அடிக்கலாம். கல்யாணமான பிறகு புகுந்த வீட்டுக்குத்தான் அந்த உரிமை உண்டு என்று பதில் சொல்கிறார் அப்பா. கல்யாணமாகி விட்டால் அவளை அப்பாவோ அண்ணனோ அடிக்கலாகாது என்பதைப் பண்புடைய செயலாக நினைத்துக் கொள்கிறோம். எதற்கு அவள் ஆணிடம் அடி வாங்க வேண்டும் என்பது கேள்வியாவதில்லை. பஹீமா ஜஹானின் ஒரு கவிதை கேட்கிறது.. 'உனது உரையாடலின் தொனி / நான் தவறிழைத்து விட்டதென உணர்த்திப் போவது அறிவாயா?' அந்தக் கவிதை மேலும் 'உனதுள்ளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைகள் கொண்டோ தீமைகள் கொண் டோ / எனக்குத் தீர்ப்பெழுதி விடாதிருப் பாயாக' என்று கேட்டுக் கொள்கிறது. 'உன்னைக் காட்டிலும் மோசமான துரோ கத்தைப் புரிந்திருக்கிறது இயற்கை எனக்கு / உன்னிலிருந்துதானே தொடங்கிற்று / எனது தோல்வியின் முதலாவது நிலை' என்று சல்மாவின் கவிதை வரி சொல்கிறது.

செய்திப் பத்திரிகைகளும் அரசாங்கமும் இப்படியான பொது மேடைகளும் நாட் டைச் சமாதானப் பூங்காவாகக் காண்பித் துக் கொள்ளலாம். ஆனால் சமூகத்தி னுள்ளே கொதிக்கும் குழம்பின் சூட்டை அல்லது இதழ் விரியச் சிரித்திருக்கும் ரோஜாவின் அடியிலுள்ள முள்ளைக் கவிஞன் வெளிப்படுத்துகிறான், கண்டு கொள்ளுங்கள் ஆபத்தை என்பதாக. 'உதடுகளில் எஞ்சியிருந்த சிரிப்புகளின் / சினேகபூர்வக் கனவுகளும் சிதைந்து போயிற்று / வரம்பு மீறிய உணர்சிகளுள்ளே சிக்குண்டு கிடக்கும் / நரம்புகள் பீறிடலாம் இனி / திருகி எறிந்த தேங்காய்ப் பூவும் புட்டும் / ஒட்டாது எனும் நம்பிக்கை / ஆழமாக இதயங்களுள் ஆணியறைந் தாயிற்று.' இது வாழை இப்று ஹஸன் கவிதை. 'இனி நினைவு கூரப்பட வேண்டியது / 83 கறுப்பு ஜூலை மட்டு மல்ல / 2002 கறுப்பு ஜூனும்தான்' என்கிறார் ஒட்டமாவடி அறபாத். மனித இயல்புகளை சோடனையொளித்த பட்ட வர்த்தனமாகவும் தன் அனுபவத்தைப் பொதுவாக்கி அங்கதமாகவும் சொல்லி விடுவதற்கு புதுக்கவிதைகளின் மரபாகிப் போன இறுக்கத்தை உடைத்து நேரடியாக நகரும் வரிகள் இன்றைய ஒரு கவிதைப் பாணியாக முகிழ்த்திருக்கிறது. அஷ்ரஃப் சிஹாப்தீன், முல்லா போன்றோரின் சில கவிதைகள் அதைப் பிரதிநிதிப் படுத்தி யிருக்கின்றன. கவிஞர்கள் நடத்தும் இதழ் என்பதால் எல்லா இடங்களிலும் வார்த்தை களின் விரயம் தவிர்க்கப் பட்டிருக்கிறது கவனமாகவே.

'யாத்ரா'வின் தோற்றம் ஒரு வகையில் இன்றைய சமூகச் சூழ்நிலையையும் உணர்த்துவதாக இருக்கிறது என்பது என் அபிப்பிராயம். ஒரு மொழிச் சூழலில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஓர் எழுத்தாளன் தன் அடையாளத்தைத் தவிர்த்து விட்டு எழுதுவதும் பொதுவி லுள்ள மொழி நடையையே தானும் கையாள்வதும் பொதுவான எழுத்துக் களத்தையே தானும் தேர்வு செய்து எழுதுவதும் அச்சமூகம் கருத்தியல் அடக்கு முறைக்குள் இருப்பதாகவே பொருள் தரும். இதற்கு முந்திய காலங்களில் அவ்வாறுதான் எழுதப்பட்டது, எதிர்பார்க்கவும் பட்டது. இப்போது நிலைமை மாறியிருக்கிறது. ஒரே மொழியாக இருந்தாலும் அதைப் பயன் படுத்துவதில் தனித் தன்மையும் சுதந்திரப் படைப்பூக்கமும் தன்னை உணர்ந்து கொண்டு விட்ட சமூகத்தின் செயற்பாடு கள். இதன் ஒரு குறிகாட்டியாகவும் எனக்கு 'யாத்ரா' தெரிகிறது. வாழும் சமூகமும் மொழியும் ஒற்றைப்படையான இயக்கத் தைக் கொண்டிருப்பது ஒரு போதும் சுதந்திரமான வாழ் நிலையைத் தராது. எந்தக் கருத்தும் அதன் முரண்கள் வெளிப் படும் போதுதான் இயக்க நிலைக்கு வரு கிறது என்பது ஓர் அடிப்படை விதி. அசைவு களற்றிருக்கும் தமிழ்ச் சூழலுக்கு 'யாத்ரா' போன்ற இதழ்களின் பங்களிப்பு முக்கிய மானது. அதன் வருகை தொடர்வதில் நம் சமூகத்திற்குப் பொறுப்புண்டு.

இலக்கியம் பற்றி, சமூகம் பற்றி, வாழ்வு பற்றித் தீவிர கவனங்களைத் தருகிற சஞ்சிகைகளும் இந்தப் பூமிக்கு வருகிற குழந்தைகளைப் போல நாம் அவதானித்துப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியவைதான். அதன் இழப்பு என்பது இந்த உலகு பற்றி ஒரு புதுப் பார்வையின் இழப்புத்தான். அதன் உயிர் வாழ்தல் என்பது நம் ஒவ்வொருவருடைய பொறுப்பும் என்றாகிறது. இருக்கும் போது குழந்தையின் உடல் இந்தப் பூமியில் எடுத்துக் கொள்கிற இடம் குறைவுதான். ஆனால் அதன் மரணம் இங்கு விட்டுச் செல்லும் காலி இடம் பலமடங்கு அதிகம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பு சுண்டிய யாழ்

நரம்பறுந்த யாழின் இசையென
உன் இரத்தல் பா
செவி படர்ந்திற்று

பசியை இசையாய் நீ இறக்கிய
வெயிற் பொழுதில்
அத்தனை சோடிக் காதுகளாலும்
முழுச் செவிடாய்
உன்னைக் கடக்கும் பெரும் வீதி
என் செவியிற் படர்ந்திற்று
உன் இரவுப் பா

உன் அருகு நின்ற கணங்களில்
என் நரம்புகள் மொத்தமும் உருகி
மன யாழின் கவி
காற்று வெளியும் கடந்து போயிற்று

உன் இரங்கற் பா
செவியாதோரைக் காணவொண்ணா
விழிகளுக்குள்
என்னை மட்டுமாய் அழைத்தாய்
குரல் கம்மிய யாழின் இசையாய

என் நரம்பு சுண்டிய
நரை மண்டிய யாழே
அறுந்து போயிற்று அக்கணம்
என் மனம்

உன் செவியுறு யாழின் கனவுகள்
இனி எவரெவர் வசம

ஓர் இசையிழந்த காற்றின் மரிப்பில்
ஒப்பாரி கேட்டபடியிருக்கிறது
நெஞ்சுள்
அப்பக்கம் நான் போகுந்தோறும்
எப்போதும்

என் நரம்பு சுண்டிய
நரை மண்டிய யாழே
நீ
காற்றில் எதை எழுதிச் சென்றனை

– முல்லை முஸ்ரிபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யாத்ரா'
கவிதைப் போட்டிப் பரிசளிப்பு விழா

03.01.2004

'யாத்ரா' கவிதைப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் அதன் 9வது வெளியீடான வாழைச்சேனை அமரின் 'நீ வரும் காலைப் பொழுது' கவிதை நூல் வெளியீட்டு விழாவும் கடந்த 03.01.2004 அன்று கொழும்பு - மருதானை டவர் அரங்கில் நடைபெற்றது.

கவிஞர் டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் துறைமுக அபிவிருத்தி, கப்பற்றுறை மற்றும் கிழக்கின் அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார முன்னாள் அமைச்சர் மாண்புமிகு ரவூப் ஹகீம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கவிஞர்கள், இலக்கியவாதிகள், படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



தங்க, வெள்ளி, வெண்கல ரோஜாக் கிண்ணங்கள் - "யாத்ரா" ஞாபகார்த்தக் கேடயங்கள் - சான்றிதழ்கள் மற்றும் பரிசளிப்புக்காக கவிஞர் டாக்டர் அபூபக்கர் அன்பளிப்புச் செய்த நூற் பொதிகள்

பிரதம அதிதியிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இரண்டாமிடம் - வெள்ளி ரோஜா
ரூ.3000.00 பணப் பரிசு
செல்வி. பஹீமா ஜஹான்

மூன்றாமிடம் - வெண்கல ரோஜா
ரூ.2000.00 பணப் பரிசு
செல்வி. பிரேமினி சபாரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காமிடம் - ஜனாப். முல்லை முஸ்ரிபா
பிரதம அதிதியிடமிருந்து

ஏழாமிடம் - ஜனாப். எம்.எம்.விஜிலி
சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதிடமிருந்து

பத்தாமிடம் - செல்வி ஷரீபிலா ஏ. றஹீம்
டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனிடமிருந்து

வரவேற்புரை
இளநெஞ்சன் முர்ஷிதீன்

தலைமையுரை
ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

'யாத்ரா' கடந்து வந்த பாதை
சொல்லும் 'யாத்ரா' உதவி ஆசிரியர்
ஏ.ஜி.எம்.ஸதக்கா

'ஒரு வாசகனின் 'யாத்ரா'
பற்றிப் பேசும் மாத்தளை
எம்.எம்.பீர் முஹம்மத்

கவிதை நூலை விமர்சிக்கும்
'மூன்றாவது மனிதன்' சஞ்சிகை
ஆசிரியர் எம்.பெளஸர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப் பொழிவு

பிரதம அதிதியிடமிருந்து புரவலர் ஹாஷிம் உமர் சார்பில் முதற் பிரதியையும் தனது சிறப்புப் பிரதியையும் பெறும் ஒலிபரப்பாளர் ஜனாப். அப்துல் ஹமீத்

கவிஞர் உஸ்மான் மரிக்கார்

பிரதம அதிதியிடமிருந்து சிறப்புப் பிரதி பெறும் ஜனாப். ஸமான் தாஹா

கவிஞர் ரவூப் ஹஸீர்

'யாத்ரா' திடீர்க் கவிதைப் போட்டி

பரிசுக் கவிதை

தன்னாட்சி அதிகாரம் கிடைக்கும்
திமிரில்
என் வேலியோரம் உரசித் திரி
வேலி ஈர்க்கில் இனிக் கவிபாடும்
எனக்கும் பரிசு வேண்டும்-
ஷஹீதாக!

கொழும்பு.3, காலி வீதியில் அமைந்துள்ள 'மானஸி' ஆடையகத்தின் ஆதரவில் விழாவின் போது நடத்தப்பட்ட பத்து வரிக்கு மேற்படாத 'சுள்'ளென்ற உடனடிக் கவிதைப் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற கே.முனாஸ் 'மானஸி' நிறுவன உரிமையாளர் கவிஞர் அரபி வழங்கியிருந்த பரிசுப் பொதியை அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம அதிதியால் கௌரவிக்கப்படும் மூவர்

மல்லிகை ஆசிரியர்
திரு. டொமினிக் ஜீவா

நண்பர் இலக்கியக் குழு ஸ்தாபகர்களில்
ஒருவர் - ஜனாப். ஏ.பி.எம்.இத்ரீஸ்

'யாத்ரா' இதழ்களை அழகுற
அச்சிட்ட கலைஞர் ஜனாப். பர்வீஸ்

நிகழ்ச்சியைத் தொகுத்து
வழங்கிய அறிவிப்பாளர் -
கவிஞர் மப்றூக்

நூலாசிரியர் பதிலுரை
'யாத்ரா' உதவி ஆசிரியர்
வாழைச்சேனை அமர்



உரை நிகழ்த்தும் பிரதம அதிதி

ஏற்புரையும்
நன்றியுரையும்
'யாத்ரா' ஆசிரியர்

பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள், படைப்பாளிகள், மற்றும் இலக்கிய ஆர்வலர்களால் நிறைந்திருக்கும் அரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலகமற்றுப்போன காஷ்மீர்

ஆகா ஷஹீத் அலி

ஆங்கிலத்திலிருந்து தமிழில்:

பண்ணாமத்துக் கவிராயர்

"அந்தோ! தொலைவில் உள்ள
நேசம் மிகுந்த அவனுக்கு
அனுப்பப்பட்ட கடிதங்கள்..."

- ஜீ.எம்.ஹொப்கின்ஸ்

காஷ்மீரில் அரசியல் குழப்ப நிலை காரணமாக 1990ல் சுமார் ஏழு மாதங்கள் அஞ்சலகங்கள் இயங்கவில்லை. தபால் விநியோகம் தடைப்பட்டது. பிரதான அஞ்சலகத்தின் முன்னால் பட்டுவாடாச் செய்யப்படாத தபால்கள் மலையாய்க் குவிந்து கிடந்தன. இக்காட்சியை தன் வீட்டிலிருந்தபடியே பார்க்க முடிந்த ஷஹீதுடைய தந்தையின் நண்பர் நடந்து போய் அக்குவியலிலிருந்து சாவகாசமாய்ப் பொறுக்கியெடுக்கிறார். என்ன ஆச்சரியம்! அந்நண்பருக்கு ஷஹீதுடைய தந்தை எழுதிய கடிதம் அது. இச்சம்பவமே இக்கவிதையின் பின்னணி. 1997ல் வெளிவந்த இக்கவிதையடங்கிய தொகுதியின் தலைப்பு: "அஞ்சலகமற்றுப் போன நாடு."

மினாராவொன்று கல்லறையான மண்ணுக்கு
மீண்டும் திரும்பியுள்ளேன்
அகல் விளக்குகளின் திரிகளைக் கடுகு நெய்யில்
தோய்த்தெடுத்திருக்கின்றார் யாரோ
ஒவ்வோர் இரவும் படியேறுகின்றது
கோள்களில் கிறுக்கப்பட்டுள்ள
செய்திகளைப் படிக்க
ஒவ்வோர் இல்லமும் புதையுண்டு
அல்லது வெறுமையுற்று
விலாசமிழந்த கடிதங்களின் காப்பகத்தில்
அவன் விரலடையாளங்கள் இரத்துச் செய்யும்
வெற்றுத் தபால் தலைகளை

வெறுமை? அநேகர் வெருண்டோடியதால்
சமவெளிகளில் அகதிகளாயவர்கள்
மலைக் குன்றுகளைக் கண்ணாடியாக்கும்
இறுதிப் பனி வீழ்ச்சியை வேட்டபடி
அதனூடு அவர்கள் காண்பர்
சுவர் போலவச் சூழும் நெருப்பிலிருந்து காக்க
வீடுகளை நாம் வெறியுடன் புதைப்பதை
இராணுவத்தினர் தீமூட்டிச்
சுழன்றெழச் செய்கின்றர் சுவாலைகளை
பொசுக்குகின்றனர் எம் உலகத்தை
திடீரெனப் பொன்னிழைத்த காகிதக் கூழ்
பின்னர் சாம்பல்

முஅத்தீன் இறந்ததும் ஒவ்வோர் அழைப்பையும்
இழந்தது நகர்
எரிப்பதற்கு இலைகள் போன்று
கூட்டிப் பெருக்கிய இல்லங்கள்
இப்போதெல்லாம் நாம்
எம் இல்லங்களைப் புதைக்கிறோம்
விட்டுச் சென்றதால் வெறிச்சோடிய
அவர்களதையும் தான்

விசுவாசிகள் நாம்- அவர்களின்
இல்லக் கதவுகளில்
மலர் வளையங்களைத் தொங்க விடுகிறோம்
பெரும் விசுவாசத்துடன்
இரவு தோறும் சூழும் தீயினுள்
இருளைத் தேடுகிறோம

"தீயினுள் நாம் இருளைத்
தேடிக் கொண்டு"
கையொப்பமின்றி வீதியில் கிடக்குமோர்
அட்டை விளம்புகின்றது
"குருதி வடிப்பவனாயிருக்க விரும்புகிறேன்
உம் கரங்களை நனைத்திட
அல்லது விட்டு வைப்பேன் குளிரில்
என் கரங்களை
மழை மசியாகும் வரை

இரவெல்லாம் தபால் தலைகளை
இரத்துச் செய்யும் முத்திரை குத்தலால்
என் விரல்கள் வலியின் விளிம்பில்"
பித்தேறிய வழி காட்டி
இல்லாமல் போனொர் இவ்வாறு
கதைக்கின்றனர்
சாம்பலான மண்ணில் அவர்களின்
ஆவி நடமாட்டம்

மாய இதயம் பிரார்த்திக்கிறது
அவன் உயிருடன் இருக்க வேண்டுமென
மழையில் திரும்பி வந்துள்ளேன்
அவனைக் காண
அவனேன் எழுதவில்லையென அறிய

நான் காசு கொணர்ந்துள்ளேன்
இலைவடிவ அலங்கார நாணயங்கள்
புதிய தபால் தலைகள் வாங்க
தேசப் பெயரற்ற அரிய தபால் தலைகள்
புதையுண்ட வெறிச்சோடிய வீடுகளில்
தேடுகிறேன் அவனை

இன்னுமவன் உயிருடன்
இருத்தல் கூடும்
புகைப் படலக் கதவு திறந்து
இருளில் தன் சாம்பல் பல்லவியை

இசைத்த வண்ணம்
"எல்லாம் முடிந்தது
எஞ்சியது ஒன்றுமில்லை"

மௌனத்தை வலிந்து நான்
கண்ணாடியாய் மாற்றனும்
- அவன் குரலைப் பார்க்க
- அவனிடம் மீண்டும் நான்
திசை கேட்டறிய

அலை பாய்ந்து பரவுகிறது தீ
அந் நதியை நான்
கடந்தாகணும்

அஞ்சலகம் ஒவ்வொன்றும்
வழிகிறது நிரம்பி
இதழ் வடிவில் கத்தரித்த தோலில்
என் செய்தியைச் சிறைகளுக்கு
எடுத்துச் செல்வது யார்?

மௌனம் - அல்லது செயலிழந்த
அலுவலக யன்னல்களின்
இருண்ட கண்ணாடிச் சட்டங்கள்
மட்டுமே
அவனுக்கு இனங்காட்ட முடியும்
என் கடிதங்களை!

மனிதனின் முகங்களோடு ஒரு பேய்க் கனவு

சிருஷ்டித்து வைத்த வாழ்க்கை
இல்லையென்றாயிற்று
நரிகளின் தந்திரங்களோடு
குரங்குகளின் தாவல்களாய்
மனதின் தொழிற்பாடுகள்
தொடங்கிற்று
மண்ணின் பற்றுதலிலிருந்து
புறந்தள்ளப்படும் வேரின் வேதனை
கிளைகளில் தாவி
இலைகளாய் விழத் தொடங்கிற்று

காற்றில்
முன்னெப்போதும் உணர்ந்திரா நெடி
அவசரமாய் மரணத்தை அழைக்க
சுவாசப் பைகளை சூழப் பரவிற்று
அறிவின் கழுத்தை நெரிக்க
அசுர கெதியோடு
விஞ்ஞானத்தின் விரல்கள் நீள
மறுகை
சுயவிருப்பின் கால்களை அறுக்க
கைவாளோடு வந்திற்று

"ஷெல்" வீச்சுக்களின் திறனை
"செல்" பேசிகள் பேசிக் கொண்டன
"வயாகரா"வின் வீரியத்திற்கு
கருத்தடை மாத்திரைகள்
உத்தரவாதமளிக்க
மனிதன்
புணர்ந்து செத்துக் கொண்டிருந்தான்
நாயைப் போல

சுதந்திரம் என்பது
நாள் பட்ட புண்ணின் சீழாய்
துர் நாற்றச் சேற்றை
வாரியிறைக்க
உலகம் நாறிக் கிடந்தது
பழங் கறிச் சட்டியாய்

சமாதானத்தின் கதவு-
வெளியே சாவியை வைத்து விட்டு
உள்ளே தேடும்
புதுமணத் தம்பதிகளின்
அறைபோல்
பூட்டியே கிடந்தது

நீண்ட நகங்களோடும்
மனித முகங்களோடும்
ஒரு பேய்க் கனவு இதுவென
பின்னொரு நாளிகையில்
உயிரதிர
உறக்கங் கலைத்து
எழுகையில் உணர முடிந்தது

ஆனால்
இன்றைய நிஜ வாழ்க்கையும்
இது போலவே தோன்றிற்று
ஒன்றில் பேயைப் போலவும்
மற்றொன்றில் நாயைப் போலவும்

மனிதன்தான்
வசித்துக் கொண்டிருந்தான்
வாழ்ந்தும் செத்தும்

கட்டாரிலிருந்து
ரோஷான் ஏ.ஜிப்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிப் பக்கத்துக்கு முன் பக்கம்

'யாத்ரா' அதன் நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. நான்காவது ஆண்டின் முதலாவது இதழ் இது. இந்த வருடத்துக்குள் எப்படியாவது இன்னும் இரண்டு இதழ்களை வெளிக் கொணர்ந்து விட வேண்டும் என்று முயற்சிக்கிறோம். உங்கள் ஆதரவு அதற்குத் தேவை.

'யாத்ரா' நடத்திய கவிதைப் போட்டியில் தெரிவான பத்துக் கவிதைகளும் இந்த இதழுடன் பிரசுரம் பெற்று விட்டன. பரிசளிப்பு விழா மிகுந்த விறுவிறுப்பாகவும் சிறப்பாகவும் நடந்து முடிந்தாலும் முதற் பரிசுக்காரருக்கு இந்தியாவிலிருந்து வந்து பெற்றுச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இலங்கையில் இருந்த ஒரு சிலருக்குக் கூடத் தவிர்க்க முடியாத காரணங்களால் விழாவுக்குச் சமூகந்தர முடியாது போயிற்று. பெருஞ் செலவில் விழாவை ஏற்பாடு செய்து கவிஞர்களுக்குக் கௌரவமளிக்க எண்ணிய நமக்கு இது மிகுந்த மனத் தாக்கத்தை ஏற்படுத்திருக்கிறது.

இந்த விழா வெற்றிகரமாக நடை பெறப் பலரது உழைப்பும் உதவியும் நமக்குப் பெரும் பலமாய் இருந்தது. நண்பர் மாத்தளை பீர் முகம்மது இந்தியாவில் பரிசுக் கிண்ணங்களை வடிவமைத்துத் தந்திருந்தார். டாக்டர் கவிஞர் அபூபக்கர் நூற் பொதிகளை அன்பளிப்புச் செய்திருந்தார். கவிஞர்கள் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், தாஸிம் அகமது, ஒலி, ஒளிபரப்புத் துறைசார் நண்பர்கள், பத்திரிகைத் துறை நண்பர்கள் எனப் பலரும் நமக்குப் பக்க பலமாக இருந்தார்கள். இவர்கள் அனைவரையும் 'யாத்ரா' நன்றியுடன் நினைவு கொள்ளும்.

இந்த விழாவின் பெரு வெற்றி என்னவெனில் நாடளாவிய ரீதியில் கலந்து சிறப்பித்த இலக்கிய நெஞ்சங்களின் வருகையாகும். மிகத் தூர இடங்களிலிருந்தெல்லாம் வந்து கலந்து மண்டபத்தை நிறைத்திருந்த இலக்கிய நெஞ்சங்களைப் பார்த்து ஒரு கணம் பிரமித்துப் போனோம். 'யாத்ரா' தனது வேரை ஆழ ஊன்றியிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாக அமைந்தது. தவிர இது நமக்கு மிகப் பெரும் திருப்தியையும் தந்திருக்கிறது. கலந்து கொண்டு 'யாத்ரா'வைக் கனம் பண்ணிய அனைவருக்கும் நமது ஆழ்ந்த நன்றிகள்.

இந்த இதழின் இந்தப் பக்கம் தவிர அனைத்தும் பூர்த்தி பெற்ற வேளையில் நமது இலக்கிய உலகின் முக்கியஸ்தர்கள் இருவரின் பிரிவு நிகழ்ந்திருக்கிறது. நாடறிந்த பத்திரிகையாளரும் சிறுகதையாளருமான திரு. ராஜ ஸ்ரீகாந்தன் அவர்கள் எந்த இலக்கிய முயற்சி குறித்தும் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கும் பண்பாளராக இருந்தவர். இந்த நாட்டின் மூத்த மற்றும் மிகச் சிறந்த சிறுகதையாளர் மருதூர்க் கொத்தன் அவர்கள். இவர் ஒரு மரபுக் கவிஞராகவும் திகழ்ந்தவர். இவர்கள் இருவரும் இன்று நம்முடன் இல்லை. இவர்களது மறைவினால் கவலையுற்றிருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா அனுப்புவோரில் சிலர் காசுக்கட்டளை அனுப்பும் பெயருக்கு காசோலையையும் காசோலை அனுப்பும் பெயருக்கு காசுக்கட்டளையையும் அனுப்பி வருகிறார்கள். தயவு செய்து சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளவாறு செயல்படக் கோருகிறோம்.

அடுத்த இதழ் ஃபைஸ் அஹமத் ஃபைஸ் சிறப்பிதழாக வெளிவரக் கூடிய சாத்தியங்கள் அதிகம் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிப் பக்கம்



நமது முஸ்லிம் அரசியல்

படம் - நன்றி - அல்-ஹஸனாத்

முன் அட்டை வடிவமைப்பு: ஜாபிர் எச்எம்.

ISSN 1391 - 8907

யாத்ரா

நண்பர் இலக்கியக்குழு
வாழைச்சேனை

ஆசிரியர்
அஷ்ரஃப் சிஹாப்தீன்

துணையாசிரியர்கள்
வாழைச்சேனை அமர்
ஏ.ஜி.எம். ஸதக்கா

தொடர்புகள்
YAATHRA
37, DHANKANATTA ROAD
MABOLA, WATTALA
SRI LANKA

PHONE: 011-2677857
FAX: 011-2933188
Yaathra@hotmail.com

ஆண்டுச் சந்தா :60.00
காசுக் கட்டளை அனுப்புவோர்
M.S.S.Ajwadh Ali என்ற பெயருக்கு
WATTALA தபால் கந்தோரில் மாற்றக்
கூடியதாக அனுப்ப முடியும்.
காசோலையாயின்
Ashroff Shihabdeen
என்ற பெயருக்கு அனுப்பி
வைக்கலாம்.

வாழைச்சேனை நண்பர் இலக்கியக் குழுவுக்காக. கொழும்பு 13. விவேகானந்த மேடு என்ற முகவரியில் உள்ள யூ.கே. பிரின்டர்ஸில் அச்சிடப்பட்டு, ஹைதா ரோட் வாழைச்சேனையில் வசிக்கும் ஏ.ஜி.எம்.ஸதக்காவினால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனிருந்து
உடன்
பிரிந்தோருக்கு...

கடந்து சென்ற
அந்தக் கால கட்டத்தில்
அளவு கடந்த அன்பு செலுத்தினேன்
உங்களின்பால்
கட்டுண்டு கிடந்தேன்
துளியேனும் குறையாமல் நம்பினேன்
உங்களை நான்

எனினும் நீங்கள்
என் மனதை சோக வைத்து
கண்ணீர்ப் பாலைவனத்தில்
கைவிட்டீர்கள்
எனது வாழ்க்கையை
வாழ்க்கையின் சுவையை
அளவு கடந்த மகிழ்ச்சியை
தகர்த்து எறிந்தீர்கள்

எனினும்
கடுகளவேனும் உங்களில்
கோபம் கிடையாது எனக்கு

என்றாலும்
எனது கல்லறையின் முன்பாக
சோக மலர்களை உதிர்த்து விட்டு
முதலைக் கண்ணீர் வடிக்க
உங்களை என்னால்
அழைக்க முடியாது

ஆகையினால் நான்
ஆளரவமில்லாக் காட்டுப் பகுதியில்
எவரதும் கண்களுக்கு
எட்டாத தூரத்தில்
ஒரு கற்குகையினுள்
வைத்துச் செல்வேன் என் பிணத்தை

சிங்கள மூலம்:
ஜகத் சந்தன அதிகாரி
தமிழில்:
இப்னு அஸூமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With The Best Compliments
From

SHIRAZ JEWELLERS (PVT) LTD.

Manufacturers of 22ct Gold, Silver oranaments, Cutting and Embossing dies, Machinery, Jewellers tools and Accessories

Show Room
123/ I, Sea Street,
COLOMBO - II
SRI LANKA

Tel: 075 334734, 2478973
Mobile: 0777 300298
Tel/ Fax: 0094 75 334734
E-Mail: shirazyoonus@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org